Registered No. M. 1514

# செங்குந்த மித்திரன்

19 JUL 1929

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

தொகுதி - ௩] சுக்கில வருஷம் - ஆடி மீ [பகுதி - ௭

உள்ளடக்கம்


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை .... | ௨௫௩ |
| சுகாதாரப் பகுதி : காற்று (Air) .... | ௨௫௪ |
| ஆராய்ச்சிப் பகுதி : காவினுல் மழுவெடுத்த ஞானப்பிரகாச தேசிகரும் செங்குந்தரும்... | ௨௫௭ |
| தொடர்மொழி விளக்கம் ... | ௨௫௯ |
| சிலப்பதிகாரம் ... | ௨௬௧ |
| குலாபிமானப் பகுதி : தலைச் சங்கமும் நம்து கடமையும் .... | ௨௬௨ |
| குலதிலகர் பகுதி : வெட்டவெளி சுவாமிகள். | ௨௬௫ |
| அறிவியல்பகுதி: நாம் வசிக்கும் வாயு சமுத்திரம் | ௨௬௬ |
| முதுகெலும்பு ... | ௨௬௮ |
| பொது விஷயங்கள் : உழைப்பின் சிறப்பு .... | ௨௭௦ |
| தெய்வங்களும் ஜீவவதையும் ... | ௨௭௧ |
| காவல் பகுதி : செல்வராஜன் ... | ௨௭௩ |
| சமூகப் பகுதி : தேவாங்கர் மகாநாடு ... | ௨௭௬ |
| செங்குந்தர் கிளர்ச்சி .... | ௨௮௦ |
| வர்த்தமானப் பகுதி ... | ௨௮௩ |
| தலைச்சங்கத்திற்கு வரவு ... | ௨௯௦ |
| 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம் ..... | ௨௯௨ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

கெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

விளம்பரங்கள்

## ‘செங்குந்தமித்திரன் புத்தகசாலை’

**நல்ல புத்தகங்கள் !** **நம்பிக்கையான விலைகள் !**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனக்கதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள் வைதிகநூல்கள், பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமான பதிப்புக்கள் அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்பும்போது அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியார்டர் செய்தனுப்புக. மிகுதி கிரயத்தை தபால் பாக்கிங் செலவோடு வி. பி. போஸ்டில் பத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்த மாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமானச் சிந்தையுடன் நமது ‘செங்குந்தமித்திரன் புத்தகசாலை’க்கே ஆர்டர் அனுப்பவேண்டிக்கொள்ளுகிறோம்.

ஈ. வே. சிங்காரவேலு முதலியார், பி.ஏ.,
மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
200, தம்புசெட்டித் தெரு, சென்னை.

## செங்குந்த புராணம்.

இப்புராணம் காஞ்சி மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகளால் பாடப்பெற்று தேவகாண்டம் மானவகாண்டம் என இரண்டு காண்டங்களாகவும், ஒவ்வொரு காண்டமும் பல படலங்களாகவும், கவிச்சக்கிரவர்த்தியார் ஒட்டக்கூத்தர் பாடியருளிய ஈட்டி யெழுபதை பெரும்பாலும் தழுவி சுமார் மூவாயிரம் செய்யுட்களால் முடிவடைகின்றது. நம் குலவரலாறு இன்னதென அறியாத சிறுவர் சிறுமியருங்கூட எளிதில் அறிந்துகொள்ளுமாறு தெளிவாக ஒவ்வொரு படலத்தின் ஈற்றிலும் வசனபாகமும் அமைக்குள்ளது.

இதில் குலவரலாறு, குலத்தினர் செய்த அரும்பெருஞ்செயல், குலதருமம், ஒழுக்கநெறி, குலப்பெரியார் சரிதம் ஆகியவை அடங்கியுள்ளன. ஒவ்வொரு செங்குந்த மக்களிடத்தும் ஒவ்வொரு புத்தகம் இருத்தல் இன்றியமையாதது. இவ்வரிய புராணம் காலஞ்சென்ற எனது தகப்பனார் வித்வான் ஆ. க. குமாரசாமி முதலியார் அவர்களால் பல பழம் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து அச்சுவாகனமேற்ற பலமுறை முயன்றும் பயன்படாது போயிற்று. தற்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினின்றும் வெளிவரும் நம்மித்திரன் தோன்றி உலாவி யுபதேசித்துவரும் இக்காலத்தில் பல்வேறிடங்களில் வாழும் நம்மவருக்குள்தோன்றிய ஊக்கமும் குலமுன்னேற்றத்துக்குரிய சாதனமும் வெள்ளிடைமலைபோல் விளங்கலால் தவறாது ஆதரவளிப்பார்களென்று நம்பியே எனது வைகாசிமீ 21௳ (3-6-1929) திங்கட்கிழமை யன்று திருப்பத்தூர் விக்டோரியா பிரசில் அச்சிட ஆரம்பித்திருக்கின்றது. சுமார் ஒரு வருஷத்துக்குள் முடிவுபெறும்.

நெடுநாள் நின்று நிலவக்கூடிய இதற்கு முன்பணமாக அனுப்புவோருக்கு புத்தகம் 1-க்கு ரூபா ஒன்னரையாகவும் முடிந்த பிறகு இரண்டு ரூபாயாகவும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் அவசியம் ஆதரவளிப்பீர்களென்று நம்புகின்றேன். முன்பணம் அனுப்புவோர் கீழ்க் குறித்த விலாசத்துக்கு அனுப்பவும்.

இப்படிக்கு,
A. K. முருகைய முதலியார், தமிழ்ப்பண்டிதர்,
திருப்பத்தூர் (வட ஆற்காடு)

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - ௩ | சுக்கில௵ - ஆடிமீ | பகுதி - ௭ |
|---|---|---|

144442

முருகன் துணை

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்
சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதே
அனித்தமறத் திருப்பொதுவில் விளங்குநடத் தரசே
அடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

சமூக மகாநாடுகள்.

இவ் வருஷம் தென்னிந்தியாவிலுள்ள நெசவுத்தொழிலாளர்களுக்குள்ளே பெருங் கிளர்ச்சி யேற்பட்டிருப்பதைப் பற்றி நாம் மிகவும் மகிழ்கின்றோம். செங்குந்தர் மகாநாடு வருஷ முதலில் கூடி நம் சமூகத்தின் பெருமைகளை உலகமறியச் செய்ததோடு, நமக்கு ஒரு புது கண்ணியத்தையும் மதிப்பையும் உண்டாக்கி நம்மிடையே ஓர் அரிய புத்துணர்ச்சியையும் கிளைக்கச் செய்திருக்கின்றது. சென்ற இரண்டொரு மாதங்களில் தேவாங்கர் மகாநாடொன்றும் சாலியர் மகாநாடொன்றுங்கூடி, இதர நெசவுத் தொழிலாளர் சமூகங்களிடையிலும் பெருங்கிளர்ச்சியை யுண்டாக்கியிருக்கின்றன. இம்மகாநாடுகளின் பயனாக, இச்சமூகங்களெல்லாம் முன்னேற்றப்படிகளில் மேற்சென்று, நெய்யுந் தொழிலையும் அது சம்பந்தமான வியாபாரங்களையும் புது முறைகளில் விருத்தி செய்யவும் முற்படுமென நம்புகின்றோம். மகாநாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களும் இதற்கறிகுறியாக இருக்கின்றன. இக்கிளர்ச்சிக்கெல்லாம் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் வழிகாட்டியாக இருந்தமைக்கு நாம் மிகவும் இன்புறுகின்றோம்.

### சீர்மைக்குச் செல்லல்.

தொழில் முறைகளை விருத்தி செய்வதற்கு மகாநாடுகளைக் கூட்டினால்மட்டும் போதாதென்பது எவரும் உணர்ந்ததே. அம்முறைகள் எங்கு மிகவும் மேன்மையான நிலையிலிருக்கின்றனவோ அங்கு நம்மவர்கள் சென்று அவைகளைக் கண்டு உணர்ந்து அவைகளில் பயிற்சி பெற்று அவைகளை நம் சமூகங்களிடையில் பரப்பினால் ஒழிய இத்துறையில் நாம் விருத்தியடைவது வெகு கடினம். இதற்காக நம்மவர்களில் பணக்காரர்களா யுள்ளவர்கள் நெசவுத் தொழில் விருத்தி யடைந்துள்ள மேல் நாடுகளுக்குத் தாம் சென்றோ தமது பிள்ளைகளை அனுப்பியோ புதுமுறைகளைக் கண்டறியவேண்டும்.

144442



இவ்வுண்மையைப் பின்பற்றியே திருச்செங்கோடு புள்ளிக்காரர் திரு. கந்தப்ப முதலியார் அவர்கள் (சேலம் ஜில்லா போர்டு சங்ககிரி தாலூகா போர்டு அங்கத்தினர், நமது செங்குந்தர் முதலாவது வர்த்தகர் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர்) தமது தம்பியாராகிய திரு. T. R. சுந்தர முதலியார் பி.ஏ., அவர்களை மேல்நாட்டிலுள்ள நூற்றல் நெய்தல் சம்பந்தமான கைத்தொழில் முறைகளையும் வியாபார முறைகளையும் கற்றுணர்ந்து வரும்படி இந்த வாரம் சீர்மைக்கு அனுப்பியிருக்கின்றனர். திரு. T. R. சுந்தரமுதலியாரவர்கள் சென்னை இராஜதானிக் கல்லூரியிலிருந்து இவ்வருஷம் பி.ஏ., பரீக்ஷையில் தேறியிருக்கிறார். இவர் நமது முதலாவது தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டுத் தொண்டர் படையின் உபதலைவராக இருந்தவர். அறிவாற்றலும் குலாபிமானமும் மிக்கவர். இவர் பயணம் நற்பயனளிக்குமாக.

### நமது கல்விநிதி

உபகாரச் சம்பளத்துக்காக நமது தலைச்சங்கம் சென்ற மாதம் செய்த விளம்பரத்தின் பயனாக நூற்றுக்கணக்கான மனுக்கள் உயர்தரக் கல்வியை நாடும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களிடமிருந்து வந்திருக்கின்றன. எனினும், நமது கல்விநிதி மட்டுந்தான் இன்னும் நிறைவியாகவில்லை. நமது முதலாவது மகாநாட்டில் இதற்கென வசூலிக்க முயன்றபோது தடையேற்பட்டது நம் சமூகத்தின் துர்ப்பாக்கியமே. மகாநாட்டுச் செலவுக்கு வசூலிக்க பணத்தில் மிச்சமானதும் நமது கல்விநிதிக்குச் சேராமற் போனதும் மற்றொரு துர்ப்பாக்கியமே. எனினும், நன்முயற்சிகளுக்கு இன்னல்களும் இடையூறுகளும் வருவது சகஜமென்பது எமது அநுபவமாகையால், நாம் என்றும் இம் முயற்சியில் தளராமலிருக்கவேண்டும். கல்வி நிதிக்குப் பொருள் சேகரிக்க ஒரு கூட்டமாய் புறப்படும்படித் திருவாளர்கள் காஞ்சிபுரம் மா. த. சாமிநாத முதலியார், திருவாரூர் தி. நா. சபாபதி முதலியார், கொல்லங்கோடு கு முத்துக்குமாரசாமி முதலியார், சென்னை மா. பா. கந்தசாமி முதலியார் பி.ஏ., பி.இ., முதலிய பிரமுகர்களை வேண்டிக் கொண்டிருக்கிறோம். அவர்களும் எமது வேண்டுகோளுக்கிசைந்து கூடிய சீக்கிரம் புறப்படுவதாக ஒத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் முயற்சியேனும் பலிக்குமென எதிர்பார்க்கிறோம்.

### சபாபதி வள்ளல் வெற்றி

திருவாரூர் முனிசிபல் வயிஸ் சேர்மெனும், நமது குலவள்ளலுமாகிய உயர்சைவத் திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் சென்ற மாதத்தில் நடைபெற்ற திருவாரூர் தாலுக்கா போர்டு எலக்ஷனில் தமது எதிரியைக் காட்டிலும் 105 ஓட்டுகள் அதிகமாகப்பெற்று வெற்றி எய்தினர் என்பதைக் கேட்க நாம் அடங்காத மகிழ்ச்சியுறுகிறோம்.

## சுகாதாரப் பகுதி

### காற்று (Air)

(தொகுதி 3 229-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிராணவாயு (Oxygen)

வேலைசூழ் இவ்வுலகின்கண், எல்லா மனிதர்களும், தேகவன்மையுடன் ஊக்கமாக வேலைசெய்து ஜீவித்து முன்னேற்றமடைய, காற்றில் கலந்திருக்கும் மற்றெல்லா வாயுக்களைக்காட்டிலும், இவர்களுக்கு அத்தியாவசியமானது பிராணவாயுவேயாகும். அதெங்ஙனமென்று ஆங்காங்கு எடுத்துக் காட்டுவாம். ஆகவே இதை முதலில் ஆராய்ச்சி செய்யலாயது.

சில நூற்றாண்டுகளுக்கு முன் ஜோஸப் பிரீஸ்ட்லி (Joseph Priestley) என்னும் அறிவாளி காற்றிலுள்ள பலவிதமான வாயுக்களைப்பற்றி வெகு விபரிசையாக எழுதியுள்ளார். பிராணவாயுவைத் தனியாக பரீக்ஷை செய்து அதன் குணங்களை முதல் முதலில் கண்டு பிடித்தவர் இவரே.

இவர் முயற்சி நம் சுகாதாரத்திற்குப் பிறகு அதிக பலனை கொடுத்தது. இவர் இவ்வாயுவு முயற்சி செய்யாவிடில், பொதுவாய் காற்றில் பிராணவாயு கலந்திருக்கிறதென்றும், அதை சுகாதாரத்திற்கு இன்னவிதம் உபயோகப்படுத்திக் கொள்வதென்றும்; இன்னும் இதன் , பல



வேறு அருமை பெருமைகளும் நமக்குப் புலப்படா.

இப்பிராணவாயுதான் ஜீவராசிகளுக்குப் பல விதங்களில் உபயோகமானதும் உற்சாகத்தைக் தரக் கூடியதுமானது. இதன் ஆதாரினால் தான் பிராணிகளின் உயிர் நிலைத்திருப்பது. இதன்றிய இடங்களில் மனிதர்களும் இல்லை தான். இன்னும் கட்டை, கரி, தீபம் முதலானவைகளும் இதன்றி எரியா. ஆகவே பிராணவாயு எவ்வளவு முக்கியமென்று பாருங்கள்.

இத்தகைய அரிய வாயுவைக் கண்டுபிடித்த விதம், எந்தெந்த பொருளில் இது தங்கி இருக்கிறது, இதை எவ்விதம் உற்பத்தி செய்கிறது, இதனுடைய குணகுணங்கள் எவை, எந்தெந்த உலோகங்களின்மேல் இதன் செயல் செல்லும், எவைகளின்மேல் இதன் தொழில் நடவாது, என்னும் விபரங்களைப்பற்றி கூடியவரையில் நாம் தெரிந்துகொள்வது நலமல்லவா.

பல ஆண்டுகளுக்குமுன், சில அறிவாளிகள் காற்று ஒரே வஸ்துவானால் எங்கும் ஒரே மாதிரியான செயல், குணம், முதலானவை பொருந்தி இருக்கவேண்டுமே, அங்ஙனமின்றி சுத்தமான இடங்களில் ஓர் விதமாகவும், அசுத்தமான இடங்களில் மற்றோர் விதமாகவும் இருக்க வேண்டியதென்ன? ஆங்காங்கு நடத்தும் தொழில் முதலியவைகளுக்கு ஏற்ப, மாறுதல் அடையவேண்டியதென்ன? ஆனால் பார்வைக்குமட்டும் வேறுபாடில்லை என்ன? என்னும் இத்தகையாதி பற்பல விசாரணைகளினால் காற்று ஒரே வஸ்துவல்ல, இதில் பல வாயுக்கள் கலந்திருக்கவேண்டும்; என்று யூகித்து, ஆராய்ச்சி செய்ய முயன்றனர்.

அவரவர்களுடைய புத்தி யுக்திகளுக்குத் தக்கவாறு பற்பல விதங்களுக்கு ஆராய்ச்சி செய்தனவற்றை எல்லாம் இங்கு எழுத இடந்தராததாகையால் முடிவாக ஒருவர் செய்ததை மட்டும் இங்கு ஒருவாறு எழுதலாயது.

ஒருவர் பாதரசத்தை (mercury) கண்ணாடிக் குழாய் மூலமாக காற்றடைந்த ஓர் ஜாடியில் சில கருவிகளைக்கொண்டு எரித்தார். அக்கால் பாதரசம் காற்றிலுள்ள பிராணவாயுடன் கலந்து, ஜாடிக்குள் சிவப்புநிறமான ஓர்வித வஸ்துவாய்ப் படிந்திருக்கவும், ஜாடிக்குள் முன்னிருந்த காற்று குறைந்திருக்கவும் கண்டார். ஜாடியில் குறைந்து இருந்த காற்றை பரீக்ஷை செய்கையில் அது உயிருக்கும், எரிக்கும் தொழிலுக்கும் அனுகூலமாக இருக்கவில்லை. ஆனால், சிவப்பு நிறமுடைய வஸ்துவை பிரித்துப் பரீக்ஷை செய்யுங்கால் அதில் உண்டான வஸ்து உயிருக்கும், எரிக்கும் தொழிலுக்கும் ஆதாரமாயது. ஆகையால் உயிருக்கு உதவியானதை பிராணவாயு (Oxygen) எனவும், மற்று அல்லாததை எஜோட் (Azote) அல்லது உப்பு வாயு (Nitrogen) எனவும் பெயர் விதித்தார்.

இதனால் ஜாடியிலுள்ள காற்று பார்வைக்கு வேற்றுமையின்றி இருந்தபோதிலும், பாதரசத்துவாரா இரண்டு வாயுக்கள் சேர்ந்திருந்ததைக் கண்டதுபோல, இன்னும் பல்வேறு ஆராய்ச்சிகளினால் சாமான்ய காற்றில் பல வாயுக்கள் கலந்திருப்பதைக் கண்டு பிடித்துள்ளார்.

அவ்வாயுக்களைப்பற்றியும் தனித்தனியாக வரிசைக் கிரமமாக ஒன்றின்பின் ஒன்றாக எழுதி வருவோம்.

மேற்குறித்த சிவப்பு நிறமாயபொருள் பாதரசமும், பிராணவாயுவும் கலந்த ஓர் வஸ்துவென்று ஏற்பட்டது. பிறகு இதற்கு (mercuric oxide) ரெட்பவுடர் எனப் பெயர் வழங்குகின்றது. சில வைத்திய சாஸ்திரிகள் இதில் கலந்திருக்கும் பிராணவாயு இரத்தத்தைச் சுத்தம் செய்கிறதென்று, சில வியாதிகளுக்கு உபயோகப்படுத்தி வருகின்றனர்.

சாதாரணமாக மனிதர் உடலில் சிரங்கு; தேகத்தில் அழுக்கு படிவதினாலும் இரத்தம் கெடுவதினாலும், வருகிறதென்பது தெரிந்த விஷயமே. அப்படிப்பட்டவர்கள் இந்த பவுடரை வாங்கி வெண்ணெயில் கலந்து சிரங்கு இருக்கும் இடங்களை நன்றாகக் கழுவி இந்த கலப்பைத் தடவினால் சீக்கிரத்தில் புண் ஆறிவிடுவதை அனுபோகத்தில் காணலாம்.

அங்கு என்ன நேரிடுகிறதென்றால்; இந்த கலப்பிலுள்ள பிராணவாயு, தடவின இடத்திலுள்ள அசுத்த வஸ்துக்களைப் பஸ்பம் செய்து சுத்தப்படுத்துகிறது. அங்ஙனமாகவே சிரங்கு நீங்கி தேகம் சுகமடைகின்றது. பிராணவாயு எவ்வித சுத்தத்தைக் கொடுக்கிறதென்று பாருங்கள்.

இன்னும் பற்பல ஆராய்ச்சிகளினால் பிராணவாயு காற்றிலும், நீரிலும், தேகங்களிலும், சிற்சில உலோகங்களிலும் தங்கி இருக்கிறதென்று கண்டு பிடித்துள்ளார்.

இவ்வஸ்துக்களில் பிராணவாயு இருத்தல், சுகாதாரத்திற்கு அத்தியாவசியமென்றே சர்வ

ஜீவ தயாபரர் இவற்றில் அமைத்துள்ளார். அதையும் அவைகளை ஆராய்ச்சி செய்யுங்கால் காணலாம்.

வெகு காலங்களாக பற்பல யந்திர தந்திர விடாமுயர்ச்சியினால் ரசாயன சாஸ்திரிகள் (Chemists) முடிவாக சாதாரணக் காற்றை ஜல ரூபமாகவும் அதைக் தகுந்தபடி. தர்மோஸ் ப்லாக்ஸ் (Thermos flask) போன்ற பாத்திரங்களில், கெடாதபடி வைத்திருக்கவும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஜலரூபமாய காற்றில், ஜலரூபமாய பிராணவாயுவும், உப்புவாயு மட்டுந்தான் இருக்கின்றன இதைத் தகுந்தபடி எரிக்குங்கால் ஜலரூபமாய உப்பு வாயு, சிறிது சூட்டினாலேயே சீக்கிரம் ஆவிரூபமாய மாறிப்போய் விடுகின்றது. மிகுந்திருப்பது ஜலரூபமாய பிராணவாயுதான் இதை எஃகு (Steel) ஜாடிகளில் நிரப்பி விற்பனை செய்கிறார்கள்.

இப் பிராணவாயுவை ஔஷதமாக, நுரைரால் சம்பந்தமான வியாதிகளுக்கு உபயோகப்படுத்தி, அத்தகைய வியாதிகளைச் சொஸ்தப் படுத்துகிறார்கள். அங்கும் இப்பிராணவாயு இரத்தத்தில் கலந்திருக்கும் கெட்ட வஸ்துக்களை எரித்துப்போட்டு இரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. இரத்தம் சுத்தமாகவே அவயவங்களுக்கெல்லாம் நல்ல இரத்தம் பாவுகிறது. அதன்வழி தேக அங்கங்கள் வலிவு அடைகின்றது. இவ்விதம் தேகம் சுகமடைகின்றது.

இன்னும் அதிக சூட்டினால் எரிக்கவேண்டிய சில வஸ்துகளை இதனைக்கொண்டு எரிக்கிறார்கள். பிராணவாயுவினால் சிகிச்சை செய்ய வேண்டிய சில வியாதிகளுக்கும் உபயோகப் படுத்துகிறார்கள்.

இங்ஙனமாக பிராணவாயு சுகாதாரத்திற்கு எவ்வளவு முக்கியமென்று பாருங்கள்.

பிராணவாயுக்கள் நிறைந்த சிற்சில உலோகங்களை எரிப்பதால் பிராணவாயுவைத் தனியாக எடுக்கலாமென்றாலும், இதை வெகுமுயற்சியுடன் கஷ்டப்பட்டு எடுக்க வேண்டி இருக்கிறது. அதிலும் வெகு சிறிதே கிடைக்கிறது. ஆகையால்தான் மேற்கூறிய ஜலரூபமாய் காற்றிலிருந்து பிராணவாயுவைப் பிரிக்கிறார்கள்.

இதன் குணத்தைக் கூறுங்கால் இருவகைப் படும் (1) இயல்பான குணங்கள் (Physical properties) (2) ரசாயன குணங்கள் (Chemical properties).

இந்த பிராணவாயுவிற்கு, நிறம், சுவை, வாசனை கிடையாது. இது சாதாரணமாக ஜலத்தில் கரைகிறதன்மை யுடையது. இது மிகவும் அவசியமான குணம்.

இக்குணத்தினால்தான் ஜலத்திலும் இளம்பிராணவாயு,மீன்கள் உடலில் புகுந்து அவைகளின் இரத்தத்தைச் சுத்தஞ்செய்து அவைகளைச் சுகப்படுத்துகின்றது.

மனிதர்களுக்கு அவ்விதமே அவர்கள் சுவாசத் துவார நுரையீரலின் மெல்லியசிறிய குழாய்களுக்குப் பிராணவாயு புகுகின்றது. இங்கு தான் முக்கியமாக இரத்தஞ் சுத்தமாகுமிடம் இங்கு ஜலரூபமான இரத்தத்தின் துவார உட்புறங்களிலுள்ள பல அவையவங்களுக்கும் பிராணவாயு செல்கின்றது. அங்ஙனமாகவே நாம் உட்கொள்ளும் ஆகாராதிகளையும் பஸ்பம் (Oxidise) செய்து உஷ்ணத்தையும், சக்தியையுங் கொடுக்கிறது. இவ்விதம் செய்யுங்கால் ஆங்காங்குள்ள அசுத்த பதார்த்தங்கள் அசுத்த இரத்த (venus blood)க் குழாய் மூலமாக நுரையீரல்களுக்கு வருகின்றன. இங்கு சுத்தக் காற்றிலுள்ள பிராணவாயுவினால் அசுத்தஇரத்தஞ் சுத்தமாய் சுத்த இரத்த (Arterial blood)க் குழாய் மூலமாக பிராணவாயு உடலில் பரவுகின்றது. நுரையீரலில் இரத்தம் சுத்தமாகுங்கால் கரியமலவாயு உண்டாய் நாம் வெளிவிடும் சுவாசத் துவாரம் வெளியாகிறது. காற்றில்கலக்கிறது இவ்வாயுவின் தன்மை முதலியவைகளை கரியமலவாயுவை ஆராய்ச்சி செய்யுங்கால் காணலாம்.

(தொடரும்)

மா. பாமதுநாத முதலியார்,
சானிடேரி இன்ஸ்பெக்டர்,
மயிலாப்பூர், சென்னை.

---

**அநுதாபம்.**

புத்தகரம் செங்குந்தர் சங்கத்தலைவர் திரு. கா. பாமன் முதலியார் சென்ற சித்திரை௴ 12௳ புதன்கிழமை காலை 9-30-மணிக்குச் சிவபதமடைந்ததைக் கேள்வியுற்று அவரது குமாரர் திரு. காளிமுத்து முதலியாருக்கும் அவ்வூர் சங்கத்தாருக்கும் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடையுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



## ஆராய்ச்சிப் பகுதி

### நாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாசதேசிகரும் செங்குந்தரும்

நம் செந்தமிழ் நாட்டினுக்கு முகம்போல் விளங்குவதும் ஆன்றோரால் சான்றோருடைத்தென நன்கு மதிக்கப்பெற்று வருவதுமான தொண்டை நாட்டினுக்குத் திலகம்போல் விளங்கும் காஞ்சிபுரத்தின்கண் சுமார் 550 வருஷங்களுக்கு முன் அரசு செலுத்திவந்த விஜயமார்த்தாண்டன் என்னும் மன்னவனது கொலுச்சபையில் உத்தியோகஞ் செய்து வந்தவருள் ஒரே இயற் பெயரும் முதலியார் என்னும் பட்டப்பெயரும் வாய்க்கப் பெற்றோர் இருவர் இருந்தனர். அவருள் ஒருவன் செங்குந்தன் மற்றவன் வேளாளன். இவ்விருவரில் ஒருவனை அரசன் யாதாமொரு காரியார்த்தமாக அழைப்பின், மற்றவனும், சில சமயங்களில் இருவரும் வருவார்கள். இவ்வாறே பலதடவைகளிலும் நிகழ்வதைக் கண்ட அரசன் ஒரு நாள் இருவரையும் அழைத்து உங்களில் யாராவது இயற்பெயரையேனும், சிறப்புப் பெயராகிய பட்டப் பெயரையேனும் மாற்றிக்கொள்ளுங்கள் என்று கூறினான். அதற்குச் செங்குந்தன் ''மன்னவரே! இயற்பெயரை மாற்ற யார்க்கு மியலாது. மாற்றக் கூடியது மரபைக் குறிக்கும் பட்டப்பெயரே யாகும். யான் கொண்டுள்ள முதலியார் என்னும் பட்டப்பெயரோ, மற்றைய மரபினர்க்கு இடத்தையும், தொழிலையும் பொறுத்துப் பலவாயிருத்தல் போலல்லாமல், எனது மரபினராகிய செங்குந்தர்களுக்கு எக்காலத்தும், எத்தேயத்தும், எக்காரணத்தாலும் மாறுபடாது வழங்கி வருகிறது. ஆகையால் யான் எனது முதலியார் என்னும் சிறப்புப் பெயரையும் மாற்ற இயலாது,'' என்றான். வேளாளன் அரசனை நோக்கி ''அரசே இவர் கூறியது மற்றைய மரபினருக்கும் பொருந்து மாயினும் எம்மரபினுக்குப் பொருந்தாது. எம்மரபினருக்கும் எக்காலத்தும், யாண்டும் முதலியார் என்னும் பட்டப் பெயரேதானுண்டு. ஆகையால் யானும் அதை மாற்ற இயலாது,'' என்றான்.

இது கேட்ட அரசன் தானே தீர்மானிக்கக் கூடாதவனாய் இச்சந்தேகத்தை நிவர்த்திக்கக் கூடியவர் யாவர் என வினவினான். அதற்குச் செங்குந்தன் 'அரசரேறே! திருக்கைலாய பரம்பரை மெய்கண்ட தேவர் ஆதீனத்தின்கண் சிவானுபூதிமானாய்ப் பிரசித்தி பெற்று விளங்கிய சிற்றம்பல நாடிகளின் பிரதம மாணாக்கராயும் இவ்வூரிலேயே இவர்க்கும் இவர் மரபினர்க்கும் ஞானாசிரியராயும் விளங்கும் ஞானப்பிரகாச தேசிகர் என்னும் அபிடேகத் திருநாமம் வாய்ந்த பெரியார் ஒருவர் உளர். அன்னாரைக் கொண்டு இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வியலும்'என்றான். அப்போது அரசன் வேளாளனை நோக்கி 'உமக்கு இது சம்மதமா?' வென்று கேட்க அதற்கு அவன் சம்மதித்து 'எங்கள் குருமூர்த்தியாகிய சுவாமிகள் திருவாக்கை அங்கீகரிக்காது இச்செங்குந்தர் மறுபடியும் வேறொருவரை நாடுதல் கூடாது' என்றான். செங்குந்தன் 'சுவாமிகள் தீர்மானத்திற்கு யான் கட்டுப்பட்டவனாவேன்' என உறுதிமொழி கூறினான்.

உடனே அரசன் அம்மூர்த்திகளைத் தருவித்து இச்சந்தேகத்தை நிவர்த்தி செய்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தான். தேசிகர் அரசனை நோக்கி, ''காவலனே! 'யாம் மெய்யாக்கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற' என்ற திருவள்ளுவர் திருவாய் மொழியை யான் மறக்கலாமோ? உண்மை உரைத்து உலகத்தவரை நல்லொழுக்கத்தில் நடக்குமாறு இதோபதேசம் செய்வதன்றோ எம்மைப்போன்ற உள்ளத்துறவிகளின் கடமையாகும்? ஓரஞ் சொல்லல் எமக்கு ஒருபோதும் பொருந்ாது. எமது மரபினராகிய வேளாளர்களுக்கு யாம் ஞானாசிரியராக இருத்தலினாலேயே உண்மையினின்று பிறழ்ந்து ஒருதலையாகப் பேசுதல் கூடாது''எனச் சொல்லிப் பின் வருமாறு கூறலாயினர் :

''தொன்று தொட்டுச் சான்றோர் நிறைந்து விளங்கும் தொண்டை நாட்டதிபதியே! இப்போது உண்டாயிருக்கும் இச்சந்தேகத்தைப் பலநாடுகள் சென்று சிறிது உலகானுபவமுள்ள

(4)



வர்கள் வெகு சுலபத்தில் நிவர்த்தி செய்யக் கூடும். நூல் ஆராய்ச்சியும் இதற்கு வேண்டுவதில்லை. தொண்டைநாடு, சோழநாடு, பாண்டிநாடு, கொங்குநாடு, சேரநாடு, நடுநாடு, ஈழநாடு முதலிய பல நாடுகளில் வேளாளர்களும் செங்குந்தர்களும் வசிக்கிறார்கள். இந்நாடுகளிலுள்ள வேளாளர்களுக்குத் தாங்கள் வசிக்கும் நாட்டைப் பொறுத்தும் செய்யும் தொழிலைப் பொறுத்தும் பிள்ளை, செட்டியார், கவுண்டர், உடையார், முதலியார் முதலிய பல சிறப்பு நாமங்கள் உண்டு. ஆனால் செங்குந்தர்களோ, மேற்கூறிய நாடுகளேயன்றி அவர்கள் வசிக்கும் உலகத்தின் எப்பாகத்திற் சென்று பார்த்தாலும் முதலியார் என்ற ஒரே சிறப்பு நாமத்தைத் தவிர வேறொதையும் கொண்டாரில்லவேயில்லை. செங்குந்தர்கள் காலத்தாலும், தேசத்தாலும், தொழிலாலும் இவ்விஷயத்தில் மாறுதல் அடைந்ததே கிடையாது. எல்லாவற்றிற்கும் முதல்வனாகிய சிவபெருமானது குமாரர்கள் என்ற காரணத்தால் இவர்களுக்கும் முதலியார் என்ற சிறப்பு நாமம் உண்டாயிற்று. இது உண்மை. சரஸ்வதி தேவியின் வரப்பிரசாதியும், கவிச்சக்கரவர்த்தியுமாகிய தெய்வப்புலமை ஒட்டக்கூத்த முதலியார் இவ்வுண்மையை ஆயிரத்தெட்டுத் தலைகள் கொய்து இட்ட சிங்காசனத்தின் மீதிருந்து இராஜசபையின்கண் உலகமறிய

'இந்திரன் அயன் மால் தேவர் யாவர்க்கும் முதன்மையாக
வந்த பான்மையினால் சூலமழுப்படையத்தனார்க்கு
முந்திய நாமந்தானும் முதலியார் ஆகையால் செங்
குந்தர் சந்ததிக்கு மப்பேர் முதலிய' ரென்று கூறும்.

எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஆகையால் செங்குந்தர் தமது சிறப்பு நாமத்தை எக்காரணத்தாலும் மாற்றுதல் கூடாது வேளாள மரபைக் குறிக்கும் சிறப்பு நாமங்கள் அநேகமுளவாதலின் அவர்கள் அதை மாற்றிக்கொள்ளலாம்.'' என முடிவு கூறினர்.

வேளாளன் இதைக்கேட்டுக் கடுகடுத்துச் சுவாமிகளைப் பார்த்து 'இதனை நீர் சத்தியமாகக் கூறவல்லீரோ?' எனலும் தேசிக மூர்த்திகள் 'வறிதே கூறுது எமது நாவினால் மழுவெடுத்துக் கூறுவோம்,' என்றனர்.

சுவாமிகளது சொல்லைக் கேட்ட அரசன் வியந்து 'சைவசமயாசாரியரே! எவ்விதத்திலாவது சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வது எனது கருத்தாதலின் நீர் ஒப்புக்கொண்டபடியே நாவினால் மழுவெடுத்து உண்மையைக் கூறியருளவேண்டும்' என்றனன். உடனே ஞானப்பிரகாச தேசிகர் அதற்கிசைந்து தமது சிவபூஜையை முடித்துக்கொண்டு வந்து ஒட்டக்கூத்தரைத் தியானித்து "ஐயனே பூர்வம் குலோத்துங்கச் சோழமகாராஜன் சபையில் தங்கள் மரபினரமைத்த சிரச் சிம்மாசனத்தின் மேலிருந்து 'இந்திரன் அயன்மால் தேவர்...... முதலியர் என்று கூறும்' என்று திருவாய் மலர்ந்தருளியது சத்தியமாயின், இவ்விராஜ சபையின்கண் யான் செய்யத் துணிந்த பிரமாணிக்கத்திற்கு யாதொரு இடையூறும் வாரா வண்ணம் தேவரீரே முன்னின்று காத்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்துத் தாருகா வனத்து ரிஷிகள் ஏவிய மழுவைக் கரத்திலேந்திக் கொள்ள முன்வந்த சிவபிரானைப்போல் இராஜசபையின்கண் ஓர் அக்கினி குண்டத்தில் பழுக்கக் காய்ச்சிக் கொல்லர்கள் இருமுனையிலும் குறட்டினால் பிடித்து எடுத்து நின்ற எரி இரும்பை நாவை நீட்டி எடுக்க முன் வந்தனர். அதுகண்ட அரசனும் மற்றையோரும் திடுக்கிட்டு அஞ்சி "சுவாமிகளே! தங்கள் திருவாக்கு சத்தியம் என்பதற்கு இதுவே போதிய சான்றாகும். இனி யாங்கள் பழிக்காளாகா வண்ணம் இதனோடு நிறுத்தி மன்னித்தருள வேண்டும் எனப் பிரார்த்தித்தார்கள். தேசிக மூர்த்திகள் அதற்குச் சம்மதியாது சொன்னவாறே செய்து முடிப்போம் என அம்மழுவின் எதிரே நாவை நீட்டி மழுவைத் தீண்டினர். தீண்டின மாத்திரத்தில் அது நீறுபூத் துகளாய்ப் பறந்து போயிற்று.

சபையிலிருந்த சகல ஜனங்களும் ஆச்சரியப்பட்டு ஞானப்பிரகாச தேசிகரது வாய்மையையும் வைராக்கியத்தையும் பற்றிப் பெரிதும் பாராட்டினார்கள்.

அப்பால் அரசன் சுவாமிகளுக்கு ஏராளமான சன்மானங்கள் தந்து வெகு சிறப்பாக அனுப்பி வைத்தான். அன்று முதல் இன்று வரை இம்மூர்த்திகளை யாவரும் நாவினால் மழுவெடுத்த ஞானப்பிரகாச வள்ளலார் என்ற சிறப்பு நாமத்தால் துதி செய்து வருகின்றனர். இவ்வனைத்தையும் கண்ட வேளாளர்கள் வெகு காலம் வரையில் அவரைச் சன்மானித்தலும், அவர்பால் உபதேசம் பெறுதலுமின்றி இருந்தனர். அதனால் செங்குந்தர்களே அம்மடத்துக்கு வேண்டியவற்றைச் செய்து வந்தனர்.



ஞானப்பிரகாச வள்ளலார் தம்மைச் சன்மானித்து வந்த செங்குந்த மரபினரை அபிமானித்துக் காஞ்சி குமரகோட்டத்துக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் செங்குந்தர்கள் தேவாமிசத்தினராயிருந்து நடத்திய சரித்திரங்களை திரட்டிப் பன்னீராயிரஞ் செய்யுளில் மொழிபெயர்த்தது போல் பின்னர் மானவாமிசத்தினராயிருந்து நடத்திய சரிதங்களையும் உபபுராணங்களினின்றும் திரட்டிக் குமரகோட்டத்தடிகளின் கட்டளை கொண்டே ஆறாயிரஞ் செய்யுளில் வேறொரு கந்தபுராணம் மொழிபெயர்த்ததன்றி, இம்மரபினர்க்கியல்பாயுள்ள தருமசிந்தை, தறுகணாண்மை, சத்தியநிலை முதலிய பல நற்குணங்கள் விளங்குமாறு வீர நாராயணர் விஜயம், செங்குந்த புராணம் முதலிய பல நூல்களையும் அருளிச் செய்தனர்.

## தொடர்மொழி விளக்கம்.

(மித்திரன் தொகுதி ரு. சஎஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

தகப்பன்சாமி:—இது நந்தெய்வத்தமிழ் நாட்டில் சாதாரணமாக ஒவ்வொரு இந்து குடும்பத்திலும் வழங்கப்படுந் தமிழ்த்தொடர்மொழியாமென்க. இதனை நம்மிந்து நன்மக்கள், ஒருவன் தாங்கள் சொன்ன வார்த்தையைக் கேளாமல் தான் நூதனமாக இப்படிச் செய்யவேண்டும், அப்படிச்செய்யவேண்டுமென்று தட்டழித்துப் பேசுவானாகில் (மறுத்துப் பேசுதல்), அவனை நோக்கி "என்ன! அப்பா, தகப்பன்சாமியாய் இருக்கிறாய். நான் ஒன்று சொல்கிறேன், நீ யொன்று செய்கிறாயே (சொல்கிறாயே)," என்றும்; அல்லது ஒருவனை நோக்கி இவ்விதமாக அவனைச் செய்யச்சொல், (நடந்து கொள்ளச் சொல்) என்று சொல்லியனுப்பிய விடத்து அவன் அப்படிச் செய்யவோ நடக்கவோ மறுத்தாலும், அல்லது தான் எண்ணியபடிச் செய்து கொண்டாலும் நடந்துகொண்டாலும் அவனைக் குறித்து "அவனா, தகப்பன் சாமியாச்சே, சொன்னபடி செய்வானா?" என்கின்றனர். ஆனால் இத்தகைய அரிய பொன்மொழியாகிய, இத்தொடர் மொழியின் பொருளாழத்தையுங் கருத்தையும் இது சம்பந்தமான, சரித்திரத்தையும் ஆராய்ந்தறிந்தவர் வெகு சிலரே. ஆதலின் இதனைப் பற்றியொரு சிறி தாராய்வாம்.

தகப்பன்சாமி யென்பது ஈண்டு முருகக் கடவுளைக்குறிக்கும். தகப்பன்—பிதா, ஈன்றோன் தந்தை; சாமி—ஸ்வாமி என்னும் வடசொல்லின் சிதைவு. கடவுள், குரு என்று பலபொருள்களுங் கூறுவர். ஆகவே தகப்பன்சாமி யென்பதற்கு உலகத்திலுள்ள சகல சராசர ஜீவபேதங்களனைத்தையுந் தோற்றுவித் தளிக்கும் பரமபிதாவாகிய நம் முழுமுதற் கடவுளாஞ் சிவபெருமானுக்கே (தகப்பனுக்கே) ஞானோபதேசஞ் செய்யக் குருவாக வந்தவனென்பது பொருள். அதாவது தந்தையைக் காட்டிலும் அதிகப்பட்டவன், மேம்பட்டவன் என்பது கருத்து. ஐம்முகக்கடவுளே அறுமுகக் கடவுளா யவதரித்தனர் என்பது புராண சரித்திரம். சிவன் வேறு, முருகன் வேறு அல்ல. அங்ஙனம் பேதமாய்க் கொளல் மடமையோர் கூற்றே.

> உருவம் வேறின்றியைந்து முகனறு
> முகனென் றேதந்
> திருவுரு விரண்டன் மாட்டுஞ் செறிவது
> சிவமேயன்றோ?

என்பது சுருதிப் பிரமாணம் என்றாலும் கண்ணுதற் பெருமானின் நெற்றி நாட்டத்தினின்றும் போந்த அறுபொறிகளின் வாயிலாய் முருகன் தோன்றினு னென்னும் மரபுபற்றித் தந்தையும் மகனுமாகக் கூறியதென்க. இனி முருகன் தகப்பன் சாமியான வரலாற்றைக் கூறுதும்.

சிதாபாதியான தக்கன்செய்த வேள்விக்குச் சென்றிருந்த காரணமாக நந்தி சாபமேற்ற தேவர்கள், சூரபதுமன் என்னுங் கொடுங்கோலசுரனொருவனால் மிக்க துன்புறுத்தப்பட்டுச் சிவபெருமானிடம்அபயம் புக்குத் தமது குறையிறந்து நிற்கச் சர்வஜீவ தயாபர மூர்த்தியாகிய பெருமான் தமது நுதற் கண்ணினின்றும் ஆறு பொறிகளைத் தோற்றுவித்து அதனிடமாகத் தமது அம்சமாய் விளங்கும் அறுமுகத்திளையனை நல்கினர். பின்னொரு பகலில் திருமாலாதி தேவர்கள் சிவதரிசனார்த்தம் கைலாயஞ் செல்கையில் ஆங்குக்கோபுர வாயிற்கண் திருவிளையாடல் செய்து வைகும் நங்குமாரக்கடவுளை யாவரும் வணங்கிச் செல்ல, கமலாசனனாகிய பிரமா ஒருவன்மாத்திரம் ஆணவ மேலீட்டால் சிறு பிள்ளையென்று மதித்து வணங்காது சென்றனன். அதனை யுணர்ந்த முருகர், அவர்கள் திரும்பி வருகையில் வீரவாகு தேவரை விடுத்து, பிரமனைப் பிடித்துக் கட்டி வரும்படி கட்டளையிட்டருளினர். அவர் அவ்

வாறே பிரமனைக் கொண்டுவந்து நங்குமர நாயகன் றிருமுன்பு நிறுத்த, அவர் பிரமனை நோக்கி "நீ யாவன்?" என வினவியருளினர் விதியோன் மிக நடுங்கி "நான் படைத்தற் றொழிலையுடைய பிரமன்" என்றனன். "அங்ஙனமாயின் நினக்கு வேதம் வருமோ சொல்" என்று பகவான் கேட்டலும், 'நின் தந்தை பாலமைந்துளே'னென்று மலரோன் இருக்கு வேதத்தை யாரம்பித்து முதற்கண் ஓம் என்று பிரணவத்தை யுச்சரித்த வளவிலே சர்வலோக பரமாசாரிய மூர்த்தியாகிய குமரமூர்த்தி முதலில் அப்பிரணவத்துக்குப் பொருளுரைக்குமாறு கட்டளையிட்டருளினர். கமலாசனன் திகைத்தொன்றுந் தெரியாது மயங்கி நிற்க, நாமவேற் படை நம்பி சினந்து "நமது பிரணவத்துக்குப் பொருள் தெரியாத நீயோ, படைக்குந்தொழில் புரிய வல்லாய்? நின் சிருட்டி நன்று நன்று" என்று கூறித் தன் திருக்கரங்களால் அப்பிரம்மனது நான்கு முடிகளும் குலுங்கும்படி குட்டி, வீரவாகு தேவரை யழைத்துக் கந்த வெற்பில் பிரமனைச் சிறையிடுவித்தனர். பின்னர் சிருட்டி திதி சங்காரம் என்னும் முத்தொழிலையுந் தாமே நடத்தி யருளினர். தேவ வருடங்கள் பல கழிந்தன. இச்செய்தியைத் திருமாலாதி தேவர்களால் உணர்ந்த சிவபெருமான் அயனைச்சிறைவிடுக்குமாறு கந்த வெற்பில் வரும் குமரமூர்த்தியினிடம் நந்திதேவரை விடுத்தனர். அவர் சென்று இறைவன் கட்டளையைத் தெரிவித்த மாத்திரத்தில் வெற்றி வேற்கை விமலன் வெகுண்டு நோக்க, நந்தி பயந்து பிழைத்தது போதுமென்று வந்தவழியே மீண்டு கைலாயஞ் சென்று நிகழ்ந்த மாற்றம் யாவும் நீரார்சடை நிமலனுக் கறிவித்தனர். பெருமானார் புன்முறுவல் செய்து திருமாலாதி தேவகணங்கள் சூழ விடைமீதிலமர்ந்து, கந்தகிரி யடைந்து, புதல்வரைக் கண்டு, பிரமனைச் சிறைநீக்குமாறு சொல்லியருளினர். அதற்கு அறுமுகக் கடவுள் "பிரணவத்துக்குப் பொருளறியான் படைப்புத் தொழிலை யெங்ஙனம் புரிவான்? அகங்காரங்கொண்ட அவனைச் சிறைவிடுக்க முடியாது" என மறுத்தனர். பரமசிவப் பெருமானர் வெகுள்வார்போற் கோபக்குறி காட்டி "மைந்த நின் செய்கையென்னே! நந்தியிடம் நாம் பணித்த வார்த்தையுங் கடந்தனை. நம் முறையுஞ் சிந்தையிற் கொள்ளாலை! தடுத்தெதிர் மொழிகின்றனை. இது நிற்கழகிதோ?" எனக் கூறினர்.

"மைந்தநின் செய்கை யென்னே
மலரயன் சிறைவி டென்று
நந்திநம் பணியா லேகி
நவின்றதுங் கொள்ளாய் நாமும்
வந்துரைத் திடினுங் கேளாய்
மறுத்தெதிர் மொழிந்தா யென்னர்
கந்தனை வெகுள்வான் போற்
கழறினன் கருணை வள்ளல்."

என்பது கந்தபுராணம். உடனே தந்தையார் சீற்றங்கண்டு சண்முகக் கடவுள் அயனைச் சிறைவிடுத்தனர். பின்னர் முருகனை நோக்கி "மைந்த நினக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமோ? தெரியின் அதனை எனக்குச் சொல்லக் கடவை." என்று பெருமான் திருவாய்மலர்ந்தருள, நஞ்செந்தமிழ்ப் பரமாசாரியமூர்த்தி "தந்தாய்! அப்பொருள் இவ்வளவு எளிதிலுரைக்கத் தக்கதன்று, உபதேச முறைப்படி குரு சிஷ்ய வான் முறையாய்ப் பணிவுடன் கேட்பின் அதிரகசியமாய் வலது செவியின் கண் உபதேசிக்கத் தக்கது. விருப்பமுளதேல், அம்முறையிற்பெறுக" வென்றனர். இதனைச் செவியேற்ற சிவபெருமான் 'ஏது இவன் தகப்பன் சாமியாய் இருக்கிறான்' என்று நினைத்து, அதுபடியே நன்றொன்றில் முருகன் குருவாக உயர்ந்த ஆசனத்திருக்க, விதிமுறை வழுவா திறைவன் கீழ்நின்று, கைகட்டி, வாய் பொத்தி, அருகிருந்து, தன் வலது செவியைச் சாய்த்து நல்கி, வேதவிழுப்பொருளாம் பிரணவத்தின் மெய்ப்பொருளை ஐயந்திரிபறக் கேட்டுத் தெளிந்தனர். 'அன்ற பொழுதிற்பெரிதவக்குந் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தா' யெனப் பெரிதும் மகிழ்ச்சியடைந்து முருகக்கடவுளை இருகைகளாலும் வாரித்தழுவியெடுத்தணைத் துச்சிமோந்து உளம் பூரித்துத் தன் மடித்தலத் திருத்தி "குழந்தாய்! நின் பெருந்தகையான குணத்திற்கு மெச்சினேம். முதலில் நாம் அயனைச் சிறைவிடுக்குமாறு நந்தியிடஞ் சொல்லி யனுப்பியதற்குச் சிறைவிடாமல் நந்தியையும் சிறைபடுத்துவதாகப் பயமுறுத்தி யனுப்பிவிட்டனை. பின்னர் நாமே நேரில் வந்து பங்கயனைச் சிறைவிடுமாறு பணித்தனம். அப்பொழுதும் நம் வார்த்தையைப் பொருட்படுத்தாமல் தைரியமாய் 'பிரணவத்தின் பொருளறியான் படைப்புத்தொழில் செய்வதெங்ஙனம்? அவனைச் சிறை விடுதல் முடியாது' என்று மறுத்துக்கூறி நம் சீற்றங்கண்டு



சிறைவிடுத்தனை. தவிர நாம் பிரணவத்துட் பொருளைத் தெரிவிக்குமாறு வினவியகாலத்து மறைமுதற்பொருளாங் குடிலைப்பொருளை குருசிஷ்ய முறைமையிற் கேட்டாலன்றிச் சொல்லமுடியாதென்று மறுக்கவில்லை. பிறகு அவ்வாறே நாம் விதிமுறை கேட்டுக்கொண்ட காலத்தில், அண்டபிண்ட சராசரமாதி யுலகம் யாவற்றினுக்கும், நினக்கும் தகப்பனாக விளங்கும் எனக்கே நீ குருவாக (சாமி) வீற்றிருந்து குடிலைப்பொருளை யோதினாய். ஆதலின் இன்று முதல் நினக்கு 'தகப்பன் சாமி' யென வொரு திருநாமம் வழங்குவதாக" என்றுசீர் வதித்துக் கைலை யடைந்தனர் கண்ணுதற் கடவுளென்பது புராண காதை (சரித்திரம்). ஆகவே, இத்தொடர் மொழியானது முருகக்கடவுள் சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை யுபதேசித்த காலந்தொட்டு நந்தமிழ் நாட்டில் வழங்கி வரலாயிற்றென்ப.

(தொடரும்)

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர்,
சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம், கண்டாச்சிபுரம்.

## சிலப்பதிகாரம்

(மித்திரன் ௨௬௰ம் பக்கத்தொடர்ச்சி)

அதுகண்ட கோப்பெருந்தேவி பதைபதைத்து நடுநடுங்கி அழுது கண்ணகியின் அடியைத்தொழு, கண்ணகி "உண்மையில் யானும் ஒரு பத்தினியாகில், ஒழிந்த அரசனோடு மதுரையையும் அழிப்பேன்" என்று கூறிவிட்டு நீங்கினாள். இதைச் செவியுற்ற தேவி கடுகமரித்தாள்.

அப்பால் கண்ணகி தனது வலது கையால் இடது முலையைத் திருகியெடுத்து மும்முறை மதுரையை வலம்வந்து அதைச்சுழற்றி வீதியில் விட்டெறிந்தாள். எறிந்து, "அறவோர், பசுக்கள், பத்தினிகள், மூத்தோர், குழந்தைகள் எனும்இவரைக் கைவிட்டுத் தீயோரிடம் சென்றடைக," என்று சொன்ன அளவில் மதுரை அழல் மண்டி எரிவதாயிற்று. இவ்வழலைப் பொறுக்கலாற்றாது மதுராபதித் தெய்வம் கண்ணகி முன்தோன்றி அவர்களது பழவினையைப் பற்றிக் கூற "சங்கமன் மனைவி இட்டசாபம் கிட்டியதாதலின் நீங்கள் இத்துன்பம் அடைந்தீர்கள். இன்றைக்குப் பதினாலாவது நாளின் மாலையில் நீ உன்னுடைய கணவனை வானோர் வடிவிற்கண்டு சேர்வாய்" என்று உரைத்தது.

(அன்று தொட்டுப் பாண்டியநாடு மழை வறங்கூர்ந்து வறுமை எய்தி வெப்புநோயும் குருவும் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன், நங்கைக்குப் பொற் கொல்லர் ஆயிரவரைக்கொன்று களிவேள்வியால் விழவோடு சாந்திசெய்ய, நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது.)

மதுராபதித் தெய்வம் கூறியதைக்கேட்ட கண்ணகி தன் கணவனைக்காண மேற்றிசையை நோக்கிச்சென்று, மலைநாட்டில் திருச்செங்குன்று என்னும் குன்றின்மீது ஏறி, ஒரு வேங்கைமரத்தின் நிழலில் நின்றாள். பதினாலா நாள் மாலையில் தெய்வ வடிவத்தோடு வந்த கோவலனைக் கண்டு களிப்படைந்து அவனுடன் விமானத்தில் ஏறிப்போனாள்.

இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற குறவர்கள், அப்போது மலைவளங் காணுமாறு தனது தேவியோடும் தம்பி இளங்கோவடிகளோடும் வந்த சேரன் செங்குட்டுவனிடத்தில் நிகழ்ந்ததைக் கூறினார்கள். அப்போது அரசனைக் காணுமாறு அங்கு வந்திருந்த சங்கப்புலவரான மதுரைக் காலவாணிகன் சாத்தனார் கண்ணகிக்கு உற்றதையெல்லாம் அரசனுக்கு விளங்கக்கூறினார். அதன்பின் சேரன் இமயமலையிற் சென்று கண்ணகி சிலையொன்று கொண்டு வந்து தன் தலைநகராகிய வஞ்சியில் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை பிரதிட்டை செய்தான். இதுநிற்க.

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்ட மாசாத்துவானும் அவன் மனைக்கிழத்தியும் உயிர் துறந்தார்கள். மாதரி, ஐயை முதலியவர்கள் திருச்செங்குன்றின் மீதேறிப் போன மாத்திரத்தில் கண்ணகி தெய்வ வடிவத்தோடு தோன்றி "தென்னவன் தீதிலன் தேவர்கோன்றன் கோயில் நல்விருந்த யினான் நானவன்றன் மகள்" என்று கூறியதைக் கேட்டு எல்லோரும் அதிசய முற்றார்கள்.

இவைகளை யெல்லாம் கண்ணுற்ற இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் இந்நூலைச் செய்து முடித்தார். இதிற் கண்டபடி இக்கதை இங்கு எழுதப்பட்டது. இனி, நாடகத்தில் பார்க்கிற கோவலன் கதைக்கும் இதற்குமுள்ள வேறுபாட்டைக் காண்க.

கண்ணகியை ஐந்து வயதில் கோவலன் மாலையிட்டான் என்பது நாடகம். ஆனால் கதையின் வயிலாக தக்க பருவம் அடைந்தபின்னேதான் மணம் நிகழ்ந்தது என்று அறிகிறோம். மண அறையிலேயே மாதவி ஆடல் பாடல் நிகழ்த்தி வெற்றிலைச் சுருள்கொடுத்தும் மாலையைச் சுழற்றி யெறிந்தும் கோவலனை கைவசப்படுத்தினாள் என்பதை நாடகரூபமாகக் காண்கிறோம். ஆனால் கதை நிகழ்ச்சியில் அங்ஙனம் நடைபெறவில்லை யென்பதை மேற்கூறியதை வாசித்து அறிந்துகொள்க. இடையர் குலமகளிடத்தில் தானே கண்ணகியை அடைக்கலமாக ஒப்பித்துக் கண்ணகியிடத்தில் சில அடையாளங்களும் கூறிப்போனதாக அறிகிறோம். கதையில் அங்ஙனம் வரலாறு இல்லை யென்பது தெளிவாம். அரசன் தனது அவையில் கோவலனை வரவழைத்து நியாயங் கண்டுபிடித்து கொல்லச் சொன்னதாகவும், கண்ணகி காளி ரூபங்கொண்டு அரசனிடத்தில் வந்து அவனது குடலைப் பிடுங்கி மாலையிட்டு மதுரையை எரியூட்டியதாகவும் நாடகத்தில் காண்கிறோம். உண்மை வரலாறு மாறுபடுகின்றது. அரசன் தான் நீதியில் தவறினதாகத் தெரிந்ததும் உயிர் விட்டான் என்பதாகக் கதை கூறுகின்றது. கடைசியாகக் கோவலனைக் கண்ணகி யெழுப்பியதும் மாதவியென்று நினைந்து கோவலன் கூறிய மொழிகளும் நாடகத்தில் யாம் கேட்கின்றோம். கதை நிகழ்ச்சி அங்ஙனமன்று. வஞ்சிக்காண்டத்திற் கூறப்பட்ட கதையே நாடகத்தில் நடிக்கப்படவில்லை. இதுதான் மூன்று காண்டத்திலும் முக்கியமான ஒரு காண்டமாகின்றது. இதில் இச்சிலப்பதிகாரத்தை இயற்றுவதற்குக் காரணம் கூறப்படுகின்றது.

அறிவுடையோர்கள் மேற்கூறிய வேறுபாடுகளை உணர்ந்து கொண்டு கதைக்கு முற்றும் மாறுபட்டதான இத்தகைய நாடகங்களைப் பார்த்துப் பாவம் அடையாதிருப்பார்களாக. கற்புடைய மகளிரான கண்ணகியைக் காளியாக மாற்றி நடிக்கப்படுகிற நாடகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது.

(தொடரும்)

A. S. முத்தையா முதலியார்,
கோட்டாறு.

# குலாபிமானப் பகுதி

## தலைச்சங்கமும் நமது கடமையும்.

ஆதிகாலந்தொடங்கி நாகரிகமும், செல்வமும் கல்வியும் நிலைமந்த தென்று மற்றெல்லா வுலகத்தாராலும் புகழ்ந்து கொண்டாடப்பெற்ற நமது இந்திய தேசமானது, இடையில் கொண்ட துயிலினின்றும் நீங்கிச் சமீப காலத்தில் கண் விழித்துக்கொண்டது முதல், நமது நாட்டில் பற்பல முன்னேற்ற முயற்சிகள் பற்பல சமூகத்தாராலும் நடைபெறத் தொடங்கி யிருக்கின்றன. ஒரு தேசமோ அல்லது ஒரு சனசமுகமோ (ஒரு மனிதவகுப்பு) சகல வழிகளிலும் முன்னேற்றமடைந்து சீர்பெற்று விளங்குவதற்கு அதன் கல்வியறிவே முக்கிய காரணமா யிருக்கின்றது. அத்தகைய சிறந்த நல்லறிவை நம்மக்களிடைப் பரப்பி விருத்தி செய்தற்கு இன்றியமையாச் சிறந்த சாதனங்கள் பல இருக்கின்றன. அவற்றுள் சங்கங்களும் பத்திரிகைகளுமே மிக முக்கியமானவை. இவைகளே ஒரு சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையாய் அத்தியாவசியமாய் வேண்டற்பாலனவென்பது அறிஞர்கள் பலரின்கொள்கை. எனவே இதனை நம் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சமூகமுங் கையாளத் தொடங்கிவிட்டது. ஆங்காங்குச் சங்கங்கள் கூடுவதால் ஒற்றுமை விருத்தி யடைகின்றது; பொது நலவுணர்ச்சி யுண்டாகிறது; சகோதர பாவமிகுகின்றது. கல்வியறிவு பெருகுகின்றது; கௌரவவுணர்ச்சி ஏற்படுகின்றது. இதனை யோர்ந்தே நம்மிந்தியாவிலுள்ள பார்ப்பனர்கள், வேளாளர்கள், வைசியர்கள், கருணீகர்கள், வன்னியர்கள், நாடார்கள், மருத்துவர்கள், அருந்ததியர்கள் ஆதித்திராவிடர்கள், என்று சொல்லப்பட்ட பல வகுப்பு ஜனசமூகமும், தங்கள் தங்களுக்கென பல சங்கங்களையும் பத்திரிகைகளையுந் தோற்றுவித்து முன்னேற்ற மடைந்து வருவது யாவரும் நன்குணர்ந்ததே. இன்னும் நவீனமாகப் பல சங்கங்களும் பத்திரிகைகளும் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. இது நந்தேச முன்னேற்றத்திற்கு ஓர் அறிகுறியாக மிக்க சந்தோஷத்தை விளைவிக்கின்றது. ஆனால் உலகத்திலே



கல்வியறிவு, நாகரீகம், செல்வம், தங்கள் தங்கள் ஜாதியின் முன்னேற்றம் இவைகளுக்கென ஆங்காங்குப் பற்பல சங்கங்களையும் வாசகசாலைகளையும் நிறுவிப் பல பத்திரிகைகளையுந் தோற்றுவித்து வெகு தீவிரமாக மிக முயற்சியுடன் உழைத்துவரும் இந்தக்காலத்தில் நம் செங்குந்த சமூகமொன்று மட்டில் வாளா உறங்கிக் கொண்டு மிக்க பரிதாபகரமான நிலையிலிருக்கின்றதென்பதை நோக்க ஒவ்வொரு செங்குந்தருள்ளமும் புண்படுகின்றது. என்னே நம்மவரின் உறக்கம்! அறியாமை! அசிரத்தை! இவர்களின் பண்டைப் பெருமை யெல்லாங் கனவாகிவிட்டன. முன்னை இவர்கட்குரிய பெருமையாதிய சிறப்புக்களெல்லாம் சிறுமையாய் விட்டன. புகழ்ச்சியெல்லாம் இகழ்ச்சியாய் விட்டது. ஏனென்றால், இவர்கட்குப் படிப்பில்லை, சமயவொழுக்க ஆசாரமில்லை, புலாலுண்ணல் மதுபானஞ் செய்தல் முதலிய தீயவொழுக்கங்கள் மிகுந்து, கட்சிப் பிளவுகள் பொறாமை, லோபகுணங்கள் முதலிய அதிகரித்துவிட்டன; பொது நலவுணர்ச்சி கிடையாது; வறுமை குடிகொண்டுவிட்டது. இவ்வளவு சீர்கேடான நிலையில் நம் சமூகம் தாழ்ந்துவிட்டதற்குக் கல்வியின்மையும் வறுமையுமே முக்கிய காரணம். இத்தகைய குறைபாட்டை யொழிக்கவேண்டியே, கல்வியறிவிலும், நாகரீகத்திலும், ஒழுக்கத்திலும் மேம்பாடுற்ற நங்குலத்தலைவர்கள் பலர் ஒருங்கு சேர்ந்து, நம் சமூக முன்னேற்றத்திற்காகச் சென்னையில் சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்னே "தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்" என நம்மவர்கள் சங்க மொன்றை ஸ்தாபித்திருக்கிறார்கள். இதுவே நாம் மேலே காட்டிய தலைச்சங்க மெனப்படும். இதன்கிளைச் சங்கங்களாக, அநேக கிராமங்களில் கல்வியறிவு மிக்க நங்குல மணிகளால், அநேக சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சிலவிடங்களில் வாசகசாலைகளும் புத்தக நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய புத்துணர்ச்சி நம் செங்குந்தகுல மக்களிடையுண்டாயதற்குக் காரணம் நந்தலைச் சங்கமேயாம். தவிர நம்மவர்கள் உலகானுபவத்தையும், வெளியூர் வர்த்தமானங்களையும், வெளிநாட்டுச் செய்திகளையும், இதர வகுப்பினர்களின் முற்போக்கு, கொள்கை யாதியவைகளையும் நம் குல மக்களின் கிளர்ச்சி முதலிய எல்லாவிஷயங்களையும் எளிதிலுணருமாறு "செங்குந்தமித்திரன்" என்னும் அரிய மாதப்பத்திரிகை யொன்றை நந்தலைச் சங்கத்தினின்றும் வெளியிடுகின்றார்கள். இதில் அறிவை யோம்பும் நல்ல வியாசங்களும், அழகிய கட்டுரைகளும், நங்குலதிலகர்களின் பூர்வீக சரித்திரங்களும், நம்மவர்களின் பண்டைப் பெருமையாதியனவும், அறிவை விளக்கச் செய்யும் நீதிகளும், ஆராய்ச்சிகளும், மாதர்களுக்கான ஒழுக்கங்களும், மாணவர்களுக்குரிய உபதேசங்களும், நாவல்களும், உலகியல் விவகாரங்களும், நஞ்செங்குந்தர்களின் கிளர்ச்சிகளும் வெளியாகின்றன. இச்சிறந்த பத்திரிகை யொன்றைவாங்கி வாசிப்பதினாலேயே பல பத்திரிகைகளையும் வாங்கி வாசித்ததினா லுண்டாகக்கூடிய அறிவும் உலகானுபவமும் உண்டாகின்ற தென்பதற்கு எட்டுணையுமைய மின்று. ஆகையால் ஒவ்வொரு செங்குந்தரும், (பெண்மணிகளும்) இதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து நம் "செங்குந்தமித்திரனை" வரவழைத்து வாசித்துப் பயனடையுமாறு நான் உங்களை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். பத்திரிகை படித்தல் நம்மவர்களுக்கு இன்னும் நூதனமாகவே தோன்றுவதால் அவர்களுக்கு அது அனாவசியமெனத் தோன்றுகிறது. பத்திரிகை படித்தல் வீண்காலப்போக்கு எனச் சிலர்கருதுகின்றனர். பொய்யும் புளுகும் கொட்டியளப்பதே பத்திரிகையின் வேலை என்று சிலர் எண்ணுகிறார்கள்.

'சென்னையிலுள்ள சிலர் மட்டில் லாபமடைவதற்கு நாம் ஏன் பணங்கொடுக்கவேண்டு'மென்கிறார்கள் பலர். நமது மித்திரனால் லாபமடைவார் ஒருவருமில்லை. அதனால் ஏதாவது லாபம் உண்டாகுமானால் அப்பணம் நமது குல ஏழைமாணவர்களுக்கே உபயோகிக்கப்பெறும். உண்மையில் பத்திரிகைகள், படிப்பவரைமாட்சியுறச் செய்யுமென்பதில் எட்டுணையுஞ் சந்தேகமில்லை. பத்திரிகைகளின் பிரயோஜனமும் அவற்றி னுண்மைக் கூற்றும் நம்மனோருள்ளங்களில் இன்னும் பதியவில்லை. சொற்பச் செலவில் பல அரிய விஷயங்களும், வர்த்தமானங்களும், வெளிநாட்டு விவகாரங்களும், செய்திகளும் பத்திரிகை வாயிலாய் எளிதிலறியக் கிடக்கின்றன. பத்திரிகைகள் எல்லாம் மக்கள் முன்னேற்றங் கருதியே வெளியிடப்படுகின்றன. அவற்றில் வியாபார நோக்கங்களும் வர்த்தமானங்களும் இன்னும் பல விஷயங்களும் வெளியாகின்றன. பலதிறப்பட்ட முக்கிய விஷயங்களைத் தெரிவித்து மக்கள் அறிவைப் பெருக்குவதில் பத்திரிகைக்கு நிகராக வேறெதையும் ஒப்பிடமுடியாது. பத்திரிகை யென்பது பவர் அறிவினின்றும் போதரும் அரும்பொருள்களை

வொருங்கே படக்கியுள்ள வோர் பொக்கிஷம் போன்றது "பத்திரிகை படியாதவன் பாதி மனிதன்" என்பது பழமொழி. ஆகலால் ஒவ்வொருவரும் மித்திரனை வாவேற்று அவசியம் ஆதரிக்க வேண்டியது நம் செங்குந்த நேயர்களின் முக்கிய கடமையாகும். சென்னையில் ஸ்தாபித்துள்ள நந்தலைச் சங்கத்தின் முக்கிய நோக்கமானது நம் வகுப்பினர்களைப் பல வழிகளிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமென்பதே. அதற்கு அடிப்படையாயுள்ளது கல்வியே. கல்வியில் பிற்போக்குடையது நம் சமூகமொன்றுதான் 'கல்வியே கருந்தனம்" என்னும் பொன்மொழியை நம்மவர்கள் காதிற் கேட்டிலே போலும் "வித்தை விரும்பு" என்னும் ஒளவையார் அமுதமொழியை இவர்கள் அறிந்திலர் என்றுதான் நாம் சொல்லவேண்டும். நம்மவர்களில் நூற்றுக்கிரண்டுபெயர்தான் படித்தவர்கள் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலத்திலோ! அந்த வெட்கக் கேட்டை எவருக்கும் சொல்ல வேண்டுவதில்லை. ஆறு லக்ஷம் ஜனத்தொகையுள்ள செங்குந்தர்களிலே முப்பத்தாறு பேர்கள்தான் ஆங்கிலங்கற்றுப் பட்டதாரிகள் என்று பெயர் வாங்கியிருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு செங்குந்தரும் தத்தம் பிள்ளைகளை உயர்தரக் கல்வி வரையில் படிக்க வைக்க வேண்டியது அவசியம். இன்றேல் கீழ்தரக் கல்வியில் 4, 5 வகுப்பு வரையிலாவது கட்டாயம் வாசிக்க வைக்க வேண்டியது அத்தியாவசியம். தற்காலம் உயர்தரக்கல்வியே நம் சமூகத்திற்கு அவசியம் வேண்டற்பாலது. ஆனால் ஏழையாயிருப்பவர்கள் என் செய்வது? வயிற்று ஜீவனத்துக்கே கஷ்டமாயிருக்கிறதே என்றீரோ, அதற்காகத்தான், நந்தலைச் சங்கத்தில் "செங்குந்தர் மாணவர் விடுதி" யென ஒரு வசதி (Hostel) ஏற்படுத்தி அதில் நம் ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு நம் சங்க நிதியிலிருந்து உண்டி உடை முதலியன வசதி, இலவசச் சம்பளங்கொடுத்து உயர்தரக் கல்வியைப் பயிற்றுவிக்கிறார்கள். கீழ்தரக் கல்வியுங்கூட பயிற்றுவிக்க முடியாத ஏழைக் குடும்ப மாணவர்களுக்கு அவர்கள் விரும்பியவாறு எந்த ஜில்லாவில் எந்தப் பள்ளிக்கூடத்திலேனும் படித்துக்கொள்ளப் பணங்கொடுத்துதவி செய்கிறார்கள். தவிர, பிரசாரகர்களை ஏற்படுத்தி ஜில்லாக்கள்தோறும் சென்று நற்குல முன்னேற்றம், நம்மக்களின் கல்வி விருத்தி, சங்கங்களின் நன்மையாதியவைகளைப் பற்றி பிரசங்க வாயிலாக நல்லறிவு புகட்டுகின்றனர். இவ்விதமாகக் கல்வியை நம்மவர்களிடைப் பரப்புதற்கு ஒரு பெருநிதி யொன்று நம் சங்கத்திற்குத் தேவையென்பது கல்வியுடைப் பெருமக்கள் பலரின் கொள்கை. அதற்காகவே சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற நம் மகாநாட்டு தீர்மானப்படி நந்தலைச் சங்கத்தார் "செங்குந்தர்களின் கல்வி நிதிக்காக "லாட்ரிச்சீட்டு" என்னும் ஓர் அதிர்ஷ்டச்சீட்டை ஆரம்பித்திருக்கிறார்கள். அது சீட்டு ஒன்றுக்கு எட்டணாவாக இரண்டு லக்ஷம் சீட்டுகள் கொண்டது. அதில் 2579 சீட்டுகளுக்குப் பிரைஸ் (இனம்) உண்டு. சீட்டு வாங்கும் நபர்களுக்கு 5000 ரூபா முதல் 3 ரூபா வரையில் அதிர்ஷ்டம் போல் இனம் கிடைக்கும். ஆகையால் ஏழைச் செங்குந்தர்களின் கல்வி யபிவிருத்திக்காக அரை ரூபாய் தர்மம் செய்தோம் என்று எண்ணிக்கொண்டாவது ஒவ்வொரு செங்குந்தரும் இந்தச் சீட்டை வாங்கியாதரிக்க வேண்டுவது மிக்க அவசியமுங் கடமையுமாமென்க. இந்தக் கல்விநிதிச் சீட்டு இறைவனருளால் செவ்வனே நடைபெறுமேயானால் நம் கல்விநிதிக்கு 60,000 அறுபதினாயிரம் ரூபாய் மூலதனம் ஏற்படுமென்று கருதப்படுகிறது. தவிர இந்நிதியை நம்மவர்கள் ஆங்காங்கு மகிமை ஏற்படுத்தல், உண்டி வசூலித்தல், சடங்குகளில் கட்டணம் செலுத்தல், வர்ப்பொது பணங்களில் பாக மீதல், நன்கொடையளித்தல் முதலிய ஏற்பாடுகளால் நன்கு ஆதரிக்கவேண்டும். இவற்றை ஒவ்வொரு செங்குந்தரும் தம்தம் கடமையாய்க் கொளுதல் வேண்டும். செங்குந்தகுல சீமான்களே! சீமாட்டிகளே! சகோதர சகோதரிகளே! நம் சங்கத்தையும் 'மித்திரனையும் ஆதரிக்க முன் வாருங்கள்' நம்குலப் பிள்ளைகளின் கல்வி யபிவிருத்தியைக் கோருங்கள் நம்மக்களை உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்யுங்கள். நம் சங்கத்தின் கல்வி நிதிச் சீட்டை யாதரியுங்கள். நம்குல முன்னேற்றத்திற்காகப் பாடுபடுங்கள். உங்களுக்கு எல்லா நலனும் சித்திக்கும். இதற்கு எல்லாம் வல்ல நம் முருகப்பெருமான் திருவருள் துணை புரிவதாக. சுபம்.

வை. ச. இராமலிங்க முதலியார்,

துணைத்தலைவர்,

சைவசித்தாந்த செங்குந்த சமாஜம், கண்டாச்சிபுரம்.



# குலதிலகர் பகுதி

## வெட்டவெளி சுவாமிகள்

வெட்டவெளி சுவாமிகள் என்ற செங்குந்தப் பெரியார் நிலமகட்கு முகாரவிந்தம் போன்ற சோழவள நாட்டிலே சைவ சமயாசாரியர் மூவராலும் தேவாரப் பதிகங்கள் ஓதப்பெற்ற திருநாகேஸ்வரம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஏறக்குறைய 80 வருஷங்களுக்கு முன் இருந்தவர். அவர் வெட்டவெளி என்னும் ஊரில் பிறந்து வளர்ந்து கல்வி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய ஒரு வீரசைவர். சிவபெருமானிடத்து இடைபறாத அன்பு பூண்டு இல்லறத்தை வழுவாது நடத்தி வந்தார். அவருக்கு இரண்டொரு புத்திரர்களுமிருந்தனர். மூப்புப் பருவம் தொடங்கிய போது அவரது நேத்திரங்கள் பூர்வகன்மப் பயனால் அபாவமாயின. ஆகவே நாளடைவில் அவரது புத்திரர்களும் மனைவியாரும் வெறுப்புற்று அவரை அலக்ஷியஞ்செய்ய ஆரம்பித்தனர். சுவாமிகள் அது கண்டு இனி இவர்களோடு இருப்பது சரியல்லவென எண்ணிக் கோலூன்றி வழி வினவிக்கொண்டே தமது ஆத்மார்த்த க்ஷேத்திரமாகிய திருநாகேஸ்வரத்தை அடைந்து ஸ்ரீகுன்றுமுலையம்மை சமேதராகிய ஸ்ரீநாகநாதசுவாமியின் சந்நிதியை அணுகித் தம் குறையை எடுத்துரைத்து அத்தலத்தின் மேலவீதியில் எழுந்தருளியிருந்து பாடசாலை ஒன்று ஏற்படுத்திச் சிறுவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்து வருவாராயினர்.

இவ்வாறிருந்துவரு நாளில் கண்கள் பார்வையின்றி யிருப்பது அவருக்குப் பெருந்துன்பமாகத் தோன்றியபடியால், "சிவ சந்நிதானத்தில் செய்த சத்திய வாக்கினின்று பிறழ்ந்து கண்பார்வை யிழந்த சைவசமயாசாரியருள் ஒருவராகிய ஆளுடைய நம்பிகளுக்கு மறுபடியும் அவரது வேண்டுகோளுக்கிணங்கி சிவபெருமான் பார்வை தந்தருளியது உண்மையன்றோ? தந்தை அன்பினும் தாயன்பே மிகுந்ததாகையால் சர்வ லோகங்களையும் ஈன்றெடுத்த தாயாகிய குன்றுமுலையம்மையிடஞ் சென்று என் குறையைக் கூறிப் பாமாலை புனைந்து அம்மையாரது திருவடியில் சமர்ப்பித்து வேண்டிக்கொள்வேன்" எனத் தீர்மானித்து 'குன்றுமாமுலையம்மை தோத்திரம்' என்னும் 30 செய்யுட்கள் அடங்கிய ஒரு பாமாலை யியற்றி அம்மையார் திருமுன்னர் அதனை அரங்கேற்றுவித்தனர். அரங்கேற்றம் பூர்த்தியானதும், சர்வ பரிபூரணியும் ஜகன்மாதாவுமாகிய ஸ்ரீகுன்றுமுலையம்மையார் கிருபாகடாக்ஷத்தால் அனைவரும் ஆச்சரியப்படும்படி சுவாமிகள் கண்ணொளி விளங்கப்பெற்றனர். அந்நூலின் இருபத்தோராவது செய்யுள் பின்வருமாறு:

**நேத்திரம் தெரியப் பாடியது.**

காழியில் ஞானப் பாலமு தளித்தாய்
கச்சியி னல்லறம் வளர்த்தாய்
வாழியென் றேத்து மன்பர்த முளத்தாய்
மன்பதைக் கருள்செறி மனத்தா
யூழிவெவ் வினையை வேரறக் களைந்து
மொளிவிழி தெரிய வைத்திலை
யாழிமால் பரவுங் குன்றுமா முலையே
யடியனேழற் கருள்புரி வாயே.

கண் பெற்றவுடனே சுவாமிகள் அடைந்த ஆனந்தம் என்னால் கூறற்பாலதோ? குன்றுமுலையம்மையைக் கண்ணுறக் கண்டு தரிசித்து ஆனந்தக்கூத்தாடிப் பரமானந்த வேலையில் மூழ்கினார். பின்னர் அத்தலத்திலேயே சின்னாள் வாசஞ் செய்திருந்து சமாதியாயினர். சுவாமிகளது தெய்வீகத்தையும் சிவ பக்தியையும் கண்ட அத்தலவாசிகள் அனைவரும் அவரது இயற்பெயரைக் கூறாது வெட்டவெளி என்னும் ஊரிலிருந்து வந்த காரணத்தால் வெட்டவெளி சுவாமிகள் என வழங்கலாயினர்.

இத்தோத்திரப் பாமாலை 1907ஆ திருச்சி ஜில்லா துறையூர் மடாலயத்து ஆதீன வித்வானாகிய சிதம்பரம் வ. வசவலிங்க புராணிகர் அவர்களால் பார்வையிடப்பட்டுத் திருநாகேஸ்வரம் சதி. சொக்கலிங்க செட்டியாரால் அச்சிடப் பெற்றுள்ளது.

திருநாகேஸ்வரம் கா. வ. சோமசுந்தர முதலியார்
மாணாக்கர் சோதிடம் ப. சிதம்பர முதலியார்,
ஜவர்பாடி.

# அறிவியல் பகுதி

## நாம் வசிக்கும் வாயு சமுத்திரம்.

விண்வீழ்க்கொள்ளிகள் வாயுமண்டலத்தின் உயரத்தைக் கண்டு பிடிப்பதில் உபயோகப்படுமென்று வெகுகாலம் வரையில் யாருக்கும் தெரியாமலே இருந்தது. வானத்திலிருந்து நக்ஷத்திரங்களைப்போல்எரிந்துகொண்டே கொஞ்சதூரம் கீழ்நோக்கிச் சென்று பிறகு மறைந்து போவதை நாம் ஒவ்வொரு சமயத்தில் பார்க்கிறோம். நிலவின்றி நக்ஷத்திரங்கள் மாத்திரம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் இத்தகைய ஒளிப்பொருள்கள் இரண்டொன்று வானத்திலிருந்து விழுகின்றன ஆகஸ்ட்டு௴ 9உ இரவிலும் நவம்பர்௴ 13உ இரவிலும் 20 நிமிஷங்களுக்கொருமுறை இவ்வெரி நக்ஷத்திரங்கள் விழுகின்றன. இவை உண்மையில் நக்ஷத்திரங்கள் அல்ல; ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்து காற்றிலுள்ள பிராணவாயுவோடு தாக்குண்டு தீப்பற்றிப் பிரகாசம் பெறும் கற்கள் அல்லது உலோகக் கட்டிகளேயாம். அளவிறந்த இத்தகைய உலோகக்கட்டிகள் சூரியனைச் சுற்றிச்சுற்றி வந்துகொண்டேயிருக்கின்றன. வருஷத்துக்கொருமுறைபாக சூரியமண்டலத்தைச் சுற்றிவரும் நமது பூமியானது அநேகமாய் ஆகஸ்ட்டு நவம்பர் மாதங்களில் அவற்றைக் குறுக்கிட நேருகிறது. அப்போது அவை பூமியின் கிராகிய சக்தியால் இழுக்கப்பட்டு பூமியை நோக்கி அதிவேகமாய் அதாவது வெண்ணிற நெருப்புமய மாகும்படி அவ்வளவு வேகமாய் ஒளிவீசிக்கொண்டு ஓடிவந்து கடைசியில் தூளாய்ச் சிதருண்டு மறைந்துபோகின்றன. அவற்றுள் சில பெருங்கற்களாகவும் பூமியில் விழுந்து வருகிற வேகத்தினால் பூமியைக் கொஞ்சம் துளைத்துச் சென்றும் பூமியோடு படிந்துவிடுகின்றன. மற்றுஞ் சில சிறுகற்களாக உடைந்து பூமியில் விழுகின்றன. இக்கற்கள் சென்னை பெங்களூர் முதலிய நகரங்களில் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டுள்ள விநோதப் பொருட்காட்சிச் சாலை (Museum)களிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை தகரம், இரும்பு, கெந்தகம், அக்கினிப்பாஷாணம் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த விண்வீழ்க்கொள்ளிகள் எரிந்துகொண்டே வீழ்கையில் நமக்கு அவை நக்ஷத்திரங்கள் வீழ்வதைப்போலவே தோன்றுகின்றன. இவற்றின் ஒரு பாகமாகிய பிராணவாயுவின் சேர்க்கையால்தான் அவை எரிகின்றன. ஆகையால் விண்வீழ்க் கொள்ளிகள் பூமியை நோக்கி வெகுதூரத்திலிருந்து வருகின்றனவாயினும் அவை எரிய ஆரம்பிப்பது வாயுமண்டலத்தில் புகுந்து கொஞ்சதூரம்வந்த பிறகேயாகும். இருவர் ஒருவருக்கொருவர் சுமார் 50 மைல் தூரத்தில்நின்று அவைவிழும் போது நோக்குவாராயின் இவர்கள் நிற்கும் இடங்களுக்கு மத்தியில்ஒரு கோணம்வரைந்து அதனால் அவர்கள் இருக்குமிடத்திலிருந்து விண்வீழ்க்கொள்ளிகளை முதலில் பார்த்தஇடம் எவ்வளவு உயரத்திலிருக்கிறதென்று கண்டு பிடிக்கலாம். இவ்விதமாக விண்வீழ்க் கொள்ளிகள் பூமியிலிருந்து சுமார் 100 மைல்களுக்கு மேலேதான் எரிய ஆரம்பிக்கிறது. ஆகையால் நாம் வசிக்கும் வாயுசமுத்திரம் சுமார் 150 மைல் உயரமிருக்கவேண்டும்.

இனி அடுத்தபடியாக நமது வாயுசமுத்திரம் எவ்வளவு பளுவுள்ள தென்பதைபற்றிக் கவனிப்போம். காற்றானது மேலே போகப்போக இலேசானதாக இருந்தாலும், பூமிக்கருகில் மிகப் பளுவாகத்தா னிருக்கிறது. சமுத்திர மட்டத்திலிருக்கும் நிலத்தில் ஒரு சதுர அங்குல இடத்தில் காற்று 15 வீசை பளுவுள்ளதாயிருக்கிறது. தரையிலிருக்கும் ஒவ்வொரு பொருளுஞ் சதுர அங்குலத்திற்கு 15 வீசையாக அப்பொருளின் அளவுக்குத் தகுந்த பளுவுள்ள காற்றினால் அழுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தப் பொருளையும் நாம் எடுக்கும் போது அது பளுவுள்ள வேறொரு வஸ்துவால் அழுத்தப்பட்டிருப்பதாக தோன்றவேயில்லை. வெகு சுலபமாக எடுக்கிறோம். அவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் யாது?

இது ஒரு நுட்பமான விஷயம். அறிவியல் நூல் பழக்கமில்லாதவர்கள் இதைக்கூர்ந்து கவனிக்கவேண்டும். முதலாவதாக காற்று பூமியினிடத்திலுள்ள கிராகிய சக்தியால் இழுக்கப்



படுவதனால் பளுவாயிருக்கிற தென்பதையும் இரண்டாவதாகக் காற்றின் அணுக்கள் இயற்கையாக அசையுந் தன்மை யுடையனவாகையால் பூமியின் கிராகிய சக்தியை எதிர்த்துத் தப்பித்துக்கொண்டுபோக முயன்றுகொண்டேயிருக்கின்றன வென்பதையும், நாம் கவனம் வைத்துக்கொள்ளவேண்டும். ஆகவே காற்று எந்த இடத்திலும் பூமியினால் இழுக்கப்படுவதோடு மேற்பக்கத்திலும் எதிர்தது நெட்டிக் கொண்டேயிருக்கிறது. அதனாற்றான் தரையில் கிடக்கும் ஒரு கடிதாசியைச் சுலபமாக எடுக்க இயலுகிறது. அஃதேனெனில் கடிதாசிக்கு மேல கீழ் முதலிய எல்லாப் பக்கங்களிலும் காற்றின் நெருக்கம் ஒரே மாதிரியாயிருக்கிறது

அதே கடிதாசியைச் சமமாக இருக்கும் ஒரு பலகையின்மேல் வைத்தாலுங் கூட அதைச் சுலபமாக எடுத்துவிடலாம். ஏனெனில் அக் கடுதாசியின் அடிப்புறத்திலும் (மேலே செல்ல எதிர்க்கும்) காற்று இருக்கிறது. கடிதாசியின் கீழ்ப்பககத்திலுள்ள காற்றை எடுத்துவிடுவோமாயின் அப்போது காற்றின் பளுவை நாம் நன்கு அறிவோம். இதை நாம் சுலபமாகச் செயபலாம். அதே கடுதாசித்துண்டை நீரில் நனைத்து அதே பலகையின்மேல் போடுவோமாயின் கடிதாசியின் அடிப்புறத்திலுள்ள நீர் கடிதாசிக்கும் பலகைக்கும் மததியில் நின்று காற்றை அங்கு நுழையவொட்டாது தடுக்கிறது. இப்போது கடிதாசியின் அடிப்பாகத்தில் காற்று இல்லாதிருக்கிறபடியால் மேல் பக்கத்தில் மாத்திரம் அது இருந்து தன் முழுபளுவாலும் அதை அழுத்துகிறது. ஆகையால் இப்போது அககடுதாசியின் மத்தியில் ஒரு சிறு துவாரம் செய்து அதில் நூல்கட்டி கடிதாசியை எடுக்க முயலுவோமாயின் அது சுலபத்தில் வராது.

பாறைகளில் ஒட்டிக் கொண் டிருக்கும் limpets எடுப்பதென்றால் எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது பாருங்கள். அச்சிறு ஜெந்துக்கள் தங்கள் உடலிலுள்ள காற்றைப் பூராவும் வெளியாக்கி விடுகின்றன வாகையால் உள்ளிருந்து மேலே நெருக்கக்கூடிய காற்றின்றி மேலேயுள்ள காற்றின் பளுவால் அழுத்தப்பட்டு பாறையோடு ஒட்டிக்கொள்ளுகின்றன.

ஒரு சதுர அங்குலத்திற்கு 15 வீசை பளுவாக ஒரு வளர்ந்த மனிதனது தேகமானது சுமார் 15 டன் பளுவுள்ள காற்றைச் சுமக்க வேண்டியிருக்கிறது. அது உண்மையானால் அப்பெரும்பாரத்தைத் தாங்கும் நாம் நசுக்கப் பட்டல்லவோ போகவேண்டும். அவ்வாறு நிகழாதிருப்பதற்குக் காரணம் என்னவென்று அநேகர் ஆச்சரியப்படக்கூடும். நமது ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கக்கூடிய இது ஒருஆச்சரியமாகாது. நம்மைப் போன்ற சிற்றறிவுடைய உயிர்களுக்கு ஒரு வகையில் அத்தியாவசியமானவையும் மற்றொரு வகையில் அவற்றை அடியோடு அழிக்கவல்லவையுமான பொருள்களை உண்டாக்கி அவற்றால் ஆபத்துண்டாகாதபடி அவற்றின் வேகத்தைத் தடுக்கும் மாற்றுக்களை உண்டாக்கி நம்மை காத்து ரக்ஷிக்கும் கருணைக் கடலாகிய இறைவனது இயற்கையான அகண்ட அறிவையும், ஆற்றலையும் காருண்யத்தையும் காட்டும், அவரது அற்புத பஞ்சகிர்த்தியங்களே ஆச்சரியப்படக்கூடியவையாகும். நமது உடம்பில் பலவித வாயுக்களும் திரவப் பொருள்களுமிருந்து நெருக்கி தேகத்தின் வெளியேயுள்ள காற்றை எதிர்த்து நிற்கின்றன. அதனாற்றான் நாம் பளுவை உணர்வதில்லை. இல்லையேல் வெளிக்காற்றின் பளுவால் கட்டாயம் நசுக்குண்டு போவோமென்பதிற் சந்தேகமே யில்லை.

புகைக்கூட்டில் மேலே சென்ற க்ளெய்ஷேர் என்பவரது ரத்த நாளங்கள் வீங்கி மூர்ச்சையடைந்ததற்கும் இதுதான் காரணம். மேலேயுள்ளகாற்று நெருக்கமாயில்லாமையால் அவர் உடம்பினுள்ளிருந்த வாயுக்களும் திரவப் பொருள்களும் வழக்கப்படி வெளியே செல்ல நெருக்க அங்குள்ள (மேலேயுள்ள) வெளிக் காற்று அதற்குச் சமமாக நெருக்காதபடியால் அவரது தேகத்தின் இயற்கை நிலை குலைய ஆரம்பித்தது. இப்போது காற்று தன் பளுவால் பூமியின்மேல் எவ்வளவு நெருக்குகிறதென்றும் அது இயற்கையாக அசையும்பொருளானபடியால் அதற்குச் சமமாக மேல் பக்கத்திலும் நெருக்குகிறதென்றும், நாம் ஒருவாறு அறிந்துகொண்டோம். இதை மற்றொரு சுலபமான உதாரணத்தைக்கொண்டு விளக்கலாம். ஒரு தம்ளரை எடுத்து அதில் நீரை நிரம்ப வார்த்து அதன் வாயை ஒரு தடித்த கடிதாசி அல்லது அட்டைத் துண்டால்மூடி அதைக் கையினால் அழுத்திப் பிடித்துக்கொண்டு தலைகீழாக கவிழ்த்துப் பிறகு அழுத்திக்கொண்டிருந்த கையை எடுத்துவிட்டு என்ன நேருகிறதென்று

பார்ப்போம். சாதாரணமாய் கடிதாசி கீழே விழுந்து தம்ளரிலுள்ள நீர் முழுதும் கீழே சிந்திப் போகுமென்றே எண்ணுவோம். ஆனால் அவ்வாறு நிகழ்வதில்லை. அட்டை தம்ளரில் கோந்தினால் ஒட்டிவைத்தது போலிருக்கிறது. ஏனெனில் வெளிக்காற்று கடிதாசி அட்டையை நெருக்குவதால் அது வீழாது நிற்கிறது. வெளிக்காற்றின் நெருக்கத்தை எதிர்க்க உட்பக்கத்தில் காற்றில்லை.

மறுபடியும் இதை மற்றொரு விதமாகப் பரீக்ஷித்துப் பார்ப்போம். அதாவது குதிரை லாடம்போன்ற ஒரு கண்ணாடிக் குழாவை எடுத்து அதிற் பாதியளவு நீரை வார்ப்போமாயின் அக்குழாவின் இருபக்கத்திலும் நீர் ஒரே மட்டத்தில் நிற்கக் காண்போம். ஏனெனில் குழாவின் இருபாகங்களிலும் காற்று நெருக்கம் (air pressure) ஒரே மாதிரியா யிருக்கிறது. பின்னர் குழாவின் ஒருவாயைப் பெருவிரலால் மூடிக்கொண்டு அப்பாகத்தில் எல்லா நீரும் வரும்படியாகக் குழாவைச் சாய்த்து மறுபடியும் பெருவிரலால் மூடியபடியே அதைப் பழைய நிலையில் வைப்போமாயின் நீர்மாத்திரம் பழையபடி சமமான நிலைக்கு வருவதில்லை. பெருவிரலால் மூடிய பாகத்திலேயே நிற்கும் இதற்குக் காரணம் யாது? மூடப்பட்ட பாகத்தில் பெருவிரல் தடுத்துக் கொண்டிருக்கிறபடியால் காற்று அப்பக்கம் சென்று நீரை நெருக்க முடியவில்லை. ஆனால் மற்றொரு பாகத்தில் காற்றானது தனது முழுபளுவாலும் அழுத்துகிறது.

இவற்றால் நாம் காற்றின் பளுவைமாத்திரமேயன்றி காற்று செய்யும் வேலையையும் கண்கூடாகக் காண்கிறோம். பலகையின்மேல் நனைத்துப்போட்ட கடிதாசியால் காற்றின் பளுவையும் கடைசியாக்காட்டிய பரீக்ஷையால் அதன் வேலையையும் கண்டோம்.

அடுத்த வியாசத்தில் காற்றின் பளுவு அல்லது நெருக்கத்தை அளக்கும் பரோமீடர் என்னும் கருவியைப்பற்றி ஆராய்வோம்.

மா. அ. கனகசபை முதலியார்,

---

ஒவ்வொரு வருஷமும இந்தியாவில் எழுபதுகோடி மணங்கு உப்பு செலவாகிறது.

*  *  *

அமெரிக்காவிலுள்ள ஓர் ஆட்டிலிருந்து 25பவுண்டு கம்பளமயிர் எடுக்கப்பட்டது. இவ்வளவு அதிகமான மயிர் எந்த ஆட்டினின்றும் எடுக்கப்பட்டதில்லையாம்.

## முதுகெலும்பு.

ஒன்று விகடன் தன்னுடைய நஞ்சான் குஞ்சான்களுக்கு முதுகெலும்மைப் பற்றிக் கூற வெளி வந்துளான். முதுகெலும்பென்றால் நாய், நரி, மனிதன் முதலிய இரண்டு கால் நாலு கால் பிராணிகளின் முதுகெலும்பைப் பற்றி விவரிக்கப் போவதில்லை. அல்லது மாணிக்கவாசகசுவாமிகள் பரமசிவனிடம் அடிபட்ட சூடுதான் எல்லோருக்கும் முதுகெலும்பாகத் தெரிகிறது என்று சொல்லப் போவதில்லை. மற்றும் ததீசி முனிவருடைய முதுகெலும்பு வஜ்ராயுதமாக உதவிய கதையைக் கூறப்போவதில்லை.

இங்கு ஒரு பையனை விகடன் அழைத்து வந்திருக்கிறான். அவன் பெயர் கிட்டு. கிட்டு என்பவன் எப்படிப்பட்டவன். மிகவும் வேடிக்கையான பையன் இவன்: நல்ல குடும்பத்தில் பிறந்தவன். இயற்கையில் நல்ல பையன்தான் செயற்கைதான் அவனை நல் வழியில் நிறுத்தல் வேண்டும். ஆனால் அவன் பள்ளிக்கூடத்தில் சரியாய்ப் படிப்பதில்லை. தாய் தந்தையருக்கு விருப்பமாய் நடந்து கொள்ளமாட்டான். ஏன் அப்படி அவன் இருக்கிறான்? அவனைப்பற்றிக் கூறுவான் விகடன். கிட்டுவிற்கு வயது பதினைந்தே. ஆகையால் அவனைச் சீக்கிரம் திருத்தி விடலாம். சிறுவனாயிருக்கிறது மிகவும் புண்ணியம், பத்து வயதிற்கு மேற்பட்டு இருபது வயதிற்குள் எவருடைய குணம், குற்றங்களும் அவர்களிடையே பதிந்து விடவில்லை அப்பொழுது தான் அவர்களுடைய குணமோ குற்றமோ வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் சிறிய மூங்கிலை நம்மிஷ்டப்படி வளரச் செய்ய முடிவது போல சிறுவனும் கிட்டுவை நேர்வழியில் நிறுத்தலாம். இந்த உண்மைச் செய்தி கிட்டுவிற்கு நன்மையைத் தரல் வேண்டும். 'ஆ! என்ன, விகடன் முதுகெலும்பை மறந்து விட்டானே என்கிறீர்களா? இல்லை, அவன் மறக்கவில்லை. சிறுவர்கள் ஒவ்வொருவரும், இருபது வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் முதுகெலும்பின் வளர்ச்சியைப் பெற்றுளளார்கள், பார்த்தீர்களா முதுகெலும்பு வந்து விட்டது. * * * * * *

முதுகெலும்பென்பதென்ன? ஓய் டாக்டரே, பாக்போன் (Backbone) முதுகெலும்பு என்றால் என்ன? அவர் சொல்லுகிறார் கேளுங்



கள் "முதுகெலும்பு அல்லது Spinal Chord என்பது இருபத்தி ஆறு எலும்புகளினால் ஆக்கப்பட்டது. அவற்றுள் மேல் 24 எலும்புகளை வெர்டெப்ரா (Vertebrae) என்பார்கள். அவை ஒவ்வொன்றும் கெட்டியான உருவங்கொண்டு தலை முதலிய மேல்பாகங்களை நிமிர்த்தத் தூண்போன்றிருக்கின்றன. அது ஓய் சற்று இரும் "ஆமாம் அது எவற்றால் ஆக்கப்பட்டது, அதை எப்படி அடைவது?" என்று சொல்லிக் கிட்டு நடுவில் நுழைகிறான். பின்னும் டாக்டர் சொல்லுகிறார் கேளுங்கள் "அந்த எலும்புகள்; கார்பனேட் பாஸ்பேட் என்ற சுண்ணும்பு உப்புகளினால் கெட்டியாக்கப்பட்ட ஒரு பதார்த்தத்தின தொகுதி. ஒரு எலும்பை நன்றாய்க் காய்ச்சினால் அது எலும்புருவத்தோடே இருந்த போதிலும் வெளுத்து சீக்கிரம் உதிர்ந்து விடக்கூடியது அல்லது அதை (Hydrochloric acid) ஹைட்ரோக்லோரிக் ஆஸிட் என்னும் திராவகத்தில் போட்டுக் கரைத்தால் அதினின்றும் சுண்ணும்பு உப்பு போய் ஒரு மெல்லிய வழவழப்பான பதார்த்தமாக மாறிவிடுகிறது. ஆனால் எலும்பைப் போன்ற உருவத்தையே அது கொண்டிருக்கும், * * * *

கேட்டீர்களா டாக்டர் சொன்னதை, முதுகெலும்பு ஜீவவஸ்துவும் (animal matter) தாதுவஸ்துவும் (mineral matter) சேர்ந்தது. தாது வஸ்து போனால் அது வளைந்து போகும் மெல்லிய பதார்த்தமாக மாறிவிடுகிறது. ஜீவ வஸ்துபோனால உலுத்துப்போகும் பதார்த்தமாகிவிடுகிறது. ஆகவே இரண்டு வஸ்துக்களும் நல்ல முதுகெலும்பிற்கு அத்தியாவஸ்யம் முதுகெலுமபு எப்படி சரீரத்திற்குண்டோ அதுபோல் குணத்திற்கும் முதுகெலும்பு உண்டு. இரண்டிலும் அது ஒருவனை நேரே இருக்கச் செய்வது. இங்குதான கிட்டுகேட்ட வினாவிற்கு பதில் வருகறது. எலும்புகள் தாது வஸ்துவும ஜீவவஸ்துவும் சேரசசேர நாளுக்குநாள வளருகிறது. அதேபோல் ஒழுக்கமும் விஸ்வாசமும சேரநேத குணமுதுகெலும்பு ஆக்கப்படுகிறது.

இவைகளெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாய இல்லைபோதும் உங்களுககு அறுவறுப்பாயிருக்கின்றன என்று பயபபடுகிறான் விகடன். இருநதாலும் விகடன் சொல்லவந்ததைச் சொல்லியே வாய்மூடுவான். டாக்டர் முதுகெலும்பை வேடிக்கைப் பண்ணுவது போல் விகடன் குணமுதுகெலும்பை வேடிக்கைப்பண்ணுவான். ஆனால் டாக்டர் சொன்ன எலும்பு ஆராய்ச்சியை செய்தாலும் செய்யுங்கள் பின் விகடன் அதே மாதிரி சொல்லப்போகும் வேடிக்கையை செய்யத் துணியாதீர்கள். பரிசுத்தமான, சுருசுருப்பான, அறிவுள்ள நல்ல பையனைக் கெட்டபழக்க மென்னும் சிவந்த தீயில் மூழ்த்துங்கள். அவன், நல்ல குணங்கள் நீங்கி நல்வாழ்க்கையற்று உலவுவது, எலும்பு ஜீவவஸ்துபோய் உளுத்து விடுவதற்குச் சமமே. ஆகவே குணமுதுகெலும்பின் பாதி சத்து கெட்ட பழக்கத்தினால் அழிகிறது. அது அல்லாமல் அந்த நல்ல பையனை அவநம்பிக்கை என்னும் திராவகத்தில் அழுத்துங்கள். அவனைப் பிறர் நம்புந் தன்மையோ அல்லது அவன் பிறரை நம்புந் தன்மையோ நீங்கினால் அவன் தன்னுடைய சுயேச்சைபோய் மற்றவர் ஆட்டுவிக்கும் ஒரு மெல்லியனாகிவிடுகிறான். இங்கு குணமாகிய முதுகெலும்பு தாதுவஸ்து நீங்கி மெலிவடைகிறது. ஆகையால் கிட்டு இந்த முதுகெலும்பை வளர்ப்பான் அது எல்லோருக்கும் வேண்டுவது. அது தாதுவஸ்துவும், ஜீவவஸ்துவும் நன்னடக்கையும், உண்மை நம்பிக்கையும் சேர்ந்தது. இனி விகடன் உங்கள் காதை முதுகெலும்பு முதுகெலும்பென்று சொல்லி அதிகமாய் உடைக்க மாட்டான். விகடன் வேண்டிய நீதியை போதித்துவிட்டான். நீங்கள் எதை நம்புகிறீர்களோ எதை அடைய முயலுகிறீர்களோ அதுதான் உங்கள் குணத்தை சீர்திருத்தவேண்டும். நன்னடக்கையும் அபிமானமுமே அதற்கு முக்கியம் கிட்டு! உனக்கு தெரிகததா; உஙகள் பெற்றோர் நீ நல்லொழுக்கத்துடன் தலை நிமிர்ந்து உலாவுவாய் என்றே பாடு படுகின்றனர். நீ அதை அடைய நான் சொன்ன முதுகெலும்பை வளர்ப்பாய். கிட்டுவை சீர்திருத்தியபின் விகடன் சுபம்! சுபம்!! சுபம்!!! என்றுசொல்லி வாயை மூடி ஓடி ஒளிந்துகொண்டான்.

உண்மை விகடன்.

---

குறைந்தது அரை அவுன்ஸ் செசிலிப்பழாசமும அரை அவுன்ஸ் எலுமிச்சம்பழ ரசமும் தனஙதோறும ஒருவர் சாப்பிட வேண்டுமென ஒரு வைத்தியர் கூறுகிறார்.

# பொது விஷயங்கள்

## உழைப்பின் சிறப்பு.

வலிமிக்க விதியையும் புறங்காணும் உழைப்பு எவ்வளவு சிறப்புள்ளது! அது எவ்வளவு அருமையான காரியங்களைச் செவ்வனே செய்கிறது பாருங்கள்! அவை அளவிடற்கரியன! தன் நோக்கத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு வருத்தம் இருந்தாலும் அது கலங்குவதில்லை; எவ்வளவு முயற்சி வேண்டுவதாய் இருந்தாலும் தளர்வதில்லை; எவ்வளவு இடுக்கண் வந்தாலும் சற்றும் பின் வாங்குவதில்லை. ஊக்கமுடைமை, மடியின்மை, இடுக்கணழியாமை என்னும் திருக்குறள் அதிகாரம் மூன்றின் உண்மையையும் விளக்குவதன்றோ உழைப்பு? அது மக்களுடைய நல்வாழ்க்கையை வளர்ப்பதில் எப்போதும் ஊக்கமுள்ளதாய், எப்போது விடியப்போகிறது என்று காத்திருந்து, வேலை செய்ய ஆரம்பித்து நாடோறும் நவநவ நன்மைகளைச் செய்து கொண்டே வருகிறது.

காட்டை அழித்துக் கரம்பைத் திருத்திப் பார்வைக்கும் அஞ்சிக்கையைத் தரும் வெட்டவெளியைக் கணணுக்கு இனிமையாகப் பச்சைப்பசேரென்று தளிர்க்கச் செய்வது எது? ஏர் உழுது எருவிட்டு நீர் பாய்ச்சிப் பயிர் செய்து, அதை உணவுக்கு உதவும்படி பக்குவம் பண்ணி இவ்வுலகிலுள்ள கோடானகோடி மக்களையும் உயிர் வாழும்படி செய்வது எது? செங்கல் சூளைபோட்டும், கருங்கல் வெட்டியெடுத்தும், மாடமாளிகை கூடகோபுரங்களைக் கட்டுவதும், நீர் மட்டத்திற்குக் கீழும் நிலத்தைத் தோண்டிப் பொன், வெள்ளி, இரும்பு, ஈயம் தகரம் முதலியவைகளை எடுப்பதும் எது?

காட்டிலுள்ள மரத்தை வெட்டிக் கப்பல் செய்து, அலைகளைப் பொருட்படுத்தாமலும், புயலுக்கு அஞ்சாமலும, சுறு மீன்களைத் துண்டித்துக்கொண்டும், நெடுந்தூரம் கடலின் வழியாய் நான்கு திக்கிலும் சென்று புதிய புதிய உலகங்களைக் கவர்ந்தும், சுற்றிலுமுள்ள தேசங்களில் ஆங்காங்கே கிடைக்கும் அரும்பெரும் பொருளகளைப் பிறதேசங்களிற் கொடுத்து, பிறதேசங்களிலுள்ள சிறந்த பொருள்களை அவைகளுக்கு மாறுகக்கொண்டு, இப்படியே ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு ஊரிலும், அவரவர் இனிது வாழ்வதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் நிரப்பி, இவ்வுலகிலுள்ள யாவரும் ஒருங்கே நலம் பெறுதற்குக் காரணமாக நிறகின்ற வர்த்தகத்தை நன்றாய்த் தழைத்துச் செழித்தோங்கும்படி செய்வது எது?

அளவுக்கு எஞ்சியதாயும், மிகக் கடினமாகவும் காணப்படும் செய்கைகளை எள்ளளவும் பொருட்படுத்தாமல் பெருநீர்ப்பெருக் கெடுத்தோடும் நதிகளை அளவிட்டு, உளை விழும் சதுப்பு நிலத்தின்மேல் செவ்வையான பாதைகளை உண்டுபண்ணி, ஆழமான காறுகளின் மேல் அந்தரத்தில் தொங்குவதுபோன்ற பாலங்கள் கட்டிப் பாறைகளைத் துளைத்து மலையின் கீழாகக் குகைபோல் வழி செய்வது எது?

ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கும் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கும் மலைகளின் வழியாகவும், கடலின் வழியாகவும், மெல்லிய கம்பியை இழுத்து அதன் வழியாய் மனோ வேகமும் இணையென்று சொல்லலாகாத அவ்வளவு விரைவில் செய்திகளைத் தெரிவிக்கச் செய்வது எது? அம்மட்டோ! கம்பியும் இல்லாது எதிரெதிரே நாட்டிய இரண்டு கம்பிகளின் உச்சியில் அமைந்திருக்கும் இரண்டு காந்த ஊசிகளின்மூலம் அந்தந்த இடத்திற்குச் சடுதியில் செய்திகளைத் தெரிவித்தும், அக்கம்பிகளின் மூலம் கைதிகள் தப்பித் தோடினாலும் சீக்கிரம் பிடித்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் அக்கைதிகளின் புகைப்படத்தைக் காட்டியும், ஒருவரும் கனவிலும் நினைக்கவொண்ணாத இந்த அதிசயத்தைச் செய்வது எது?

மக்கள் மணமறியாத பிரதேசங்களிற்சென்று மந்திரவாதி யொருவன் மந்திரக் கோலைக்காட்டிய மாத்திரத்தில் நூதனமான புதுமைகள் காணப்படுவதுபோல் சுத்த சூன்யமான பள்ளத்தாக்குகளில் நவதானியங்களும் செழித்துப்பயிராகவும், வெறுமையான இடங்கள் எல்லாவற்றிலும் பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகள நிறையவும்; உலைக்களம் பஞ்சாலை முதலிய





கைத்தொழிற் சாலைகள் விளங்கவும், வாணிபங்கள் வேரூன்றிச் செழிக்கும் ஒரு பெருங்களஞ்சியமாயும், எல்லா நீதி நூல்களும் முழங்கும் அகன்ற மண்டபமாயும், சமய சித்தாந்தங்கள் தாண்டவமாடும் புனிதமான கழகங்களாயும், அரண்மனைகளும், ஆலயங்களும் உயர்ந்து பார் வைக்கினிய நகரம் தோன்றவும் காரணமாயிருப்பதெது?

புத்திமான்களிடத்தினின்று உதிக்கின்ற பொருள் நுட்பங்களையும், சாத்திர பாரங்கதருடைய கொள்கைகளையும், பெரியோர்களுடைய புத்திமதிகளையும் எல்லோரும் எக்காலத்திலும், அறிந்துகொள்ளும்படி வெறுங்காகிதத்தில் அச்சிட்டும், அதைக் கற்பிக்கும் திறமையையும் கொடுப்பது எது?

சாத்திர முறைப்படி ஐம்பூதங்களையும் தன் வயப்படுத்தி, ஆறுமாதம் ஐந்துமாதம் பயணம் சென்று காணும் நாடு நகரங்களையும் ஆறு நாள் ஐந்து நாட்களிலே அடையும்படி தரை நிலத்திலெடுத்துச் செல்ல இரட்டை உருளை வண்டிகளையும், நாலுருளை வண்டிகளையும், புகை வண்டிகளையும், நீர் பரப்பிலே செல்வதற்குப்பல விதக் கப்பல்களையும், ஆகாய வழியாகச் செல்வதற்கு ஆகாய விமானங்களையும் செய்து மந்திர விளக்கேற்றுவதுபோல் மின்சாரவிளக்கேற்றிக் கடவுளைப் போல் மீண்ட உயிரையும் உயிர்ப்பித்து, கைத்தொழில்களையும் உண்டு பண்ணி அவ்வேலைகளுக்கு அழகைக் கொடுக்கச் சிற்பங்களைக் கற்பித்து அவைகளெல்லாம் என்றென்றைக்கும் அழியாமல் விளங்குவதற்கேற்ற நூல்களைப் பெருக்கி, நாகரீகத்தைப் பரவச் செய்து, மக்கள் எல்லா நலன்களையும் பெற்று, இன்பத்தை அடைய நல்லொழுக்கத்தையும் இறைவனிடத் தன்மையும் மேன்மேலும் பெருகும்படி வகைதேடுவது எது?

இவ்வாறு நாற்புறங்களிலும் விளங்கும் எண்ணிறந்த அதிசயமான காரியங்களைச் சாதிப்பது உழைப்பன்றோ? அப்படியாயின் "அம்பலத்தில் தீப்பட்டது" என்றாலும் 'அதைத்தான் சொல்வானேன், வாய்தான் நோவானேன்?" என்று சொல்லும் முழுச்சோம்பேறியையும் எதற்கும் குதர்க்கமே பேசிக் "குங்குமம் சுமந்த கழுதைபோல"த் தான் யாதொரு பயனும் அடையாது போகும் குண்டுணியையும், எதற்கும் "பழக்கம் வழக்கம்" என்று சொல்லிக் கொண்டு தானும் ஒரு பயனடையாது தன்னைச் சார்ந்தவரையும் ஒரு பயனையும் அடையவொட்டாது செய்யும் வைதீகர்களும் தவிர அறிவுடைய மக்கள் ஒவ்வொருவரும் உழைப்பதற்குச் சிறப்பில்லையென மனந் துணிந்து சொல்லவே மாட்டார்கள். அத்தகைய உழைப்பும் காலத்திற்கேற்றவாறு நூதனமான முறையில் மாறிமாறி வருமென்பதை அறிவுடையோர்கள் மறுக்கமாட்டார்கள் என்பதும் எனது முடிந்த துணிபு.

ஆகையால் காலத்திற்கேற்றவாறு ஒவ்வொருவரும் தாம் தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர் குடியாக்கவேண்டின் அவர் தமக்கு ஏற்படும் தற்காலத்திய எவ்வித இடையூறுகளையும் சோம்பின்றிக் கடிந்து முயற்சி செய்ய வேண்டுவது முதற்கடமை. அதைத்தான்,

> "மடியை மடியாவொழுகல் குடியைக்
> குடியாக வேண்டுபவர்."

என்றார் தெய்வத் திருவள்ளுவரும். ஆகவே செங்குந்த குலத்திற் பிறந்த ஒவ்வொருவரும் அகங்காரத்தை ஒழித்து, ஒருவரிடமொருவர் நம்பிக்கைவைத்து, களங்கமில்லா மனத்தோடு ஒற்றுமைகொண்டு, கல்விநிதியைப் பெருக்கி ஒவ்வொரு செங்குந்த மாணவனுக்கும் அறியாமை நீங்க அறிவைப் புகட்டும் கல்வியை ஓங்கச் செய்து இத்தகைய உழைப்பைச் சிரமேற் றாங்குகின்றாரோ அன்றே தான் நமது அடிமை வாழ்க்கை நீங்கி இறைவனருளால் உண்மைவாழ்வு வாழலாம் என்பது எனது பூரண நம்பிக்கை. ஆகையால் செங்குந்த வாலிபர்களே! விழிமின்! எழுமின்!! உழைமின்!!!

V. K. M. அப்பா,
மருதவரை நிழல், வடவழி.

## தெய்வங்களும் ஜீவவதையும்.

கடல் புடை சூழ்ந்த இந்நெடிய உலகின் கண்ணே எறும்பு முதல் யானை யீறாக அநேக ஜீவன்க ளிருக்கின்றன. அவற்றினுள் அடைதற்கரிய இம்மானிட ஜென்மமே மேன்மையானது என்று நந்தமிழ் நாட்டுப் பெரியார் அனந்தம் பேர் உரைத்துப் போந்தனர் என்பது யாவருமறிந்த விஷயமே. அப்படி இந்த ஜெனனம் எக்காரணம் பற்றி மேன்மையுற்றது என்றாலோ, நமக்கு மேன்மையான ஒப்பற்ற பகுத்தறிவினால் நன்மை தீமை தெளிதல் ஒழுக்

கம், தயை, சாந்தம், விசுவாசம், அன்பு, பக்தி முதலிய நற்குணநற்செய்கைகளிருப்பதாலேயே இத்தகைய மேன்மையுற்ற ஜென்மத்திலுதித்த நாம் இன்னும் மேலான வழியாம் ஜீவகாருண்யம், ஈசுரபக்தி, பாசவைராக்யம், பிரம்மஞானம் என்றுரைக்கபட்ட நன்னெறியிற் சென்று இறைவனுகிய சிவபெருமானின் அன்பின் வயப்பட்டு அவரது அருளைப் பெற்று என்றும் மாறாத இன்பமடைத லன்றோ இப்பிறவியின் பயன்? ஆனதால் செங்குந்த குலச் சிரிய மக்காள்! மேற்குறித்தவற்றுள் முதற்கண் ஜீவகாருண்யத்தை நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டிய தவசியம். ஜீவகாருண்ய மென்றால் எந்த ஜீவன்களிடத்தும் கருணை பாராட்டுதல். இதைப்பற்றி

“ தன்னுயிர் நீப்பினும் செய்யற்க
தான் பிறிதோர் இன்னுயிர் நீக்கும் வினை.”

என்று தெய்வப்புலமை திருவள்ளு நாயனர் உரைத்திருக்கின்றார். அதாவது யாதொரு ஜீவனால் நமது உயிர் நீங்கினாலும் மற்ற ஜீவன்களுக்கு உயிர் நீங்கும்படியான கொலைத்தொழிலைச் செய்யலாகாது என்று எவ்வளவு அன்போடு அப்பெரியார் உரைத்திருக்கிறார்? வாயில்லாத ஏழைகளாகிய, சுற்றமில்லாத பிராணிகளாகிய ஆடு, கோழி, பன்றி, புறா, மீன் முதலிய அநேக ஜீவன்களை வஞ்சித்துக் கொலை செய்து அவற்றைப் புசிப்பது முறையா? இக்கொலைப்பாவம் செய்தால் நமது குலக்கொழுந்தாம் ஆறுமுகவன் அருள்கிட்டுமா? ஆறுமுகக் கடவுளின் படைத்தலைவராகிய நவவீரர் மரபிலுதித்த நாம் தாழ்ந்த அறிவினையுடைய பிராணிகளைக் கொன்று தின்னல் தான் வீரர் அழகோ? இப்படிக் கொலை செய்தால் முருகனுக்கு எவ்வாறு அன்பர்களாவோம்? சிலர் தங்களுக்கு உண்டாகும் இன்னல்களைச் சகியாதவர்களாய் மாரி, காளி, முனியன், கருப்பன் இருளன் காட்டேறி எனப் பலவாறு பெயரிட்ட தெய்வங்களின்பாற் சென்று தனது குறைகளை அவ்விடத்தில் விண்ணப்பித்துக் கொண்டு, “அவை நிவர்த்தியானல் நான் உனக்கு ஆடு, கோழி அல்லது பன்றி பலியிடுகிறேன்” என்று சொல்லிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். தாங்கள் நினைத்த காரியத்தில ஏதோ ஒன்று எக்காரணத்தைக்கொண்டு முடிவடைந்தாலும் அத்தெய்வத்தின் கிருபையாலே முடிந்தது எனக்கருதி அத்தெய்வத்திற்காகப் பெயரிட்டு நன்றாய்க் கொழுத்துப் பருக்கவைத்த அப்பிராணிகளை அந்த ஆலயத்திற் கருகில் கொண்டுபோய் வேடம் புனைந்த பூசாரியாம் கொலையாளிக்குத் தெரிவிக்க அவன் ஒரு கரத்திற் தீர்த்தமும் மற்றொரு கரத்திற் கத்தியும் கொணர்ந்து அந்த ஜீவனைத் துண்டித்துவிடுகிறான் பின்னர் கொலையுண்ட பிரேதத்தைத் தங்கள் இல்லத்திற்குக் கொண்டுவந்து அந்த ஊனைத் தங்கள் சுற்றம் சூழ விலாப்புடைக்கத் தின்கிறார்கள். என்ன அறியாமை! என்ன மதியீனம்! முன் இவர்கள் வேண்டிக்கொண்டபடி அத்தெய்வத்திற்குப் பலியிடுவது உண்மையானல், அக்கொலையுண்ட பிணத்தை அந்த இடத்தில்தானே போட்டுவிடவேண்டும், இவர்கள் எடுத்துச் செல்லவேண்டிய தில்லையே. அப்படி எடுத்துச் செல்வதால் அத்தெய்வங்களுக்காக இவர்கள் பிரகணிகளைக் கொழுத்துப் பருக்க வைத்ததல்ல; தங்களுக்காகவேதான். அப்படி தெய்வங்களிடத்திலேயே பொய் சொல்லி ஏமாற்றும்படியான வஞ்சகர்களுக்கு எக்காரணத்தால் இறைவனருள் பாலிக்கும்? ஒருபோதும் உண்டாகமாட்டாது. இதனை நம் பொய்யில் புலவரும்

“தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
எஙகன மாளுமருள்”

என உரைத்திருக்கின்றார். ஆதலின் தன்னுயிர்போல மன்னுயிரையும் நினைந்து அக்கொலைத்தொழிலை விடுதல் வேண்டும். சகல ஜீவன்களைக் காட்டிலும் மேன்மையுற்ற நாம் ஔவையுண்ட நெல்லிக்கனிபோன்ற அரிய கனிகளிருக்க எட்டிக் காயைத் தின்ன விரும்பும் கயவரைப்போல் நறுமணங்கமழும் நற்பதார்த்தங்களிருக்கக் கொலையுண்ட ஊனைத்தானு உண்பது? அப்படி அவ்வூனை நாம் புசித்தால் நமக்கும் மற்ற ஜீவன்களுக்கும் என்ன வித்தியாசம் என்பதை வலியுறுத்த

“நாய் கழுகு கூகை நரிநாகம் ஈயெறும்பு
பேய் இவைகள் ஆவி பிறித்தூன்—தேயமொடு
தானருந்தலல்லாது சற்காரியமனிதர்
தானருந்தலாவதோதான்.”

என ஆன்றோர் உரைத்திருப்பதையும்

‘எண்ணரிய பிறவி தனில் மானிடப்பிறவி தான்
யாதினுமரிதரிது காண் இப்பிறவி தப்பினல்
எப்பிறவி வாய்க்குமோ யாதுவருமோ அறிகிலேன்”

எனத் தாயுமானவர் உரைத்திருப்பதையும், இத்தகைய மானிடராய நாம் எம்முறையிற் பயிலுதல் நன்று என்பதையும், ஒவ்வொருவரும் இதற்கென சற்றுநேரம் சிந்திப்பார்களா



னல் ஜீவகொலையைப் புரிய எண்ணமுந் தோன்றுமோ?

“பொருளாட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி
ஆங்கில்லை யூன் தின்பவர்க்கு”

அதாவது திரவியத்தை எவனொருவன் சிக்கனமின்றிச் செலவு செய்கிறானே அவனுக்கு அச்செல்வம் எவ்வாறு நிலைத்து இல்லையோ அது போன்று கொழுத்த ஊனைத்தின்பவனுக்கு அருளின் தன்மை இல்லை என நாயனர் எவ்வளவு அன்போடு உரைத்திருக்கின்றார் என்பதை ஒவ்வொருவரும் தனக்குத்தானே நினைந்து உருகி இன்றே ஜீவகொலையைவிடுத்து முன்னே கூறப்பட்ட ஜீவகாருண்யம், ஈசுவர பக்தி, பாசவைராச்கியம், பிரம்மஞானம் என்னும் இந்நான்கினையும் ஒன்றன் பின் ஒன்றாய் அடைந்து இம்மானிட ஜென்மம் ஈந்தருளும் சிவபெருமானுக்கு அன்பர்களாகி அவரதருளைப் பெற்றுய்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக. சுபம்.

ஏ. வி. துப்புசாமி முதலி,
வெண்ணந்தூர்,

## நாவல் பகுதி

### செல்வராஜன்
அல்லது
ஒரு செங்குந்த யாத்திரைவாசி.

நான் ஒரு பெரிய பட்டணத்தில் செல்வாக்குள்ள ஒரு செங்குந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன் கிராமங்களில் வசிக்கும் செங்குந்தர்களைப் பற்றியாவது, நெசவுத் தொழிலைப்பற்றியாவது, நம் முன்னோர்கள் அமைத்துவைத்த கட்டுத் திட்டங்களைப் பற்றியாவது, நம்மவர் பண்டைப்புகழ், பிரபந்தம் முதலியவற்றைப் பற்றியாவது, நமது மித்திரன் தோற்றுவதற்கு முன் யாதொன்றும் எனக்குத் தெரியவே தெரியாது. எனது நெருங்கிய பந்துக்கள் பெரும்பாலும் நான் பிறந்து வளர்ந்த நகரத்திலேயே வியாபாரிகளாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து வருகிறார்கள். கிராமங்களிலும் எனக்குச் சில பந்துக்கள் உண்டு. அவ்விடங்களுக்கு என் பெற்றோர்கள் மாத்திரமே போய் வருவார்கள். பரம்பரையாக எங்கள் குடும்பத்திற்குரிய வியாபாரத்தில் நான் தலையிடுவதேயில்லை. எனக்குப் பிதிராச்சிதச் சொத்தும் கொஞ்சம் உண்டு நான் பல பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதுவதுண்டு அதன்மூலமாய் எனக்குப் போதிய வருவாயுண்டு. எனக்குக் குலப்பற்றென்பதே கிடையாது. நமது மித்திரன் தோன்றிய பிறகுதான் குலாபிமானம் என்னும் கதிரவன் (சூரியன்) என் மனதிலுதித்தான். உதித்தும் லஜ்ஜை யென்னும் மேகமானது அக்கதிரவனது கிரணங்களை மறைத்து நின்றது. ஆயினும் குலாபிமானக் கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாய் மேலோங்கிக்கொண்டே வந்தான். கடைசியாகச் சென்ற தைமீ 7௳ காலை ஷை கதிரவன் மேலோங்கித் தனது கிரணங்களாகிய கைகளை எல்லாப் பக்கங்களிலும் பரப்பிப் பிரகாசிக்க ஆரம்பித்தான் உடனே என் மனதில் நிறைந்து குடிகொண்டிருந்த இருளும் மூடுபனியும் ஓடி ஒளித்தன. பின்னர் விளைந்தவற்றைக் குறித்து ‘ஞாயிற்றின் கதிர்கள்’ என்ற வியாசத்தைச் சென்ற வருடத்திய மித்திரனில் படித்துணர்ந்த உங்களுக்கு நான் சொல்லவேண்டிய அவசியமேயில்லை.

பிறகு கல்வி, செல்வம், தொழில்முறை செல்வாக்கு முதலிய பல துறைகளிலும் பின்னடைந்து உலகம் இன்னதென உணராது உறங்கிக் கொண்டிருக்கும் சகோதரர்களைத் தட்டி எழுப்பும் முறையில் என்னால் கூடியவரையில் முயலவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன். நான் ஒரு இளைஞனேயாயினும் இந்தியாவிலுள்ள முக்கியமான இடங்களுக்கெல்லாம் சென்றிருக்கிறேன். ஆயினும் நமது மகாநாட்டிற்குப் பிறகே செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று சகோதரர்களைக் கண்டு அவர்களோடு அளவளாவி அவர்கள் நிலைமையை அறிந்து என்னால் செய்யக்கூடியவற்றைச் செய்தும் கூடாதவற்றைப் பிறரைக்கொண்டும் நமது மித்திரனைக்கொண்டும் செய்வதே யான் இப்பிறப்பினல் அடையக்கூடிய பெரும்பயு

னைக் கருதி எனது புனித யாத்திரையை ஆரம்பித்தேன்.

திருடர்கள் வீட்டிற்குள் புகுந்து கொள்ளையடித்துக் கொண்டிருப்பதையும் அறியாது உறங்கிக்கிடக்கும் நம்மவர்களை ஊர் ஊராகவும் தெருத் தெருவாகவும் வீடு வீடாகவும் சென்று தட்டி எழுப்பிக்கொண்டு வரும் நமது மித்திரனும், சங்கமும், தோன்றுவதற்குக் காரண பூதராயிருந்த கல்வர்களையே எனதரிய குருயாராகவும் செங்குந்த மித்திரனையும், பிரபந்தங்களையுமே வேதாகம இதிகாச புராணங்களாகவும் செங்குந்தர்கள் வதியும் ஊர்களையே புண்ணிய தலங்களாகவும், அவர்கள் காட்டும் அன்பையே தீர்த்தமாகவும், அவர்கள் இருப்பிடங்களையே நம்மையாளுடைய ஸ்ரீ முருகப் பெருமான் சந்நிதானமாகவும் பாவித்து எனது யாத்திரையைத் தொடங்கலுற்றேன்.

விஷயத்தைத் தொடங்குமுன் எங்கள் குடும்பத்தைப்பற்றிய இரண்டொரு விஷயங்களைக் குறித்துச் சொல்ல விரும்புகிறேன். நாட்டுப்புறத்திலிருந்து வரும் பந்துக்கள் கல்வி, கேள்வி, நாகரீகம் முதலியவை இல்லாதவர்களென்று எண்ணி அவர்களோடு நான் அளவளாவுதலே கிடையாது. இதுவிஷயமாக எனக்கும் என் தந்தையாருக்கும் அடிக்கடி விவாதங்கள் நடந்ததுண்டு. அவர் பல தடவைகளில் 'நெற்போல் வளை' என்னும் பழமொழியை எடுத்துச்சொல்லி வியாக்யானம் செய்திருக்கிறார். அவர் என்ன சொல்லியும் நான் அவற்றையெல்லாம் 'புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றென்' னுமாறு ஒருகாதில் வாங்கி மற்றொரு காதினால் போக விடுவது வழக்கம். இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் நாங்களிருவரும் ஒத்திருப்பதில்லை. எங்கள் குடும்பத்திற்குரிய வியாபாரத்தை என் தகப்பனாரும், தமையனுமே பார்த்துக் கொள்வார்கள்.

ஈண்டு எனதருமைத் தந்தையாரைப்பற்றி சொல்லாமலிருக்க முடியவில்லை. அவர் எனக்குத் தந்தைமாத்திரமன்று குருவாகவும் விளங்கினார். அவரது அரும்பெருங் குணங்களைப் பற்றி எத்துணைக் கூறினும் முற்றிலும் சொல்லியதாகாது. கூறாது விடுக்கினும் என் மனம் அமைதியுறாது. கூறப்புகினும் நமது மித்திரன் இடந்தராது எனவே இப்பொழுது யான் நமது மணிவாசகப் பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளியதுபோல் 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பொத்து' நிற்கின்றேன். இங்கிலையில் யான் அடைந்துள்ள ஆற்றொணாத் துயரத்தை எனதரிய சகோதரர்களாகிய செங்குந்த சிகாமணிகளிடத்தில் தான் சொல்லி யாற்றிக்கொள்ளத் துணிந்தேன். யான் எப்பொழுதும் 'உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன். பின்னை யொருவரை யான் பின் செல்கேன்— பன்னிருகை கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும் வேலப்பா செந்தில் வாழ்வே' என்னும் பாசுரத்தைச் சொல்லிக்கொண்டே செந்தில் வேலப்பனது உபய பாதாரவிந்தங்களையே உறுதுணையென நம்பி இடைவிடாது தியானித்துக் கொண்டிருப்பவன். ஆகையால் தங்கவேலன் தம்பியாகிய செங்குந்தர் கூட்டங்களிடையே ஸ்ரீ முருகப்பெருமான் பிரசன்னமாயிருக்கிறார் என்ற பூரண நம்பிக்கையுடைய யான் உங்களிடத்தன்றி வேறுயாரிடத்தில் சொல்லி ஆற்றிக்கொள்வேன்? எண்ணுந்தோறும் என் மனம் தடுமாறுகிறது. எழுதப்புகின் என்கை நடுங்குகிறது. என் செய்வேன்! என் கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகி என் உடலை நனைக்கிறது. மறு க்ஷணமே பெருமூச்சினாலுண்டாகும் உஷ்ணத்தால் அந்நீர் வற்றிப்போகிறது. அந்தோ எனதரிய தந்தையாரும் குருவுமாக விளங்கிய பெரியாரை. இரண்டு மாதங்களுக்கு முன்னர் இழந்து விட்டேன். துக்கசாகரத்தில் மூழ்கினேன்.

எனது தந்தையார் என்னையும் என் தமையனையும் செல்வமாக வளர்த்தார். இங்கு சென்றால் கொங்கு மூக்கன் பிடித்துக் கொள்வான் அங்கு சென்றால் ஏழு மூக்கன் பிடித்துக்கொள்வான் என்று சொல்லிப் பயமுறுத்தி எங்கும் போகவொட்டாது செய்து உலக அனுபவமின்றி முன்னோர் தேடிவைத்தப் பொருளையும் ஒரு நொடியில் ஒழித்துவிடக்கூடிய சாமர்த்தியமுடையவனாய் இருகைமக்கும் பயனற்றவனாய் வளர்க்கப்படும் சிறுவர்களையே சாதாரணமாய் செல்வமாய் வளர்ந்தவர்களென்று சொல்லுவது வழக்கம். இக்கருத்துக் கொண்டு எங்களை எங்கள் தந்தையார் செல்வமாய் வளர்த்தாரென்று நான் சொல்லுவதாக எண்ணவேண்டாம். கண்டோர் யாவரும் இப்பிள்ளைகளை என்றும் அழியாத செல்வம் என்று சொல்லி மகிழுமாறு வளர்த்தார் என்பதே எனது கருத்து.

என்னையும் என் தமையனையும் எங்கள் அபிப்பிராயப்படி முறையே கல்வியிலும், வியா

144442 (12)



பாரத்திலும் தேர்ச்சியடைய விட்டார். நான் இண்டர்மீடியேட் பரீக்ஷையில் இராஜதானியில் முதலாவதாகத் தேறினேன் அப்போது, என் தகப்பனார் என்னையழைத்து, 'நீ இனி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய் உனக்குப் பிடித்தமான தொழில் யாது என்றார். 'அப்பா! யான் விரும்பியது கல்வியே. என் வாழ்நாளை யான் படித்தே கழிக்க உத்தேசித்திருக்கிறேன்' என்றேன். உடனே அவர் மிகுந்த சந்தோஷத்தோடு 'குழந்தாய் நான் உத்தேசித்தபடியே நீயும் தீர்மானித்துள்ளாய். நமயினத்தவருக்குள்ளே நிரம்பப் படித்தவர்கள் வெகு சிலரே இருக்கிறார்கள். உன்னிஷ்டப்படியே வாசி.' உன ஜாதகத்தில் வாக்குஸ்தானாதிபதி வலுத்திருக்கின்றான். கல்வியும் சொலவன்மையும பொருந்திய நீ நறுமணங்கமழும் பொன்மலரே என பிரகாசிப்பாய். உன் காலத்திலாவது ஆற்றுமையின்மையாலும் கல்வியின்மையாலும் சீர்கெட்டு நிற்கும் பிரசித்திபெற்ற நவவீரர் பரம்பரையினராகிய நம்மவர்களை சீர்பெறச் செய்வாயாக' என்று சொல்லி ஆசீர்வதித்தார். நான் 'அப்பா இதெல்லாம் எனக்குப் பிடிக்காதென்று தங்களுக்குத தெரியாதா? இவர்களை ஒற்றுமைப்படுத்த பிரமாவாலும் முடியாதே? முருகப்பெருமான் தோன்றியபின் அவருக்குத் துணையாக இவர்கள் தோன்றினார்களென்று நினைக்கிறீர்களா அப்படியல்ல. உலகத்தில கலி முன்னே தோன்ற அதறகுத் துணையாக வல்லவா அதன் பின்னே இவர்கள் தோன்றினார்கள்? என்றேன். அப்படி நினையாதே, ஒரு நிமிஷத்தில கூடிவிடுவார்கள். இவர்கள் தற்போது அடைந்திருக்கும் தாழ்வை நோக்க சீக்கிரமே நறகாலம உண்டாகுமென்று எண்ணுகிறேன்' எனத் தகப்பனார் சொல்லிவிட்டு 'முருகா இவன் புத்தி என்றுதான் திரும்புமோ' என முணுமுணுத்துக்கொண்டே போய் விட்டார்.

எனதரிய தந்தையார் எங்களை வளர்த்த வன்மையைச் சிறிது சொல்லுகிறேன் கேளுங்கள். நாங்கள் பணக்கார குடும்பத்தில பிறந்தும பாடசாலைக்கும் மற்ற இடங்களுக்கும் காலால் நடந்து தான செல்லவேண்டும், எங்கள் செலவிற்கு ஏதாவது இல்லலா வேண்டுமென்றால் கை குடை, காலணா முதலியவற்றைக் கடைத்தெருவில் விற்று அதில வரும லாபத்தைத தான எடுத்துக்கொள்ள வேண்டும். ஆறேழு வயது குழந்தைகளாயிருக்கும்போது கருப்பங்கழியைத் தான் வாங்கித் தருவர். நாங்கள் தான் அதை ஒடித்து திருத்தித் தின்ன வேண்டும். இவற்றை நோக்க என் தந்தையாரைக் கடின மனமுடையவரென எண்ணுவார்கள். அஃதன்று எங்கள் தகப்பனார் தமது குழந்தைகளின்மேல் வைத்திருந்த பிரியத்தைப்போல் யாரும் வைத்திரார் என்பதே எனது அபிப்பிராயம். அவர் எங்களை எக்காரணத்தாலும் பயமுறுத்தியதும் கிடையாது. எங்களிடத்தில் கோபமாய்ப் பேசியதும கிடையாது. ஒவ்வொன்றும் எங்கள் மனதில் நியாயமெனப்படும்படியாக விளக்கிக்கூறி சம்மதிக்கச் செய்வார். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் மிகுந்த பாண்டித்தியமுடையவர். எனக்குத் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, சமஸ்கிருதம், பாரசீகம, ஆங்கிலம முதலிய பல பாஷைகளும் தெரியும. என் தந்தையாரிடத்து அநேக தமிழ் இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும, பாடம் கேட்டிருக்கிறேன. அவருக்குத் திருக்குறளும் திருவாசகமுமே ஆத்மார்த்த நூல்கள். இவ்விரு புத்தகங்களையும் எப்போதும் அவரிடத்தில காணலாம்.

அவரது இறுதிக்காலத்தில் சில நண்பர்களும் பந்துக்களும அவரிடம் சென்று 'ஐயா உமக்கு எல்லாந்தெரிந்திருந்தும் உமது புதல்வர்களை இவ்வாறு விடலாமா? இருவருக்கும் கலியாணங்கூட செய்யவில்லையே?' எனபல வாறு சொல்ல ஆரம்பித்தார்கள். அறியாமையே ஆபரணமாகப் பூண்ட அன்பர்களே! ஒரு தந்தையானவன் தன் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை அவர்களை அவையத்து முந்தியிருப்பச் செயலன்றோ? அதை முற்றிலும் செய்து முடித்த யான இனிச் செயயவேண்டியதும் சொலல வேண்டியதும் உளவோ. 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்பது பெரியோர் துணிபன்றோ? என விடையிறுத்தார். இவ்வளவு கூறிய பிறகு எனக்குக் கொஞ்சம் ஆறுதலுண்டாயிருக்கிறது, விரிவிற்கஞ்சி இதனோடு நிறுத்துகிறேன்.

மழைதரு கற்பினளாகிய எனதரிய தாயாரைக்குறித்து சமயம் நேர்ந்துழி விளக்குவேன். என்னைப்பற்றியும் என் குடும்பத்தைப்பற்றியும் புகழ்ந்துரைக்கும் என்னைத் தற்புகழ்ச்சிக்காரனென எண்ணுகிறீர்கள். யான் எனது ஊரையும் பெயரையும வெளியிடாத வரையில் எத்

துணை கூறினும் தற்புகழ்ச்சியாகாதென்பதை நண்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். என் குடும்பச் சம்பந்தமான மற்ற விஷயங்களை நேர்ந்துழி ஆங்காங்கு கூறுவேன்.

இனித் தோற்றுவாயை இதனோடு நிறுத்திக் கொண்டு யான் என் யாத்திரையிற் கண்டவற்றை ஒவ்வொரு மாதமும் நமது மித்திரன் மூலமாக சகோதரர்கள் அனைவருக்கும் தெரிவிக்க விருப்பங் கொண்டுள்ளேன். ஆகையால் என தரிய நேயர்களே! செங்குந்த யாத்திரைவாசியாகிய யான் வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் சாற்றவதொன்றைப் போற்றிக்கேண்மின். யான் என் யாத்திரையில் உண்மையாய்க் கண்டவற்றை மறைக்காது நம் குல நன்மையின் பொருட்டே சொல்ல முன் வருகின்றேன். என் சகோதரர்களாகிய செங்குந்தரிடத்து வைத்துள்ள உண்மையான பேரன்பால் சொல்லுவனவற்றுள் நல்லவற்றைக் குறித்து மாத்திரம் சந்தோஷப்பட்டுத் தீயவற்றைக் குறித்து வருந்தலாகாது. 'நகுதற் பொருட்டன்று நட்பு மிகுதிக்கண்மேற் சென்றிடித்தற்பொருட்டு' என்னும் பெரியோர் சொற்படி சொல்லுவேன் நான். உங்கள் நண்பனும், உங்களில் ஒருவனுமாவன் என்பதை உணர்ந்து கூறும் தீயவற்றை நம் குலத்தவரினின்றும் ஒழிக்க முயலுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். ஆயினும் நான் என்னை இன்னானெனக் காட்டிக்கொள்ளாதது போலவே நான் குறித்துச் சொல்லும் ஊர்களின் பெயரையும் கனவான்களின் பெயரையும் மறைத்தே கூறுவேன்.

(தொடரும்)

## சமூகப் பகுதி

### தேவாங்கர் மகாநாடு

நம் தாய் நாட்டில் கணக்கிலடங்காத அவ்வளவு சமூகங்கள் (communities) இருக்கின்றன. எல்லாச் சமூகங்களும் ஒரே நிலையிலில்லை. சில முன்னணியிலும், பல பின்னணியிலுமிருக்கின்றன. பொதுவாக எல்லாச் சமூகங்களும் முன்னேற்றத்தையும் பெருமையையும் தங்களது நோக்கமாகக் கொண்டு உழைத்து வருகின்றன. எல்லாச் சமூகங்களும் சேர்ந்துதான் நமது நாடு. எந்தத் தனித்த சமூகமும், அல்லது சில சமூகங்களும் நமது நாடு என்று குறிப்பிட இயலாது. எல்லாச் சமூகங்களும் சேர்ந்துதான் நமது இந்திய நாடு. ஆதலின் எந்த ஒரு அல்லது சில சமூக சமூகங்களின் முன்னேற்றமும் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்காது. ஒவ்வொரு சமூகமும் இந்தியத் தாய்க்கு ஒவ்வொரு அங்கமாகும். அவற்றுள் எந்தச் சமூகம் பிற்போக்கான நிலையுற்றிருப்பினும் இந்தியத் தாயின் அங்க ஹீனத்தையே காண்பிக்கும். ஒரு அங்கத்திற்கு ஏற்பட்ட இன்னல் மற்றவற்றிற்கும் இன்னலையே கொடுக்கும். தேகத்தில் தோன்றின ஒரு கொப்புளத்திற்கு மருந்திட்டு சௌக்கியம்செய்து தேகத்தில் பாதை ஏற்படா வண்ணம் செய்யவேண்டுவது, கை, வாய், கண், கால் முதலிய மற்ற எல்லா அங்கத்தினது கடமையேயாகும். அதைக் கவனியாது தனித்தனி நலங்கருதி, சோம்பலில் தோய்ந்து, வாளாயிருப்பின் ஹீனமேற்பட்டுள்ள அங்கமல்லாது மற்றவையும் துன்பமடைய நேரும். நமது தேசத்தில் தேசியப்பற்று விருத்தியாக வேண்டுமாயின், நமக்குள் ஒற்றுமையும், சமத்துவமும், சகோதரத்வமும் விருத்தியாய் நம் நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின், நசிந்தும் மாய்ந்திருக்கும், தாழ்த்தப்பட்ட, பின்னணியிலுள்ள சமூகங்களும் முன்னணியிலுள்ள சமூகங்களின் நிலைக்கு வரவேண்டும். இந்தியத் தாயின் அங்கமான ஒவ்வொரு சமூகமும் மேன்மையடையவேண்டியது அவசியம். இஃது நாம் நினைக்கும் க்ஷணத்தில் செய்து முடிக்கக் கூடிய காரியமல்ல. இதற்காக அதிக தீவிரமாய்ப் பிரயாசைப்பட்டுத்தான தீரவேண்டும். சமூக வித்தியாசங்களை வளர்க்காமலே சமூக முன்னேற்றத்தையும் சமூகங்களின் சகோதரத்துவத்தையும் வளர்க்கவேண்டும். நமது செங்குந்த சமூகமும் மற்ற சமூகங்களைப் போலவே முன்னணியை நோக்கிச் செல்லவேண்டும்.



ஆனால் தேசிய உணர்ச்சி நாடெங்கும் பரவி வருவதாகக் காணப்படும் இக்காலத்தில் அதற்கு விரோதமான இச்சமூக உணர்ச்சியை ஏன் கிளப்பவேண்டுமென்று சிலர் கேட்கலாம். அது சுருங்கக் கூறுமிடத்து, "நம் தேசத்துத் தற்போதைய நிலைமையை நன்குணராதாரும், உணர்ந்தும் இத்தகைய இயக்கங்களால் தமக்குப் பெரு நஷ்டமுண்டாகுமெனக் கருதியோரும் ஆகிய இவ்விரு திறத்தாரது கூற்றேயாகும். நம் நாட்டில் சில சமூகங்கள் போதிய முன்னேற்றமடைந்திருக்கின்றனவென்றாலும் பல பின்னணியில் கிடக்கின்றன. நமது பரத கண்டமானது உலகத்திலுள்ள மேன்மைபெற்ற பிறதேசங்களிடையே நன்மதிப்பும் சமத்துவமும் பெறக்கூடிய நிலைமைக்கு வரவேண்டுமென்ற எண்ணம் உண்மையிலேயே முன்னேற்ற மடைந்துள்ள சமூகத்தாருக்கு இருந்திருக்குமேயாயின பின்னணியிலுள்ள பல சமூகங்களும் இப்போதுள்ள கேவலமான நிலைமையில் இருந்திருக்கவே முடியாது; அவைகள் வருஷங்களுக்கு முன்னமே முன்னுக்கு வந்திருக்கும். அப்படியில்லாமைக்குக் காரணம் மக்கள் வாழ்க்கைக்கு அவசியம் வேண்டப்படுவதாகிய கல்வி, கடவுள் வழிபாடு முதலியவற்றிலும் ஒருவர்க்குரிய சுதந்திரம் மற்றொருவர்க்கில்லையெனச் சுயநல வாதிகளால் கடவுளோடும் சமயத்தோடும் இணைத்து அமைக்கப்பட்டுள்ள சாதி வித்தியாசமேயாம்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்—சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையால்."

என்னும் ஆன்றோர் மொழியை மறக்க வல்லார் யார்?

ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, முதலிய பல நாடுகளிலும் பல பிரிவினர் இருக்கின்றனரேயன்றி நம் தேசத்திலுள்ள வேற்றுமைகள் எத்தேசத்திலுமில்லை. ஆங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் எல்லா வகையிலும் சம உரிமையும் சுதந்திரமும் கொடுக்கப்படுகின்றன. அறிவை விளக்கும் கல்வியிலும் சம உரிமை மறுக்கப்படும் இந்நாட்டில் முன்னேற்றமடைந்துள்ள சமூகங்களிடை முன்னேற்றமடையாத சமூகங்களுக்கு நம்பிக்கையும் நல்லெண்ணமும் எவ்வாறு உண்டாகும்? நம் நாடு மேன்மையடைய வேண்டுமாயின் அதன் அங்கங்களாகிய ஒவ்வொரு சமூகமும் மேன்மையடைந்தே தீர வேண்டும்.

அஃதில்லாதபோது பேசும் தேசியப் பேச்சு பயனற்ற பேச்சு. பின்னணியிலுள்ள சமூகங்களின் முன்னேற்றத்திற்கு அரசாங்கத்தார் உதவியும், ஏனைய சகோதர இனத்தாரது ஒத்தாசையும் வேண்டுமாயினும் அவரவரது முயற்சியே மிகுதியுமிருக்கவேண்டும். "முயற்சி திருவினையாக்கும்," "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது மறக்கக்கூடாது. நமது சகோதர சமூகங்களின் நிகழ்ச்சிகளை நாம் அறிவது அவசியம்.

நமது சகோதர சமூகத்தினரான தேவாங்கர் மிகுந்த ஊக்கத்துடனும், சிறப்புடனும் தங்களது மகாநாட்டைச் சென்ற திங்கள் கோயம்புத்தூரில் நடத்தினர். அம் மகாநாட்டிற்கு, மைசூரிலிருந்தும், ஆந்திர தேசத்திலிருந்தும் இன்னும் பல இடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஆண் பெண், இருதிறத்தினரான பிரதிநிதிகள் வந்து குழுமினர். இந்த இரண்டாவது அகில இந்திய தேவாங்கர் மகாநாட்டிற்கு உயர் திருவாளர் பி. டி. குமாரசாமி செட்டியார் தலைமை வகித்துத் தலைமைப் பேருரையை இனிது நிகழ்த்தினர். அதன் பின்னர் தேவாங்கர் வாலிபர் மகாநாடு திருவாளர் புட்டண்ணா அவர்கள் தலைமையின்கீழ் நனி நடைபெற்றது. உணர்ச்சியுடைய, வாலிபர்கள் ஊக்கத்துடன் குழுமி பல அரிய தீர்மானங்களை நிறைவேற்றினர். சமூக சீர்திருத்த விஷயமான தீர்மானங்களைப்பற்றி மிக ஊக்கமாக பேசப்பட்டது மிகவும் குறிப்பிடத் தக்கது. மிக்வும் முக்கியமானவற்றை ஈண்டு குறிக்கின்றோம்.

1. ஆண், பெண் குழந்தைகட்கு ஆரம்பக் கல்வியை இலவசமாகவும், கட்டாயப் படிப்பாகவும் செய்யவேண்டும்.

2. ஒவ்வொரு தேவாங்க வாலிபனும் தனது நாட்டு மொழியுடன் தாய் மொழியையும் எழுதப் படிக்கத் தெரிந்துகொள்ளவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

3. தேவாங்க வாலிபர்கள் உடற்பயிற்சி சங்கங்கள் ஏற்படுத்தி நமது தேகத்தை போற்றி பயிற்சிகள் செய்யவேண்டும்.

4. துணி நெய்தல் போன்ற கைத்தொழிலில் தேவாங்க சிறுவர்களை பயிற்றுவிப்பதற்

காக, சில முக்கியமான இடங்களில் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டுமென இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

5. தேவாங்க வாலிபர்கள் கைத்தொழில், கல்வியில் ஊக்கத்துடன் பயிற்சியடைவதற்காக, அரசாங்கத்தார் சில விசேஷ உதவிச் சம்பளங்களை ஏற்படுத்தவேணுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

6. பிரசாரம் செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு, வாலிப சங்கத்தின் கிளை, ஒவ்வொரு இடங்களிலும் ஏற்படுத்தி, சென்னையிலுள்ள தாய்ச் சங்கத்துடன் இணைக்கவேண்டும்.

7. குழந்தைக் கலியாணம், பொருத்தமில்லாக் கலியாணம், ஒரு மனைவி இருக்கும்போதே மற்றொரு பெண்ணைக் கலியாணம் செய்வது, கலியாண காலங்களில் அனாவசியமாக வீண் செலவு செய்வது முதலியவைகளை இம்மகாநாடு அழுத்தமாகக் கண்டிக்கிறது.

8. தேவாங்க சமூகத்தினருக்குள்ளேயே உள்ள பலவேறு கிளைப் பிரிவினருக்குள்ளும் கலப்பு விவாகங்கள் நடத்துவதற்கும் வேண்டிய தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்றும், அப்படி நடந்தால் வன்மம் செய்யாதிருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கிறது.

9. குழந்தையுள்ள அல்லது இல்லாத விதவைகள் மறுமணம் செய்துகொள்வதை இம்மகாநாடு ஆதரிக்கிறதுடன், அப்படி நடக்கும் கலியாணங்களுக்கு எந்த விதமான குற்றங்களும் கற்பிக்கக் கூடாதெனவும் தீர்மானிக்கிறது.

10. 'மகிமைப்பணம்' என வசூலிக்கப்படும் நிதியை, தேவாங்க வியாபாரிகள் கல்வி விஷயத்திற்காகச் செலவழிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கின்றது.

11. தேவாங்க மரபினர்க்குள் மதுவிலக்கு பிரசாரம் புரிய அரசாங்கத்தார் பண உதவி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறது.

12. நமது சமூக குருக்கள்மார்களையே கூடிய மட்டும் நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய தீவிர முயற்சிகளை எடுக்கவேண்டும்.

13. அரசாங்க உத்தியோகங்களில் தேவாங்க சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்னும் அதிகமான பங்கு கொடுக்கும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

தேவாங்கர் மகா நாட்டில் மற்றொரு முக்யமான நோக்கத்தக்க விஷயம் என்னவெனில் பெண்கள் மகாநாடாகும். இஃது பெங்களூர் திருமதி லக்ஷ்மிதேவியம்மாள் அவர்கள் தலைமையில் கூடியது.

இரண்டாவது அகில இந்திய தேவாங்க ஸ்திரீகள் மகாநாட்டின் உபசரணைக் கமிட்டித் தலைவி திருமதி லலிதா பாலசுந்தர அம்மாள் அவர்கள் செய்த உபசரணைப் பிரசங்கம் பின் வருமாறு :—

சீமாட்டிகளே! சகோதரிகளே! பிரதிநிதிகளே! கோயமுத்தூர் தேவாங்க ஸ்திரீகளின் சார்பாக இம்மகாநாட்டிற்கு நான் உங்களை மனப்பூர்வமாய் வரவேற்கிறேன். தேவாங்க குல சீமாட்டிகளே! நாங்கள் அழைத்ததற்கு உடன்பட்டு உங்கள் அருமையான காலத்தை அர்ப்பணம் செய்து வந்திருக்கின்றீர்கள். மற்ற மரபினரைச் சேர்ந்த சீமாட்டிகளே! உங்கள் நல்வரவால் எங்கள் மகாநாடு பெருமை அடைந்தது. நம் தேவாங்க குல சரித்திரத்துள் இது ஓர் சிறந்த திருநாள். நமமரபு ஸ்திரீகளின் சீர்திருத்தத்திற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை ஆலோசிக்க இங்கே நாம் கூடியிருக்கிறோம். நம் மரபினர் நெடுங்காலமாய்க் கஷ்டப்பட்டு வெளிவேஷம் இல்லாமலும் நம்முடைய நெசவுத் தொழிலை வீட்டிற்குள்ளேயே கவனித்துவந்து உலக விவகாரங்களில் தலையிடாததுபற்றி இச்சமயம் மற்ற ஜாதியர்களைவிட செல்வத்திலும் சமுதாய மேம்பாட்டிலும் தாழ்மை அடைந்திருக்கிறோம். காலத்துக்கேற்றபடி நாமும் நம் பழக்க வழக்கங்களில் சீர்திருத்தம் அடைதல்வேண்டும். ஆனால், நமக்குக் கல்வி இல்லை. சமுதாய வாழ்க்கையிலும் ராஜாங்க விஷயத்திலும் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் நம்முடைய பிள்ளைகள் தாய்ப் பாஷையிலும் ஆங்கிலத்திலும் நன்கு பயிற்சி அடைதல் வேண்டும். நம் ராஜாங்கத்தார் ஆங்கில தேசத்தாராய்ப் பதாலும், அம்மொழி இந்தியா முழுவதுக்கும் பொதுவாக வழங்கப்படுவதாலும் ஆங்கிலக்கல்வி மிக்க அவசியம். நம் பிள்ளைகளுக்குக் கட்டாயக்கல்வி ஏற்படுத்தல் அவசியம், மற்றும் தேவாங்க மரபினருடைய ஒவ்வொரு குடும்பத்தாரும் ஆங்கில உயர்தர கல்வியில்



ஒரு பிள்ளையையாவது பழக்கம் செய்தல் வேண்டும். உயர்தரக்கல்வியிலே நம்பிள்ளைகளை படிப்பிப்பதற்குப் பொருள் தேவை, நம்குல ஐசுவரியவான்கள் சிறு பிள்ளைகள் நன்மைக்காக முன்வரல் வேண்டும். பரோபகாரப் பிரபுக்கள் நம்முடைய மரபினருக்கு வேண்டிய சங்கங்களையும், பள்ளிக்கூடங்களையும், அன்னசாலைகளையும், கட்டி உபசரிக்கவேண்டும்.

கல்வி விஷயத்தில் நம் பெண்கள் மற்ற ஜாதியாரைவிட மிகவும் பின்னடைந்திருக்கிறார்கள். குடும்ப வாழ்க்கைக்குத் துணையாயுள்ள கல்வியை நம் பெண்கள் அடைதல் வேண்டும். சுகாதாரம், சிசு சம்ரக்ஷணை, மாதாக்களுக்குரிய முக்கிய விதிகளை அவர்களுக்குப் போதிக்கவேண்டும். மற்ற ஜாதி ஸ்திரீகள் படிப்பில் தேர்ந்திருப்பதுமல்லாமல் ராஜாங்கத்தாரால் கௌரவ உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்பெண்கள் இப்படிப்பட்ட பெருங்கல்வியைப்பெறாவிட்டாலும் மேற்குறிக்க குடும்ப வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியையாவது பெறுதல் அத்தியாவசியம்.

நாம் பரம்பரையாக நெசவுத் தொழிலைக் கைக்கொண்டவர்கள். நம் தொழில் அபிவிருத்தி மிக்க முக்கியமானது. சுதேச துணிகளை அதிகமாகப் பரவிவருகிற இக்காலத்தில் நாம் புதுத்தறிகளைக்கொண்டு விசித்திரமான ஜவுளிகளை உண்டாக்க வேண்டும். இது வல்லாமல் பிள்ளைகள் வைத்தியம், யந்திர சாஸ்திரம், கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், நியாய வாதம் முதலிய பல்வேறு தொழில்களிலும் பயிற்சி அடைதல் வேண்டும் சுய உதவியே பெரிது. அதுவே நம்மை மேம்படுத்தும்.

பெரும்பாலும் நம்மவர்களில் புத்தியறிந்த பிறகே பெண்களுக்கு விவாகம் செய்கிறோம். குறைந்தது பிள்ளைகளுக்கு 20 வயதும் பெண்ணுக்கு 15 வயதும் விவாகத்திற்கு உரிய நியாயமான பருவமாகும். அனேக நாள் கலியாணம் நடத்துவதால் விபரீதப் பணச்செலவு நேரிடுகிறது. அநேக ஏழைக் குடும்பங்களுடைய ஜீவனத்தொழில் பல நாட்களுக்குத் தடைபடுகிறது. ஆகவே, இம் மகாநாட்டில் கல்யாணங்களை 1 அல்லது 2 நாட்களில் நடத்தத் தீர்மானிக்கவேண்டும். மற்றும் நாம் இப்போது கைக்கொள்ளும் உற்சவங்களையும் களியாட்டுகளையும் சுருக்கவேண்டும். மேற்கூறிய வாறு செலவைச் சிக்கனப் படுத்துவதால் குடும்பங்கள் நன்மையடைந்து லௌகிக விருத்தியில் மேம்படுவார்கள்.

தேவாங்க மரபினருக்குள் ஒற்றுமை உண்டு பண்ணினால் நாம் மிக்க உன்னத பதவியை அடையக்கூடும். நம்மரபில் இப்பொழுது இருக்கும் பல பிரிவுகளுக்குள் சமபோஜனமும் கல்யாண சம்பந்தமும் இல்லை. உட்பிரிவுகள் ஒழியவேண்டும். சில அற்ப விஷயங்களைக் குறித்தும் கோயில் சம்பந்தமான விவகாரங்களைக் குறித்தும் நம்மவர்கள் அநியாயமாய்ப் பிளவுபடுகிறார்கள். இத்தகைய வேறுபாடுகள் சீக்கிரம் ஒழியவேண்டும் இத்தகைய ஒற்றுமை நாம் அடைய ஸ்திரீகள் உதவி அத்தியாவசியம்.

நம் குல அபிவிருத்தியானது தாய்மார்கள் தம் குழந்தைகளைப் பயிற்சி செய்யும் முறையைப் பொறுத்திருக்கிறது. மக்களை தாலாட்டும் கைகளே தரணியாளுகின்றன என்னும் பழமொழியே இதன் உண்மையை நன்கு விளக்குகிறது. தாய்மார்கள் தம் பிள்ளைகள், புகைபிடித்தல், மதுபானம் செய்தல் முதலிய துர்வழக்கங்களைக் கையாடாமல் பாதுகாக்க வேண்டும் மதுபானம் முதலிய மயக்க வஸ்துக்களை உபயோகிப்பதால் பணம் அழிவதோடு தேகமும் கெட்டுப்போகிறது. இது விஷயத்தில் குடும்பத்திலுள்ள பெரியவர்கள் வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பிள்ளைகள், பெற்றோர், பெரியோர் முதலியவர்களுக்கு மரியாதை செய்து பயபக்தியோடு வாழ்ந்து நம் குலப்பெருமையை உயர் காட்ட வேண்டும். இவ்வித சீர்திருத்தங்களை நாம் அநுசரித்து நன்மை அடைய ஸ்ரீமகாதேவி சௌடாம்பிகை அம்மையை நாம் எல்லோரும் மனதார வேண்டுவோமாக. (தொடரும்).

E.V.S.

---

லண்டன் நகரத்திலிருந்து ஒரு பத்திரிகாசிரியர் அயர்லாந்தில் ஒரு பட்டணத்திலுள்ள தமது நிருபருக்கு 'உமது ஊரில் மறு கலகம் நடக்கிறதாகக் கேள்வி அதன் விபரத்தை தந்திமூலம் அறிக்கவும் என்று ஒரு தந்தியனுப்பினர். அதற்கு அந்த நிருபர் 'எங்களூரில் கலகமில்லை. வேண்டுமானால்கூடிய சீக்கிரம் ஒரு கலகம் நடக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்' என்று பதில் தெரிவித்தாராம்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## திருநெல்வேலி

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

மேற்படி சங்கத்தின் ஆதரவில் திருநெல்வேலி டவுன் பெரிய தெரு முருகன் பஜனை மடாலயத்தில் பொதுக் கூட்டமொன்று நடந்தது.

அக் கூட்டத்திற்கு ஸ்ரீ எஸ் பழனியாண்டி முதலியார் பி.ஏ., பி.எல். அவர்களின் பேரில், பிரபல வியாபாரியும் மாஜி முனிசிபல் கவுன்சிலருமான ஸ்ரீ மு. முருகாவுடையான் முதலியார் தலைமை வகித்தார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களான ஸ்ரீ. பி. செ. மாணிக்கவாசக முதலியார், காஞ்சிபுரம் பச்சையப்பன் கலாசாலை தமிழ் பண்டிதர் ஸ்ரீ திருஞானசம்பந்த முதலியார் இருவரும் "செங்குந்த மரபின் முன்னேற்றம்" என்ற விஷயத்தைப்பற்றி நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

### தீர்மானங்கள்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைகள் இந்த ஜில்லாவில் பல இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்றும், கல்வி அபிவிருத்திக்காக நிதி ஒன்று சேர்க்க முயற்சிக்க வேண்டுமென்றும், செங்குந்தர் மரபின் முன்னேற்றத்திற்காக அரும்பெரும் பாடுபட்டு உழைத்து வரும் "செங்குந்தமித்திரன்" பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமென்றும் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

### வீரவநல்லூர், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் ஆதரவில் 30-5-29௳ மாலை 8½ மணிக்குச் செங்குந்தர் பொதுக்கூட்டம் திரு ஆ. மு. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. செங்குந்தர் பஜனைக் கோஷ்டியாரால் தேவாரம் பாடப்பெற்ற பிறகு தலைவர் அவர்கள் தலைச்சங்கப் பிரசாரகர்களான அமைச்சர் திரு. பி.செ. மாணிக்கவாசகமுதலியார், காஞ்சிபுரம் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. திருஞான சம்பந்தமூர்த்தி முதலியார், திருநாகேஸ்வரம் திரு. சோமசுந்தர முதலியார் ஆகிய மூவரையும் சபையோருக்கு அறிமுகம் செய்வித்துப்பேசும்படி கேட்டுக்கொண்டனர். முதலில் திரு. திருஞான சம்பந்தமூர்த்தி முதலியார் 'எச்சமயங்களுக்கும் தலையாய் விளங்கும் சைவசமயத்தின் மேன்மை' என்பதுபற்றிப் பேசினார்கள். பிறகு தலைச்சங்க அமைச்சர் திரு. மாணிக்கவாசக முதலியார் உரத்த குரலில் தலைவர் அவர்கள் ஆரம்பத்தில் சென்னையிலுள்ள தலைச்சங்கத்தார் உறங்கியிருந்த நம்மவர்களை எழுப்பினார்கள் என்பது பொருந்தாதும் தலைச்சங்கம் நிறுவி மூன்று வருஷங்கள்தான் ஆயின. இவ்வூர்ச் சங்கமோ நிறுவப்பெற்று 12 ஆண்டுகள் ஆகின்றன. நல்ல வேலை செய்து வருவதோடு சங்கத்திற்கென பிரத்தியேகமான கட்டடமும் இராப்பாடசாலையும் அமைந்திருப்பதை இங்குதான் கண்டோம். இவ்வூர்ச்சங்கமே எங்களுக்கு வழிகாட்டியாயிருக்கிறது என்றும், செல்வத்தின் உண்மைத் தத்துவத்தை யுணர்ந்து நம் குல முன்னேற்றத்திற்காக தாராளமாய்ச் செலவுசெய்துவரும் திரு. சபாபதி வள்ளலார் அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் முதலிய பெரியோர்கள் பண்டைப் புகழ்வாய்ந்த நம்மவர்கள் தற்போது அடைந்துள்ள கேவல நிலையைக் கண்டு சகியாது எவ்வாறாயினும் நமது சமூகத்தை சீர்திருத்துவதே தமது கடமை என உழைத்துவருகிறபடியால் அவர்களைப் பின்பற்றி நடத்தல் நமது கடமை என்றும் குறிப்பிட்டார்கள். தலைவர் தமது முடிவுரையில் நமது ஈரோடு மகாநாட்டில திரு. சபாபதி வள்ளலாரைக் கண்டு அவரது அன்பு நிறைந்த மணி வார்த்தைகளைக் கேட்டும் அமைச்சர் திரு. ம. சண்முகசுந்தர முதலியாரவர்கள் யாதொரு கைம்மாறும் கருதாது ஆயுள்வரை உழைத்து வருவதாகச் சொல்லிய அன்புமொழிகளைக் கேட்டும் நம்மவர் அனைவருக்கும் அவர்களிடத்து முழு நம்பிக்கை உண்டாயிருக்கிறபடியால் அவர்களைப் பின்பற்றி செங்குந்தர்கள் அனைவரும் நடத்தல் அவசியமென்று கூறி முடித்தார்கள்.

கடைசியாக இச்சங்க உபகாரியதரிசி திரு. சி. ஆ. சிதம்பர முதலியார் அவர்களால் தலைவரும் பிரசாரகர்களும் மாலை சூட்டப்பெற்றனர். சந்தனதாம்பூலம் வழங்கப்பெற்று சபை இனிது கலைந்தது.

சி. ப. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

## சேலம் ஜில்லா

### அம்மாபேட்டை செங்குந்த இளைஞர் அபிவிருத்தி சங்கம்.

அம்மாபேட்டை செங்குந்த இளைஞர் அபிவிருத்தி சங்கத்தின் 3-வது கூட்டம் 5-6-29-ல் சந்திரமூர்த்தி சுவாமி மடத்தில் கூடிற்று. அவ்வமயம் அநேகர் திரளாக வந்திருந்தனர். சங்கத் தலைவர் முகவுரை முடிந்தபின் "வாலிப ரியக்கம்" என்னும் விஷயத்தைப்பற்றி வாலிப சங்கத் தலைவர் ஸ்ரீ. டி. ஆர். அருணாசல முதலியார் பேசுகையில், வாலிபர் முன்னேற்றத்திற்கு பால்ய விவாகமும், கல்வி இல்லாமையுமே பெரிய தடையாய் இருக்கிறதென்றும், வாலிபர்களே சமூகத்தின் உயிர் என்றும், இன்னும் பல அரிய விஷயங்களைப்பற்றியும் தெளிவாக எடுத்து உரைத்தார். ஸ்ரீமான்கள் செ. பழனியாண்டி முதலியார், மா. முருகேச முதலியார், எஸ். அர்த்தனாரி முதலியார், ஆர். மாணிக்க முதலியார், ஆட்டையாம்பட்டி வி. மாரிமுத்து முதலியார், இவர்கள் வாலிப ரியக்கத்துக்கு ஒற்றுமை, தேகப்பயிற்சி, விடாமுயற்சி, என்னும் அரிய விஷயத்தை யொட்டிக் கூறினர். ஸ்ரீ. கே. ஆர். மாணிக்க முதலியாரும் மற்றுமுன்னவர்களும் பேசுகையில் பத்திரிகையை ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டுமென்றும், பேசிய பின்னர் ஸ்ரீ. கே. வி. முருகேச முதலியார் பேசுகையில் வாலிபர்களுக்கு தேகாப்பியாசம் அவசியம் என்றும், உதாரணமாக நமது உபகாரியதரிசி ஸ்ரீ. எஸ். அர்த்தனாரி முதலியாரைப் போல் மிகுந்த பலசாலிகளாக இருக்க வேண்டுமென்றார், நாம் அவரை எப்படி வேண்டுமென்றாலும், அவருடைய பலத்தை பரிக்ஷை செய்து பார்க்கும்படியாக தயாராய் இருக்கிறார் என்றும், தொண்டர் படை ஒன்று சேர்க்கவேண்டுமென்றும் சொல்லி முடித்தார்.

### செங்குந்தர் குலாபிமானச் சங்கம்

### வெண்ணந்தூர்

வைகாசி௴ 2௳ மாலை 5-மணிக்கு முத்துக்குமாரசாமி கோயிலில் இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று திரு. S சுப்பிரமண்யமவர்கள் தலைமையின் கீழ்க்கூடிற்று. முதற்கண் கடவுள் வாழ்த்துக் கூறி முடிந்தவுடன், திருவாளர்கள் எஸ். ஆர். சின்னுசாமி முதலியாரும், எ. வி. ஆறுமுக முதலியாரும் கந்தபுராணத்தை யொட்டி வெகுவிரிவாக நமது பூர்வீக உன்னத நிலையையும் தற்போது நம்மவர்களுக்குக் கல்வியில்லாத குறைபாட்டையும் பற்றிப் பேசி கல்விநிதிச்சீட்டின் அவசியத்தைப் பற்றியும் கூறினார்கள். பின்னர் தாம்பூலாதி வழங்கப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 9-மணிக்கு முடிவு பெற்றது எனக்காரியதரிசி எஸ். ஆர். சின்னுசாமி முதலியார் எழுதுகிறார்.

1-7-29 பிற்பகல் 5 மணிக்கு முத்துக்குமாரசுவாமி கோவில் ஆபரணத்தில் திரு. பூ. அ. ஷண்முக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. அவ்வமயம் குலப் பிரமுகர்களும் சிறுவர்களும் பெரியவர்களுமாக சுமார் 300 மக்களுக்கு அதிகமாக வந்து குழுமினார்கள். முதற்கண் வாலிபர்கள் கடவுள்துதி இன்னிசைக் கருவியுடன் கூறினார்கள். பிறகு தலைவர் முகவுரையாகத் தற்கால முற்கால நிலைமையையும் கல்வியறிவின்மையால் அரசியல், உலகியல். மனிதவாழ்க்கை முதலிய துறைகளில் ஒன்றும் தெரியாது வாளாவிருக்கும் தன்மையைப் பற்றியும் வெகு விரிவாகப் பேசினார். இரண்டாவதாக திரு. எஸ். ஆர். சின்னுசாமி என்பவர் நமது முன்னேற்றம் என்னும் விஷயமாக நமது குலமக்கள் அதிகமாகப் பகலில் தொழில் செய்துதீர வேண்டியவர்களாய் இருக்கிறபடியால் இவ்வூரில்சங்கத்தின் மூலதனத்தைக்கொண்டு இராத்திரிப் பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி அதில் இலவசமாகக் கல்விபோதிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று பேசினார். பிறகு திரு. எ. வி. ஆறுமுக முதலியார் செங்குந்தப் புலவர்களின் வீரதீரச்செயல்களை எடுத்துப்பேசி வெகு விஸ்தாரமாகப் பேசினார். பின்னர் கீழ்க்கண்டவாறு இரண்டொரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இனிது கலைந்தது.

1. இவ்வூரில் நடைபெற்றுவரும் கலைமகள் கழகத்தின் தலைவர் இராபுராம் திருவாளர் பொன்முடி எஸ். பொன்னுசாமி செட்டியார் காலக்குப்போனவர் திடீரென அகாலமாய் காலஞ் சென்றதைக் குறித்து இச்சங்கம் வருந்துகிறது.

2. நமது செங்குந்த வாலிபர்கள் பகலில் தொழில் செய்து கொண்டிருக்கும் நமது குலமக்களுக்கு இராத்திரி வேளைகளில் கல்வி போதிக்கச் சங்கத்தின் மூலதனத்தைக்கொண்டு இராத்திரிப் பள்ளிக்கூடம் ஒன்று உடனே ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறது.

3. செங்குந்தர் புத்தகாலயம் ஒன்று ஸ்தாபித்து அதில் அறிவுவளர்ச்சிக்குரிய நூல்கள் எளியவசனநடையுள்ளதாக தயார் செய்து நம் சிறுவர்களுக்கு உதவவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது.

4. நமது குல வியாபாரிகள் மகமை உண்டியல் முதலிய பணங்களை அநாவசியமான விஷயங்களுக்குச் செலவிடாமல் ஏழைச் செங்குந்தர்களுக்கு கல்வி போதிக்கும் சிறந்த கைங்கர்யத்திற்கு அப்பணத்தைக் கொடுக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

5. செங்குந்தர்களில் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்கிற முறைப்படி அநாவசியமானவீண் செலவுகளை ஒழித்துவிட்டுக்கல்யாணம் முதலிய காரியம் நடத்தவேண்டுமென்று சங்கம் தீர்மானிக்கிறது பிறகு வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபை இராத்திரி 9-மணிக்கு இனிது நிறைவெய்தியது எனக் காரியதரிசி எழுதுகிறார்.

### செங்குந்தரிளைஞர் அபிவிருத்திச் சங்கம்

### அம்மாபேட்டை.

3-7-29-ல் சுந்தரமூர்த்தி மடாலயத்தில் செங்குந்தரிளைஞர் அபிவிருத்தி சங்கம் மிக்க விமரிசையுடன் கூட்டப்பெற்றது. முறைப்படி கடவுள் வாழ்த்து முடிந்ததும் T. K. சோமசுந்தர முதலியார் தலைமை வகித்தார். தலைவர் முகவுரைக்குப் பின்னர் அன்பு என்னும் அரும்பொருளைப்பற்றி பேசக்கிடைத்தோம் அதில் அநேக அறிஞர்கள் தங்களது குறிப்பிட்ட காலத்திற்குள் உதாரணங்களுடன் மிக்க விமரிசையுடன் பேசலுற்றது போற்றத்தக்கது. சங்கச் சேர்க்கைக் கட்டணம் 4 அணுவாகவும் மாதம்பிரதி 2 அணுவாகவும் மாதம் ஒருமுறை சங்கத்தின் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க நிர்வாக கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கடைசியாகத் தலைவர் முடிவுரைக்குப் பின்னர் வந்த ஜனோபசாரத்துடன் சங்கம் இனிது கலைவுபெற்றது என்று இச்சங்க உபயகாரியதரிசி அர்த்தனாரி முதலியார் எழுதுகிறார்.

### வெள்ளிப்பாளையம் செங்குந்தர் நன்னெறிச் சங்கம்

17-7-29 இரவு நம்மவர்களின் நன்னெறிச் சங்கம் கூட்டப்பட்டதும் மூலத்துறையிலிருந்து ஆற்றின் ஒருகரையாய்ச் சிரமத்துடன் வந்துசேர்ந்த நமது சங்க உபயகாரியதரிசி E. V. துரைசாமி முதலியார் நமது முன்னேற்றமும் அதற்குரிய சாதனங்களும் என்ற விஷயத்தைத் தெளிவாகப் பேசியபின் நம்மவர்களின் விவாகந்தோறும் 1¼ ரூ. வீதம் எடுத்து நமது தலைச்சங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்றும்.

வாட்டரிச்சீட்டில் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் ஒரு சீட்டுப்போட வேண்டியது அவஸ்யமென்றும் இச்சீட்டினால் ஏற்படும் தொகையைக்கொண்டு நன்றியுடையவர்கள் அடையும் பல நன்மைகளைப் பற்றிப் பேசினார். நம் ஜில்லாவில் முத்தப் பாளையம் M. R. பெருமாளுக்கு மாதம் 10ரூ. வீதம் கொடுத்துதவத் தீர்மானித்திருக்கிறார்கள்.

E. V. துரைசாமி முதலியார்,
உபயகாரியதரிசி.

## வடஆற்காடு ஜில்லா.

### கோயிலூர்

24-7-29 காலை அசனம்மாபேட்டை திரு. K. S. குப்புசாமி முதலியார், திரு. பு. முருகப்ப முதலியார், தி. அ. சண்முக முதலியார், பு. பொன்னம்பல முதலியார் அவர்களுடன் கோவிலூருக்குச் சென்று இரவு 9 மணிக்கு பஜனைமடத்தில் கூடிய செங்குந்தர் கூட்டத்தில் தி. அ. சண்முகமுதலியார் செங்குந்தர் கல்வி நிலை என்பதைப்பற்றி உபந்நியாசித்தார். திருவத்திபுரம் 25-7-29ல் திருவத்திபுரத்தில் பிரசாரஞ்செய்து அசனம்மாபேட்டை வந்து சேர்ந்தார்.

### வடமணப்பாக்கம்.

5-7-29 இரவு 8 மணிக்கு வடமணப்பாக்கம் செங்குந்தசங்க ஆதரவில் தி. அ. சண்முக முதலியார் பு. முருகப்ப முதலியார் அவர்கள் முறையே செங்குந்தர் கல்விநிதிச்சீட்டு என்பதைப் பற்றியும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திர உபந்நியாசமும் நடைபெற்றது.

### அசனம்மாபேட்டை.

6-7-29 இரவு 9-மணிக்கு திரு ஆரி பசுராம முதலியார் தலைமையில் தி. அ. சண்முகமுதலியார் 'செங்குந்தர்கடமை' என்பதைப்பற்றியும் சு. சுந்தரம் 'கல்வி' என்பதைப்பற்றியும் நடேச முதலியார், T. நரசிம்ம முதலியார் ஆகிய இருவரும் 'கல்வி என்னும் விஷயத்தைப் பின்பற்றி உபந்யசித்தார்கள்.

## தென்னாற்காடு ஜில்லா

### செங்குந்தர் மாணவர் சங்கம் உடையார்குடி காட்டுமன்னார் கோயில்.

8-6-29-ல் இவ்வூர்ச் செங்குந்தர் பொது மடாலயத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அச்சமயம் தி. அ. சண்முக முதலியார், S கந்தசாமி முதலியார் இவர்கள் நமது முன்னேற்றத்தைப்பற்றியும் கல்வியைப்பற்றியும் சொற்பொழிவு நடத்தினார்கள். பிறகு பு. ப. வைத்திலிங்க முதலியார் தலைவராகவும், சி. கணபதி முதலியார் உபதலைவராகவும், அமைச்சர்கள் மு. செ. சின்னதம்பி முதலியார், வே. நடராஜ முதலியார், பொருட்காப்பாளர் அ. பொ. குமாரசாமி முதலியார் ஆகவும், தீர்மானிக்கவும், மாணவர்களின் கல்வி விருத்தியை அனுசரித்து ஒரு பாடசாலை நியமித்தும், மாதாந்த மீட்டிங் நடைபெற வேண்டியதற்கான ஏற்பாடு செய்தும் கூட்டம் கலைந்தது.

## கோவை ஜில்லா

### அவிநாசி தாலுக்கா தமாபாளையம் செங்குந்த வாலிபர் சங்கம்.

வைகாசிமீ 27உ அவிநாசியிலிருந்து குமாரபாளையம் விஜயஞ்செய்த திரு. சடையப்ப முதலியார், வாரணவாசி கருப்பண முதலியார் இவர்கள் முயற்சியால் இரவு 8-மணிக்கு ஆண்டவர் கோயிலில் திரு. மா. பழநியப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. அப்போது 'செங்குந்த வாலிபர் சங்கம்' ஒன்று ஏற்படுத்தி நம் குலத்தவர்களுக்கு மத்தியகாலத்தில் வந்து சேர்ந்த புலால் உண்ணலாகிய அநாசாரத்தை ஒழித்து இனி நாம் சைவாசாரத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றும், மகமைவசூல் செய்யவேண்டுமென்றும், பள்ளிக்கூடம் ஒன்று கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. திரு. வாரணவாசி கருப்பண முதலியார் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வாராயின் இவ்வூர் மிக விமரிசைக்கு வருமென நம்புகிறேன்.

அவிநாசி ரா. சடையப்ப முதலியார்.

## தஞ்சை ஜில்லா

### பாபநாசம் தாலுக்கா உள்ளிக்கடை செங்குந்த வாலிபர் சங்கம்.

21-6-29 தஞ்சை ஜில்லா, பாபநாசம் தாலுக்கா உள்ளிக்கடை செங்குந்தர் தெற்குப் பிள்ளையார் கோவிலில் கூடிய கூட்டத்தில் நாட்டாண்மை திரு. ம. கந்தசாமி முதலியார் தலைமையின் கீழ் தலைச்சங்கப் பிரசாரகர் திரு. சொ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் 'தலைச்சங்கத்தின் நோக்கம்' செங்குந்தமித்திரனின் அவசியம், சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான கல்வி, ஒற்றுமை முதலியவற்றைக் குறித்து அரிய உபந்யாசம் செய்தார்கள். பிரசாரகர் அவர்கள் மாலை சூட்டப்பெற்று தலைவர் முடிவுரையின்பின் கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது நிறைவேறிற்று.



22-6-29 காலை 9-மணிக்கு திரு. வா. சத்திவேல் முதலியார் அவர்கள் இல்லத்தில் டை நாட்டாண்மைக்காரர் தலைமையில் மற்றொரு கூட்டம் கூடிற்று. அச்சமயம் 'உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்' என சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று நிறுவப்பெற்று அச்சங்கத்திற்கு நாட்டாண்மை திரு. ம. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைவராகவும், திரு. சத்திவேல் முதலியார் அவர்கள் உபதலைவராகவும், திரு. சி. க. சாமிநாத முதலியார் அவர்கள் உபகாரியதரிசியாகவும், திரு. கா. வையாபுரி முதலியார் அவர்கள் பொருட்காப்பாளராகவும் திருவாளர்கள் மு. சாமிநாத முதலியார், நா. க. கோபாலசாமி முதலியார், பெ. சாமிநாத முதலியார், ம. குருசாமி முதலியார், ம. மாரிமுத்து முதலியார், கா. வாசுதேவ முதலியார், ம. சோமசுந்தர முதலியார் ஆகிய எழுவர் நிர்வாக சபை அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். பகல் 12-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

சி. க. சாமிநாத முதலியார்,
காரியதரிசி.

22-6-29உக்குச்சரியான சுக்கில ஆனிமீ 29உ பாபநாசம் தாலுக்கா உள்ளிக்கடை கிராமம் செங்குந்தர் பஜனைமடத்தில் ஏற்படுத்தியிருக்கும் செங்குந்தர் சங்கத்தில் கீழ்க் கையொப்பமிட்டுள்ள நாங்கள் எழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

நாங்கள் சமூக ஒற்றுமை, சமூக முன்னேற்றம், கல்வி, சமூக சீர்திருத்தம் முதலான காரியங்களில் சர்வ வல்லமையுள்ள கடவுள் சாக்ஷியாக மனோ ஒற்றுமைக்குப் பங்கம் வாராமல் டை சங்கத்தில் ஒத்துழைத்தும் தலைவர் முதல் நிர்வாகஸ்தர்களின் ஞாயமான கட்டுப்பாட்டிற்குப் பங்கம் வாராமல் பாதுகாத்துவரக் கடமைப்பட்டும் எங்களுக்குள் எவ்வித அறியாமையால் மனஸ்தாபங்கள் ஏற்படாமலும் நடந்து மேற்படி சங்கத்தை உன்னத நிலைக்குக் கொண்டு வருவோமாகவும், இந்த உடன்படிக்கைக்கு மாறுதலாக நடந்தால் சங்கத்தின் அதிகாரஸ்தர்கள் ஏற்படுத்தும் கண்டிஷனுக்கும் கட்டுப்பட கடமைப்பட்டுள்ளோம் என்று சம்மதப்பட்டு கையெழுத்துப் போட்டிருக்கிறோம். இப்படிக்கு,

வா. சி. முருகைய முதலியார்
ச. ம. கந்தசாமி முதலியார்
V. S. குமாரசாமி முதலியார்
G. சாமிநாத முதலியார்
M. S. சிவகுருநாத முதலியார்
பெ. ராமச்சந்திர முதலியார்
ம. ஆ. நாராயணசாமி முதலியார்
செ. கனகசபை முதலியார்
வே. முருகைய முதலியார்
சா. கோவிந்தராஜ முதலியார்
ம. கு. சாமிநாத முதலியார்
க. ஆறுமுக முதலியார்
கா. சாமிநாத முதலியார்
சா. ராமையா முதலியார்
செ. வேது முதலியார்

## திருச்சி ஜில்லா

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்

நாளது 1929 ஆு ஜூன் மீ 16உ மாலை 3-மணிக்குச் சங்கக்கூட்டம், செங்குந்தர் பொதுச் சாவடியில் திரு. R. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்குச் செங்குந்தர்களும் இதர பிரபலஸ்தர்களும் பெருங்கூட்டமாகக் குழுமியிருந்தனர். பல அறிஞர்களது உபந்நியாசம் நடைபெற்ற பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

**தீர்மானங்கள்**

(1) இச்சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவை நாளது மீ 30உ யன்று சென்னை தென்னிந்திய சங்கத்தின் நிர்வாக அங்கத்தினரும் வழக்கறிஞருமான உயர்திருவாளர் V. இரத்தின முதலியார், B.A., B.L., அட்வகேட் அவர்களது தலைமையில் நடத்தவேண்டியது.

(2) குடியர்களது உபத்திரவத்தாலும் பாதைகளில் குடிகாரர்கள் சேர்ந்து கலகம் விளைவிப்பதாலும் மாலை வேளைகளில் இவ்வூருக்கு வெளியில் பெண்பிள்ளைகள் சென்றுவர அஞ்சுவதாலும் பலவிதத்திலும் இவ்வூர் வாசிகளுக்குத் தொந்தரவு விளைவித்து வருவதாலும், பக்கத்துக் கிராமங்களில் இரண்டு மூன்று கள்ளுக்கடைகளிருப்பதாலும் இவ்வூருக்கு கள்ளுக்கடை வேண்டியதே இல்லை. ஆதலால் இவ்வூர்க் கள்ளுக்கடையை மூடிவிடும்படி காருண்ய மிகுந்த கவர்ன்மெண்டாரவர்களை மிகவும் வணக்கத்துடன் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(3) இவ்வூருக்கு சமார் 20 மைலுக்கு மேம்பட்ட இடங்களில், சிவில், கிரிமினல், கோர்ட்டுகளிருப்பதாலும், இவ்வூர் வாசிகள் டை கோர்ட்டுகளுக்குப் போய்வர அதிகச் செலவு ஏற்படுவதாலும் ஏழைக் கிராமவாசிகளது சிக்கன முறையை உத்தேசித்தும் கிராம ஜனங்களின் உண்மை நிலையை அறிந்து உள்ளபடி நியாயம் கிடைப்பதற்கு ஏதுவான முறையிலும் இந்தக் கிராமத்திற்கு ஓர் பஞ்சாயத்துக்கோர்ட் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென காருண்யமிகுந்த கவர்ன்மெண்டாரவர்களை இச்சங்கம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியதும் தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 7-மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

P. மாரியப்ப முதலியார்.
காரியதரிசி.

### உன்னியூர் செங்குந்தர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா.

30-6-29உ இச்சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா தலைவர் உயர்திருவாளர் V. இரத்தின முதலியார் B.A., B.L., அட்வொகேட் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. திரளான செங்குந்தர்களும் இதர பிரமுகர்களும் காளியம்மன்கோயிலில் தலைவர்கள் வரவை எதிர்பார்த்துக்

யையும் தற்காலச் சீர்கேட்டையும் ஒப்பிட்டு அக்குறை நீங்க சங்கங்களின் வாயிலாய்ப் பாடுபடுதல் அவசியமெனப் பேசினார். கீழ்வரும் தீர்மானமொன்று தலைவரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேறியது.

‘இம்மாபெருங்கூட்டம் சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் S முத்தையா முதலியார் அவர்கள் மதுவிலக்குப் பிரசாரத்திற்கென நான்கு லக்ஷம் ரூபாய்கள் ஒதுக்கிவைத்ததைப் பாராட்டுவதோடு அத்தொகையில் ஒரு பாகத்தை சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் செய்துவரும் மதுவிலக்குப் பிரசாரத்திற்கும் கொடுத்துதவுமாறு சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.”

புதுவருடத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டபின் தலைவரவர்கட்கும் மற்றுமுள்ளோர்கட்கும் வந்தனோபசாரங் கூறிய பிறகு சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 10-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. செங்குந்தர்கள் யாவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு கலந்துகொண்டவர்கள் தொகை 500-க்கு மேல் பட்டதாகும். தவிரவும் இம்மதுரை ஜில்லாவைச்சேர்ந்த செங்குந்தர்கள் மிகுதியும் வசிக்கும் இடங்களான சோழவந்தான், வண்டியூர், அருப்பானடி, திருப்பரங்குன்றம் முதலிய பற்கிராமங்களிலிருந்தும பல பெரியார்கள் வந்து கலந்துகொண்டதனால் இதை மதுரை ஜில்லாவின மகாநாடெனவே கூறவேணடும்.

கூட்டத்திற்கு வந்திருந்த பிரமுகர்கள் திருவாளர்கள் ச. பழனியப்ப முதலியார், S. R. சுந்தர முதலியார், வக்கீல் A. S. பழனியாண்டி முதலியார் B. A., திருநெல்வேலி, உலகநாத முதலியார், பரமக்குடி முனியப்ப முதலியார், மண்டலமாணிக்கம் ஆண்டியப்ப முதலியார சோழவந்தான் மதுரைசாமி முதலியார், குப்புசாமி முதலியார், ஆ. முத்துக்கருப்ப முதலியார், காமாக்ஷி முதலியார், சுப்பையா முதலியார், பார்த்தசாரதி நாயுடுகாரு (போலீஸ் ஆபீசர்) பரியசாமிக்கோனார் அவர்கள். கோபால் செட்டியார், ராமனுஜஞ்செட்டியார் (வியாபாரிகள்), நாராயணன் சேர்வையவர்கள், கே. வி. ராமசாமி முதலியார் B. A., மானாமதுரை.

இவ்வளவு உயரிய முறையில் நடைபெறுவதற்கு காரணபூதர்களாயிருந்த கே. வி. க்ஷேத்திரபால முதலியார், ஸோ. பழனிச்சாமி முதலியார், சொ. சங்கிலி முதலியார் இவர்களின உழைப்பு மெச்சத்தகுந்ததாகும் எனக் காரியதரிசி S. மாணிக்க முதலியார் எழுதுகிறார்.

## செங்குந்தர் சங்கம்.

### மதுரை

## முதலாம் வருட அறிக்கை

### 1928—29.

சங்கம்:—புண்ணிய பூமியாய் யாவராலும் கருதப்பெறும் நமது இந்திய நாட்டின்கண் இதுகாலை பல்வேறு வகுப்பினரும் தமது சமூகத்தின் விடுதலைக்கும், தாய் நாட்டின் விடுதலைக்கும் ஆதிகாரணமாயுள்ள ஜாதிய சங்கங்களையும் தேசிய சபைகளையும் ஸ்தாபித்து அவற்றின் மூலம் பாடுபட்டு வருதல் உலகமெல்லாம் வெளிச்சமேயாம். இதை அனுசரித்தே சிறப்பாக இத்தென்னிந்தியாவிலுள்ள சுமார் ஆறு லக்ஷம் ஜனத்தொகை கொண்ட செங்குந்த சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதியும் பொதுவாக அவ்வந்நிரனக்கு வியாபார நிமித்தம் சென்றிருக்கும் செங்குந்தர்களின் நலன் கருதியும் நமது மாகாணத்தின் தலை நகரமாகிய சென்னையம்பதியிலே பல பெரியோர்களால் “தென்னிந்திய செங்குந்தர் மகாஜனசங்கம்” என்னும் பெயரால் சென்ற 1927-ம் ஆண்டு ஜனவரியில் ஓர் சங்கம் நிறுவப்பட்டது. அச்சங்கத்தின் முக்கிய நோக்கங்களிலொன்று மாகாணம் முழுதும் செங்குந்தர்கள் வதியும் ஒவ்வோரிடங்களிலும் ‘கிளைச்சங்கங்கள் திறத்தல்’ என்னும் கொள்கையினை மேற்கூறித்த நிலைச்சங்கத்தின் அமைச்சர்களிலொருவரும் அந்நகரத்தில் வாழ்ந்திருந்த நம் சமூகம் உயர் நிலையடைதற் பொருட்டு இரவுபகலாய் உழைத்துவரும் உத்தமரும் சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் ஆங்கில போதகாசிரியருமான திருவண் ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களால் சென்ற 1928-ம் வருடம் ஜூன் மீ 6-ல் பல பெரியார்களின் ஒத்துழைப்பாலும வாலிபர்களின் நன்முயற்சியாலும் இம்மதுரைமா நகரிலேயும் கிளைச் சங்கமொன்று திறக்கப்பட்டது.

கழிந்த ஓராண்டிற்குள் இச்சங்கத்திஞசாவில் 12 கூட்டங்கள் நடைபெற்றதில் நம் குல அபிவிருத்திக்கான சொற்பொழிவுகள் பல, அறிஞர்களாலும் மாணவர்களாலும் நிகழ்த்தப்பெற்றன. வருட ஆரம்பத்தில் நம்குலப் பெரியோர்களிற் பலர் சங்கத்தின் மீது போதிய ஊக்கங் காட்டாவிடினும், பிற்பகுதியில் ஈரோட்டில் நடைபெற்ற நம் குல மாகாண மகாநாட்டின் முன்னேற்பாடுகளை பத்திரிகை வாயிலாயறிந்ததும் பல நூற்றுக் கணக்கான சுவரொட்டித் தாள்களை அச்சிட்டு விளம்பரப்படுத்தியதுடன், நிகழ்ந்த மகா நாட்டிற்கும் இச்சங்கப் பிரதிநிதிகளாக முப்பது (30) பேர்கள் வரை அனுப்பியது குறிப்பிடத் தக்கதாகும். மகாநாடு சென்று திரும்பிய பிரதிநிதிகள் யாவரும் சங்கங்களின் மூலமாகத்தான் நமது குலம் இந்நாட்டில் முன்னணியில் நிற்கவியலுமேயல்லாது பிறவற்றால் யாதும்முடியாதெனக் கண்டுகொண்டார் களாதலின் இம்மதுரைஜில்லாவில் நம்மவர் வதியும் இடங்களில் பல கிளைச் சங்கங்கள் திறக்க எண்ணினர். அவ்வாறே இம்மதுரையை யடுத்த வண்டியூரிலும், சோழவந்தானிலும் இரு சங்கங்கள் திறக்கப்பெற்றன. இன்னும் மற்ற இடங்களிலும் கிளைச்சங்கங்கள் திறக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

வாசகசாலை:—இந்த சென்ற 1928-ம் வருடம் ஜூன் மாதத்திலேயே 15-ந்தேதி யன்று, இச்சங்கத்திஞசாவில், சென்னை ஜெனரல் போஸ்டாபீச மா. அ. கனகசபை முதலியாரவர்களால் ‘செங்குந்தர் இலவச வாசகசாலை” எனப் பெயர்கொண்ட புத்தக



நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. இவ் வாசகசாலைக்கென இதுபரியந்தம் சுமார் இருநூற்றைம்பது பத்தகங்கள் வரை, வாசகசாலை நிர்வாகியான மாணவர், M. அங்குசாமி இச்சங்கத்தின் கூட்டுக் காரியதரிசிகளான திருவாளர்கள் ச. பெ. முத்தக்கருப்ப முதலியார் S. மாணிக்க முதலியார் இம்மூவர்களின் பெருமுயற்சியால் சேகரிக்கப்பட்டுள்ளன. புராணங்கள், ஆதிகாசங்கள், செங்குந்த ஜாதிய நூல்கள், நாவல்கள், தேச சரித்திரங்கள் போற் பல சிறப்பட்ட புத்தகங்கள் யாவும் வாசகசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இன்னும் பத்திரிகைகளில், தினசரிகளான தமிழ்நாடு, நவசக்தியும், வாராந்திரதங்குடியரசு, லோகோபகாரி, (தொகுதி) ஆகியவைகளும், மாசாந்திரத்தில செங்குந்த மித்திரன், ஆனந்தபோதினி, அமிர்தகுணபோதினி, ஆனந்தவிகடன் போன்ற பலவும் வரவழைக்கப்பட்டுள்ளன. இவ்வோராண்டில் நம் வாசகசாலையில் நூல்களையும் பத்திரிகைகளையும் படித்துப் பயன படுத்திக் கொண்ட அன்பர்களின தொகை 3164

வாசகசாலையில் புத்தகங்கள் வைப்பதற்கென (20) இருபது ரூ. செலவில பீரோ ஒன்று செய்து உதவிய அன்பர்களான திருவாளர்கள் . வீரப்ப முதலியார், பூ. மு. இருளாண்டி முதலியார், பி. வி. முத்துக்கருப்ப முதலியார் இவர்களின் பணவுதவியும், திருவாளர், டி எஸ். சிவலிங்க முதலியார் தம் தந்தை, வேதாந்தம் சுவாமிநாத முதலியார் அவர்களின் ஞாபகார்த்தத்தின் பொருட்டும், வாலிபர் எம். தங்கவேலு, தம் தந்தையான சோதிடப் பேராசிரியர், குகாலயம் சி. மு. முதலியாரவர்களின் ஞாபகார்த்தத்தின் பொருட்டு முறையே ரூ 30, 25ம் விலை பெறுமான புத்தகங்களைக் கொடுத்துதவியதற்கும் மற்றும் புத்தகங்கள் பலவும் கொடுத்துதவிய அபிமானிகள் யாவருக்கும் பத்திரிகைகளில், செங்குந்த மித்திரனை தம் சொந்தச் செலவில் அனுப்பிவரும் சென்னை மா. அ. கனகசபை முதலியார் அவர்கட்கும், சுதந்தரனை இலவசமாயனுப்பிய அதன் ஆசிரியரவர்கட்கும், லோகோபகாரியையும் தமிழ்நாடு தினசரியையும அரைச்சந்தாவில் கொடுத்துதவி வரும் பத்திராசிரியர்களுக்கும் இச்சங்கம் தனது முழு நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளது.

இராப்பள்ளி.—தவிரவும் தல்லாகுளம் செங்குந்த வித்யாசாலயத்தில் சென்ற சித்திரைமீ முதற்கொண்டு முக்கியமாக பகல் நேரங்களில் தொழில் புரியச் சென்று திரும்பும் நம் குல வாலிபர்கட்கும் பொதுவாக பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகட்கும் கல்வித்துறையில் அபிவிருத்தியுறுதற்பொருட்டு ஓர் இராப்பள்ளிக்கூடமொன்றும திறக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு கௌரவ ஆசிரியர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தி வரும் அன்பர்கள் சித்து மாணிக்கம் எஸ். வி. வீரப்பன இவ்விருவர்களின் குலத் தொண்டும் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய போர்டு பலகை முதலிய உபகரணங்கள் யாவும் இலவசமாக உதவும் திருவண் ஸ. பொன்னம்பல முதலியார் அவர்களின் வள்ளன்மையும் போற்றற்பாலது. இதேபோல் நம்மவர்கள் நிறைந்துள்ள, மதிச்சயம், கோரிப்பாளையம், செல்லூர், திருவாப்புடையார் கோவில், முதலிய இடங்களிலும் இராப்பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டிய ஏற்பாடுகள்செய்தல் அவசியமாகும்.

மேலும் சங்கத்திற்குப் பல சந்தர்ப்பங்களில் பண உதவி புரிந்த பெருந்தகையார்களான திரு. ச பழனியப்ப முதலியார், திரு எஸ் ஆர் எம். சுந்தர முதலியார் இவர்களின் உலாபிமானம் அளவுகடந்தது.

மேற்கூறியவாறு சிறந்த வகையில். சங்கம் அபிவிருத்தியடைந்து வாலிபர்களின் ஊக்கமே காரணமாகும் என்பது மிகையாகாது. ஆயினும் பெரியோர்கள் பலரும் உடனிருந்து உழைத்திருந்தால் நாம் எதிர்பார்த்திருந்த அளவிற்கதிகமான நன்மைகளையடைந்திருக்கலாம் என்பது மலை விளக்கு.

ஆகையால் செங்குந்த சமூகத்திலுள்ள 12 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் யாவரும் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து, கல்வி, ஆசாரம், கைத்தொழில், அரசியல் முதலிய துறைகளில் முன்னேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பன்முறையும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம் ஊழியன்,
S. மாணிக்கம்,
காரியதரிசி.

## இராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கம்
### ஸ்ரீவில்லிபுத்தூர்

19-5-29 மாலை 7-மணிக்கு ஆனந்தவிநாயகர் சந்நதியில் ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் தலைமையின் கீழ் செங்குந்தர் கூட்டம் கூடிற்று. அப்போது காஞ்சீபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் ‘நமது முற்கால தற்கால நிலைமை’ என்பது பற்றி நீண்டதோர் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். அடுத்தபடி திரு. ச. பால்வண்ணைய அவர்கள் ‘சமூக முன்னேற்றமின்றி தேச முன்னேற்ற மடையாது’ என்பது பற்றிப் பேசினார்கள். இரவு 11½-மணிக்கு வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

7-6-29 வெள்ளிக்கிழமை மாலை 7½-மணிக்கு ஆனந்த விநாயகர் ஆலயத்தில் செங்குந்தர் பொதுக் கூட்டம் ஒன்று ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் தலைமையின் கீழ்க் கூடிற்று. சுமார் 100 ஜனங்கள் வந்திருந்தார்கள். திரு முத்துசாமியால் கடவுள் வணக்கம் பாடப்பட்ட பிறகு திரு. முக்கையா அவர்கள் நல்லொழுக்கம் என்பது பற்றிப் பேசுகையில் அதை அகவொழுக்கம், புறவொழுக்கம் என இரு வகையாகப் பிரித்து புலால் மறுத்தலைப்பற்றி வற்புறுத்தியும் பேசியது கவனிக்கத் தக்கது. அடுத்தபடி திருவாளர்கள் முத்துமாயன், R. இராமசாமி, வெங்கடாசல உடையார் ஆகிய மூவரும் முறையே

## தலைச்சங்கத்திற்கு வரவு மகமை உண்டியல் வசூல்.

### சென்னை.

| | | | |
|---|---|---|---|
| திரு. தி. ச. ரா. ம. சாமசாமி முதலியார், கார்த்திகை, மார்கழி மாத வரவு | 9 | 0 | 0 |
| ,, தை ,, | 14 | 0 | 3 |
| ,, மாசி ,, | 7 | 3 | 6 |
| ,, பங்குனி ,, | 7 | 7 | 0 |
| திரு. S. K. M. காயாரோகண முதலியார் கார்த்திகை மார்கழி | 43 | 0 | 0 |
| தை மாசி | 25 | 0 | 0 |
| பங்குனி | 15 | 0 | 0 |
| திரு. மதராஸ் பனியர்காட்டுக்கம்பெனியார் கார்த்திகை மார்கழி | 108 | 12 | 0 |
| தையீ | 24 | 12 | 0 |
| மாசி | 61 | 0 | 0 |
| பங்குனி | 50 | 3 | 6 |
| சித்திரை | 63 | 0 | 0 |
| வைகாசி | 54 | 0 | 0 |

### காஞ்சிபுரம்.

| | | | |
|---|---|---|---|
| திரு. தி. அருணாசல முதலியார் மார்கழியீ | 45 | 0 | 0 |
| தை | 50 | 0 | 0 |
| மாசி பங்குனி | 70 | 0 | 0 |

### சைதாப்பேட்டை.

| | | | |
|---|---|---|---|
| பெல்டு பனியக்காட்டுக் கம்பெனியார் மார்கழி தைமாதங்கள் | 11 | 10 | 6 |
| மாசி | 4 | 12 | 3 |
| பங்குனி சித்திரை வைகாசி | 13 | 5 | 3 |
| இம்பீரியல பனியக் காட்டுக் கம்பெனியார் கார்த்திகை மார்கழி | 1 | 0 | 0 |
| தை மாசி | 1 | 0 | 0 |
| பங்குனி | 1 | 8 | 0 |
| ராயல் பனியக்காட்டுக் கம்பெனி பங்குனியீ முதல் கார்த்திகையீ வரை | 52 | 5 | 0 |
| திரு. S. இரத்தினவேலு முதலியார் மார்கழி தை மாசி பங்குனி | 6 | 9 | 8 |
| திரு. செ. ஆ. வை. கா. ளத்தி முதலியார் கார்த்திகை மார்கழி தை | 18 | 6 | 3 |
| இரேட்டு பனியக் கம்பெனியார் கார்த்திகை மார்கழி தை | 10 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| நேஷனல் பனியக்காட்டுக்கம்பெனி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி | 22 | 14 | 0 |
| திரு. உ. அரு. அருணாசல முதலியார் மாதம் ஆறுக்கு | 12 | 4 | 0 |

சிவபுரம் திரு. இராஜு முதலியார் மூலம் சிவபுரம். சேர்க்காடு கிராமங்களின் அமாவாசை தரிவரி மகமை மாசி பங்குனிக்கு வரவு ரூ. 4 8 0

### சவுத்தாப்பிரிக்கா ஜோஹேனஸ்பர்க்கில் நடந்த கலியாண நிச்சயதாம்பூல நன்கொடை

மாயவரம் தாலுக்கா காட்டுச்சேரி கிராமத்திலிருந்து வந்திருக்கும் உத்தண்டி முதலியார் குமாரர் பொன்னுசாமி முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி கௌரி அம்மைக்கு விவாக நிச்சய தாம்பூலம் மாற்றும் விழாவில் திருவாளர் உ. பொன்னுசாமி முதலியார் அவர்களால் நமது குலமுன்னேற்றங் கருதி உழைத்து வரும் செங்குந்த மித்திரனுக்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 3-8-0 (5 ஷில்லிங்) மிக்க வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டோம்.

---

### இங்கிலீஷ் பார்லிமெண்ட் சபை.

சென்ற மாதத்தில் வெகு மும்மரமாக தேர்தல்கள் நடந்தன. அவற்றில் பிரதான கட்சிக்காரரே வெற்றி பெற்றனர். இதனால் இங்கிலாந்தில் கன்சர் வேடிவ் அரசாங்கம் முடிவடைந்து லேபர் (தொழிற்கட்சி) அரசாங்கம் ஆரம்பமாகிவிட்டது. லேபர் கட்சியின் தலைவரான ராம்சே மாக்டொனல்டே பிரதம மந்திரி பதவியை பெற்றார். லேபர் மந்திரி சபையில் வெஜ்வுட்பென் இந்திய மந்திரியாகவும் டாம் மாண்ட்ரூஷீல்ஸ் உதவி மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவ்விந்திய மந்திரிகள் இந்தியாவின் நன்மைக்குப் பாடுபடுவார்கள் என்று நம்பப்படுகின்றது. அது வரைகளத்தான் தெரியும்.

# செங்குந்த மித்திரன்

## பொழுது போக்கு

சென்ற வைகாசித் திங்களின் பொழுதுபோக்கின் வெகுமானம்

முதல்பரிசு.

சொ. கோவிந்தசாமி வடக்குவீதி திருமலைராயன்பட்டணம்.—(மெடல்)

இரண்டாவது பரிசு

பெருமாள் முதலியார் காரியதரிசி செங்குந்தர் முன்னேற்றக் கழகம் மூர்த்தி பாளையம், கோயம்புத்தூர் ஜில்லா.—(திருக்குறள் புத்தகம்)

சரியான விடையளித்தவர்கள்.

1. மா. வீரப்ப முதலியார், காளிபட்டி பாளையம்.
2. கு. காளியண்ண முதலியார், குளத்துப்பாளையம் புதூர்.
3. P. V. சேஷாசலமுதலியார், புதுப்பேட்டை, சென்னை.
4. சை. தி. நடேச முதலியார், சைதாப்பேட்டை, சென்னை.

## இலக்கியக் கட்டிடம் எண் 1.

இடமிருந்து வலம்:—1. ஆண்டலைக் கொடியுயர்த்தோன், 3. செல்வி, 6. பருப்பதம், 9. மேகம், 10. இலக்கம், 11. போற்று, 13. ஆண்மை, 14. நட்சத்திரங்களில் ஒன்று, 15. கல்விடம், 18. நட்சத்திரங்களின் ஒன்று, 21. பயல், 22. நம்பின்மை, 24. நவக்கிரகங்களில் ஒன்று, 26. படைத்தலைவன் பெயர், 27. இராமாயணத்தில் ஒரு முக்கிய நகரம், 28. விருந்தோர்.



மேலிருந்து கீழ்:—1. கன்னி, 2. கல்வி, 4. [illegible], 5. விசாலம், 7. மிருதி, 8. கல்யாணம், 10. ஆறு, 12. மூன்று என் பதின் எதிர்மறை, 16. சந்திரன், 17. மூன்றில், 13. நரி, 19. கதிர்மகன், 20. பாரதி, 23. முதல் எழுத்துக்களில் ஒருபாதி, 25. பாய், 26. பயம்.

மேற்படி இலக்கியக்கட்டிடத்தைத் திருவாளர் A. இரத்தின சபாபதி முதலியார் செய்கோனிலிருந்து அனுப்பி வைத்துள்ளார். அவர் இதைச் சரியானபடி பூர்த்திசெய்து அனுப்பும் அன்பருக்கு நமது செங்குந்தர் பிரபந்தத்திரட்டை தனது சொந்தச் செலவில் அனுப்பச் சொல்லிப் பணம் அனுப்பியிருக்கிறார்.

மேற்கண்ட கட்டிடத்தைப் பூர்த்திசெய்து இரண்டணாத் தபால்தலையுடன் "செங்குந்த மித்திரன்" பொழுது போக்கு" மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், 200, தம்பு செட்டி தெரு சென்னை என்ற முகவரிக்கு ஆகஸ்டு 10-ந் தேதிக்குள் அனுப்பப்படவேண்டும்.

ஆகஸ்டு 10௳ மாலை 7 மணிக்கு விடைகள் யாவற்றையும் எடுத்துச் சரியானவற்றைப் பொருக்கி அவற்றைக் குலுக்கி முதலில் வரும் சீட்டிற்கு முதல் பரிசும், இரண்டாவதற்கு இரண்டாவது பரிசும் கொடுக்கப்படும். விடைகளின் எண்ணிக்கை அதிகப்படின் வெகுமதியின் எண்ணிக்கையும் அதிகப்படும். பொழுதுபோக்கின் மேற்பார்வையாளரின் தீர்ப்பே முடிவானதாகும். சரியான விடையளித்தவர்களுடைய பெயரும், வெகுமதிபெற்ற அன்பர்களது பெயரும் அடுத்தமாத மித்திரனில் வெளிவரும். செங்குந்த மித்திரன் காரியாலயத்தில் சம்பந்தப்பட்ட எவரும் போட்டியில் கலந்துகொள்ளலாகாது.

மானேஜர், செங்குந்த மித்திரன்.

144442

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

சுக்கிலஹு ஆடிமீ (1929ஹு ஜூலைமீ—ஆகஸ்ட்மீ) தக்ஷிணாயனம், கிரீஷ்மரிது.

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய க்ஷௌரார்த்த திதி | யோகினி. | விசேட நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | செவ் | தச 17-50 | வி 31-45 | ம 31-45 சி | 2 | 0 | சூன் | பூமி | |
| 17 | 2 | புத | ஏகா 23-20 | அ 38-58 | சி 60 | 2 | 1 | சூன் | கிழக்கு | |
| 18 | 3 | வியா | துவா 29-30 | கே 46-35 | பி 46-35 சி | 2 | 1 | துவா | வடக்கு | |
| 19 | 4 | வெ | திர 35-40 | மூ 55-3 | அ 55-3 பி | 2 | 1 | திர | தென்கி | பிரதோஷம் |
| 20 | 5 | சனி | சது 41-45 | மூ 60 | சி 60 | 2 | 1 | சது | தெமே | |
| 21 | 6 | ஞா | பௌ 47-20 | பூ 1-33 | சி 1-33 அ | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 22 | 7 | திங் | பிர 52-10 | உ 8-25 | ம 8-25 அ | 2 | 1 | பிர | மேற்கு | |
| 23 | 8 | செவ் | துதி 56-23 | தி 14-40 | சி 60 | 2 | 1 | துதி | வடமே | |
| ஜூலை 24 | 9 | புத | திரி 59-43 | அ 20-5 | பி 20-5 சி | 2 | 1 | திரி | வடகிழ | |
| 25 | 10 | வியா | சது 60 | ச 24-45 | ம 24-45 சி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 26 | 11 | வெ | சது 2-8 | பூ 28-25 | சி 60 | 2 | 1 | பஞ் | ஆகாசம் | |
| 27 | 12 | சனி | பஞ 3-28 | உ 30-53 | சி 30-53 ம | 2 | 0 | சஷ் | பூமி | |
| 28 | 13 | ஞா | சஷ் 3-28 | ரே 32-8 | அ 32-3 சி | 2 | ½ | சப் | கிழக்கு | காதுகுத்த, வித் |
| 29 | 14 | திங் | சப் 2-10 | அ 31-58 | சி 60 | 1 | ½ | அஷ் | வடக்கு | [தியாரம்பம் |
| | | | அஷ 59-25 | | | | | | | |
| 30 | 15 | செவ் | நவ 55-13 | பர 30-18 | சி 60 | 1 | ½ | நவ | தெமே | |
| 31 | 16 | புத | தச 49-28 | கி* 27-10 | அ 27-10 சி | 1 | ½ | தச | தெற்கு | கிருத்திகை |
| 1 | 17 | வியா | ஏகா 42-35 | ரோ 22-40 | ம 60 | 1 | ½ | ஏகா | மேற்கு | |
| 2 | 18 | வெ | துவா 34-40 | மி 17-3 | சி 60 | 0 | ½ | துவா | வடமே | |
| | | | | தி 10-33 | சி 60 | 0 | ½ | திர | வடகிழ | சனிப்பிரதோ |
| 3 | 19 | சனி | திர 25-58 | | | | | சது | | [ஷம் |
| 4 | 20 | ஞா | ச● 16-55 | பு 3-40 | சி 60 | 0 | ½ | அமா | ஆகாசம் | அமாவாசை |
| | | | | பூ 56-43 | | | | | | |
| ஆகஸ்ட் 5 | 21 | திங் | அமா 8-0 | ஆ 50-18 | சி 50-18 ம | 0 | 0 | பிர | பூமி | |
| | | | பிர 59-48 | | | | | | | |
| 6 | 22 | செவ் | துதி 52-25 | ம 44-40 | சி 60 | 0 | 0 | துதி | வடக்கு | |
| 7 | 23 | புத | திரி 24-23 | பூர 40-33 | அ 60 | 0 | ½ | திரி | தென்கி | ஆடிப்பூரம் |
| 8 | 24 | வியா | சது 42-15 | உ 38-8 | ம 38-8 சி | 0 | ½ | சது | தெமே | நாகசதுர்த்தி |
| 9 | 25 | வெ | பஞ் 40-3 | அ 37-43 | அ 37-43 சி | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 10 | 26 | சனி | சஷ் 40-8 | சி 39-23 | ம 39-23 அ | 1 | ½ | சஷ் | மேற்கு | சஷ்டி |
| 11 | 27 | ஞா | சப் 42-13 | ச 43-13 | சி 43-13 ம | 1 | ½ | சப் | வடமே | |
| 12 | 28 | திங் | அஷ் 46-5 | வி 48-38 | ம 48-38 சி | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 13 | 29 | செவ் | நவ 51-15 | அ 55-13 | சி 55-13 ம | 2 | ½ | நவ | ஆகாசம் | |
| 14 | 30 | புத | தச 57-18 | கே 60 | சி 60 | 2 | 0 | தச | பூமி | |
| 15 | 31 | வியா | ஏகா 60 | கே 2-45 | பி 2-45 சி | 2 | 0 | ஏகா | கிழக்கு | |

# "செங்குந்த மித்திரன்"

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் நீதிகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினாங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்பொருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த [illegible] பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூருவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் இலிட் செய்தது. விலை ரூ. 2-8-0.
தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.